SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:02, Pages:56
SEPTEMBER-2025, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

செப்டம்பர் 2025,
விலை ரூ.20/-



திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
24-09-2025 முதல் 02-10-2025 வரை



19–07–2025 அன்று மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திர பாபு நாயுடு அவர்கள் திருப்பதி, கபிலத்தீர்த்தத்தின் அருகே அருள்புரியும் ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமியைத் தரிசித்தார்.


மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஆலய அர்ச்சகர்கள் வேத ஆசிர்வசனம் செய்து, மாலை அணிவித்து, ஸ்வாமி பிரசாதங்களை வழங்கினர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தூய்மை ஆந்திரா திட்டத்தின் ஒரு பகுதியாக தூய்மைப் பணியாளர்களுடன் இணைந்து ஆலய வளாகத்தை தூய்மைப்படுத்தும் சேவையைச் செய்தபோது...

















*அவ்யக்தாதீநி பூ$_4$தாநி வ்யக்தமத்$_4$யாநி ப$_4$ாரத|*
*அவ்யக்தநித$_4$நாந்யேவ தத்ர கா பரிதே$_3$வநா||*

**அர்ஜுனா! எல்லா உயிரினங்களும் பிறப்பிற்கு முன் தென்படாதனவாக இருந்தன. மேலும், இறப்பிற்குப் பின்னும் தென்படாமலே போகக் கூடியன. நடுவில் மட்டுமே தென்படுகின்றன. பிறகு, இந்நிலையில் ஏன் வருத்தப்பட வேண்டும்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–28*

*அகில புவன ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே*
*விநத விவித பூதவ்ராத ரக்ஷைக தீக்ஷே*
*ச்ருதி சிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாசே*
*பவது மம பரஸ்மின் சேமுஷீ பக்தி ரூபா*



**உலகம் யாவையும் படைத்தளித்து அழிப்பதை விளையாட்டாக உடையவனும், விசேஷமாக வணங்கிய பலவிதமான ஜீவராசிகளைக் காப்பதையே விரதமாகக் கொண்டவனும், வேதத்தின் உச்சியில் விளங்கா நிற்பவனும், பரப்ரஹ்மமுமான ஸ்ரீநிவாசனிடம் பக்தி ரூபமான ஞானம் எனக்கு ஏற்படட்டும்.**

*– ஸ்ரீபாஷ்யம் மங்கள சுலோகம்*





## திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்
## 24-09-2025 முதல் 02-10-2025 வரை

**24-09-2025, புதன் கிழமை**
துவஜாரோஹணம், பெரிய சேஷ வாகனம்

**25-09-2025, வியாழக்கிழமை**
பகல் : சிறிய சேஷவாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**26-09-2025, வெள்ளிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**27-09-2025, சனிக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

**28-09-2025, ஞாயிற்றுக்கிழமை**
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**29-09-2025, திங்கட்கிழமை**
பகல் : ஹனுமத் வாகனம்
மாலை : தங்கத்திருத்தேர்
இரவு : யானை வாகனம்

**30-09-2025, செவ்வாய்க்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**01-10-2025, புதன் கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**02-10-2025, வியாழக்கிழமை**
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்





வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்


செப்டம்பர் 2025

மலர் 05 இதழ் 02


## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| வரம் தரும் வேங்கடத்து வராகம் - திரு. எஸ்.சுதர்சனம், நங்கைநல்லூர். | 7 |
| ஆதி புராணங்கள், ஆழ்வார்கள் காட்டும் அற்புத மலை -திரு.கி.சுப்பிரமணியன், அடையார். | 10 |
| தி.தி.தே.இணையதளம் வாயிலாக... - திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி. | 14 |
| கேரளாவில் திருவோண விழா - திருமதி ராஜலக்ஷ்மி,கேரளா. | 18 |
| வேங்கடேசகவி போற்றும் திருவேங்கடம் - காயார் கோமடம் சேஷாத்ரி தாஸன், காஞ்சிபுரம். | 20 |
| திருவேங்கடவனின் திருவருள் - திரு.மித்தே வெங்கடாசார் முரளி, சென்னை. | 23 |
| நம்மாழ்வார் விரும்பும் திருவேங்கடம் - திரு. கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 25 |
| திருமலையில் தரிசிக்க வேண்டிய இடங்கள் -திரு.வ.ஓ.சுரேஷ்,சத்ரவாடா. | 27 |
| திருமலை வனங்களைக் காப்போம் - திரு.அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 31 |
| வைணவ ஆசார்யர்களின் தொண்டு - திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை. | 35 |
| மங்கலம் தரும் நெல்லை திருவேங்கடம் - பேராசிரியர் அருணா சங்கர வேலாயுதம், திருநெல்வேலி. | 38 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருவேங்கடம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 40 |
| வேங்கடவனைக்கண்டு வணங்கும் களிறு-திரு.ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 42 |
| கான மூர்த்தியை கானத்தால் வழிபடுவோம் -திருமதி பிரேமா வரதன், புதுதில்லி. | 45 |
| ராசிபலன்கள் : செப்டம்பர் 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| நீதிக்கதை: பக்தியே முக்கியம் - திரு.சிவராமன், உள்ளகரம். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : குருவே சிறந்த வழிகாட்டி | 52 |


### வாசகர்களுக்கு...

இவ்விதழ் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய பல தொடர் கட்டுரைகள் இடம்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : திருமலையப்ப ஸ்வாமியும் வாகன சேவைகளும்

பின்னட்டை : முப்பெரும் தேவியர் (சித்திரப்படம் – திரு.பி.ரமேஷ்)


சிறப்பு ஆசிரியர் :
**திரு. J. சியாமளா ராவ்,** ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

வெளியீட்டாளர்-ஆசிரியர், பிரதான ஆசிரியர் (கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி., பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
**திரு. R.V. விஜயகுமார்,** பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
“Sapthagiri”, 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்



உங்களுடன்

# ஆயிரம் கண்கள் போதாது...

திவ்ய சக்திகளைக் கொண்டோர் தேவதா மூர்த்திகள். ஆகாயத்தில் சஞ்சரிப்பவர்கள் எனும் பெயரும் அவர்களுக்கு உண்டு. வாகனங்கள் இல்லையென்றாலும் நினைத்தவுடன் உலகம் எங்கிலும் சஞ்சரிக்கக் கூடிய தெய்வீகச் சக்தி அவர்களிடம் உண்டு. ஆனாலும் அவர்கள் அனைவருக்கும் சிறப்பு வாகனங்களும் உள்ளன. சிலை வழிபாடு, உற்சவங்கள், வாகன சேவைகள்... இவை யாவும் நாம் எளிதில் தரிசனம் செய்திடவேயாகும். தேவதா மூர்த்திகளின் குணநலன்களின் அடையாளமாகக் கொண்ட வாகனங்களின் சிறப்புகளைக் குறித்து தத்துவார்த்த கண்ணோட்டத்துடன் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மகாவிஷ்ணுவின் வாகனம் கருடன் ஆவார். கருடனை வேத ஸ்வரூபி அதாவது வேதத்தின் வடிவமாகக் கூறுவர். ஆதலால்தான் மகாவிஷ்ணுவை சுமக்கும் சக்தியை கருடன் பெற்றார். மகாவிஷ்ணுவின் வேத சக்தியே வாகனமாக கருடனின் வடிவைப் பெற்றது. அதாவது அந்தந்த தேவதா சக்தியின் வடிவமே வாகனம். அந்த வாகனமே அத்தெய்வத்தின் துவஜப் படமாகவும் விளங்குகிறது. சிவபெருமானின் வாகனம் ரிஷபம் (காளை) ஆகும். ரிஷபம் என்றாலே தர்மம் என்று பொருள். எனவே தர்மமே சிவபெருமானின் வாகனமாக விளங்குகின்றது. துர்கா தேவியின் வாகனம் சிம்மம் ஆகும். சிம்மம் வீரத்தின் சின்னமாகும். அது போன்று அனுமன் தாச பக்திக்கும், விசுவாசத்திற்கும் அடையாளமாகிறார். யானை மங்கலம் மற்றும் பெரும் பலத்திற்கு அடையாளமாகும். சேஷன் கனமானவற்றை சுமப்பதின் அடையாளமாகிறார். கற்பகவிருட்சம் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகும். சர்வ பூபால வாகனம் இறைவனின் சர்வ வல்லமையைக் குறிக்கிறது. அஸ்வம் (குதிரை) வேகத்தைக் குறிக்கின்றது. தேர் திருக்கோயிலின் வடிவினைக்கொண்டு (நடமாடும் திருக்கோயில்) பிரபஞ்சத்திற்கும், மனித வடிவத்திற்கும் அடையாளமாகத் திகழ்கிறது.

உற்சவக் காலங்களில் எந்த வாகனத்தின் மீது எந்த உற்சவ மூர்த்தி எழுந்தருளுகின்றாரோ அந்த உற்சவ மூர்த்தியைத் தரிசிப்பதன் மூலம் அந்த வாகனத்தின் குணத்தினையும், சக்தியையும் நாம் பெற்று, அவ்வெம்பெருமானை நம் இதயத்தில் எழுந்து அருளச் செய்து, நாம் வாகனமாக மாறி எம்பெருமானின் சக்தியையும் அருளையும் பெற இயலும். பேரரசர்களால் நடந்தே வர இயலும். என்றாலும் அவர்கள் வாகனங்களிலேயே வருவர். அதுதான் பேரரசர்கள் என்பதற்கான அடையாளமாகும். மேலும், இறைவனின் வாகனங்கள் தெய்வீகச் சக்தியைக் கொண்டதனால் அவை ஆகாயத்திலும் பயணிக்கின்றன.

திருவேங்கடமுடையானின் பிரம்மோற்சவத்தின் போது பல வாகன சேவைகள் நடைபெறுகின்றன. இந்த வாகன சேவைகளைத் தரிசிப்பதன் மூலம் திருவேங்கடமுடையான் அனைத்து தேவதைகளின் வடிவமாகவும், சர்வ வல்லமை படைத்தவராகவும், எங்கும் நீக்கமற நிறைந்தவராகவும், பக்தர்களின் கற்பக மரமாகவும், அருட்பெரும் கடலாகவும் விளங்குவதை காண்கிறோம். திருவேங்கடமுடையானின் பெருங்குணம் எல்லையற்றது. வார்த்தைகளுக்கும், மனதிற்கும் அப்பாற்பட்டது. ஆன்மாவுக்கு மட்டுமே ஸ்ரீநிவாசனின் பரமாத்ம தத்துவம் தெரியும். இறைவனின் வாகனங்கள் மானிடர்களைத் தூய்மைப்படுத்தி இறைவன் குடி கொண்டிருக்கும் சன்னதிக்கு அவர்களை அழைத்துச் செல்லும் ஞான வடிவங்களாகும். ஆதலால்தான் இறைவன் தமது சக்தியை வாகனங்களின் வடிவில் காட்டுகின்றார். நம் மனதினை ஈர்த்து தம் அருளினைப் பொழிகின்றார். உற்சவ வாகனங்கள் என்பவை மகிழ்ச்சி அளிப்பவை என்று பொருள் கூறலாம். ஒவ்வொரு வழிபாட்டிலும் வாகனத்தோடு இறைவனை வழிபடுவது ஒரு சிறப்பாகும்.

அனைத்து உற்சவங்களை விட மிகவும் உன்னதமானது திருவேங்கடமுடையானின் பிரம்மோற்சவம் ஆகும். ஒவ்வொரு வருடமும் இந்த உற்சவம் மிகச்சிறப்புடனும், அழகுடனும் பக்தர்களின் கண்களுக்கு விருந்தாகவும் அமைகிறது. இந்த உற்சவத்தைக் காண ஆயிரம் கண்கள் கூட போதாது. பிரம்மோற்சவத்தின் போது திருமலை மிக அழகாக மின்விளக்குகளால், மலர் தோரணங்களால் அலங்கரிக்கப்படும். தேவர்களையும், மானிடர்களையும் வரவேற்க திருமலை திருப்பதி தேவஸ்தானம் கருடக் கொடியேற்றத்துடன் விழாவைத் துவக்கும். கோவிந்த நாம சங்கீர்த்தனம், பக்தர்களின் கோலாகலம் இவற்றை யாவையும் காணும் போது திருமலையே வைகுண்டமாகக் காட்சியளிக்கும். அனைத்து தேவதைகளும் பக்தியுடன் பங்கு கொள்ளும் இப்பிரம்மோற்சவத்திற்கு அனைவரையும் வருக வருக என தேவஸ்தானம் வரவேற்கிறது.

கண்களைப் பெற்ற பலனிற்காக வேங்கடவனை தரிசிப்போம்! வாய்தனைப் பெற்ற பலனிற்காக ஸ்ரீநிவாசனை துதிப்போம்!! கால்கள் பெற்ற பலனிற்காக ஏழுமலையை ஏறிச்செல்வோம்!!!

முன்பொரு காலத்தில் பூமி காணாமல் போனது. அரக்கன் இரண்யாட்சன் பூமியை பிரளய ஜலத்தில் மூழ்கடித்தான். பூமியைக் கண்டுபிடித்து வேதங்களை மீட்டு நம்மை எல்லாம் காத்திடவே வராக அவதாரம். பூமியை நிலை நாட்டியவர், காப்பாற்றியவர் வராக மூர்த்தி.

எவ்வளவோ அவதாரங்கள் எடுத்து தர்மத்தை காப்பாற்றிய எம்பெருமான்தான் தற்போது திருவேங்கடவனாகத் திருவேங்கடத்தில் அர்ச்சா அவதார மூர்த்தியாய் வீற்று இருக்கின்றான் என்கிறார் பொய்கை ஆழ்வார். ஆதிவராக புண்ணிய க்ஷேத்திரத்தில் வந்து நித்திய வாசம் செய்யும் ஏழுமலையானின் அவதார ரகசியங்களையும், திருவிளையாடல்களையும், திருக்கல்யாண குணங்களையும் எல்லா காலத்திலும் எல்லோரும் கண்டு களிக்க நம்மையும் அழைக்கின்றார்.

இடந்தது பூமி எடுத்தது குன்றம் கடந்தது
கஞ்சனை முன் அஞ்ச கிடந்ததுவும்
நீரோத மா கடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது

–முதல் திருவந்தாதி 39

பிரம்மோற்சவம் நடக்கும் இச்சமயம் வேதம் வல்லார்களைக் கொண்டு வின்னூர் பெருமான் திருப்பாதம் பணிந்து, ஆழ்வார்கள் அருளிச்செய்த 4000 திவ்யப் பிரபந்தம் சேவித்து, தூபதீபங்களையும், புனிதத் தீர்த்தங்களையும், தூய மலர்களையும் கொண்டு தோத்திரம் செய்யும் பெரியோர்கள் பல திசையில் இருந்தும் ஆதிவராகத் திருத்தலமாம் திருமலையில் கூடி ஏழுமலையானை கோவிந்தனை வணங்கும் இடமே திருமகள் கேள்வன் திருவேங்கடவன் வாழும் திருவேங்கடம்.

நீ அன்று உலகளந்தாய், நீண்ட
திருமாலே!
நீ அன்று உலகு இடந்தால் என்பவரால்

–இரண்டாம் திரு. 30

என்று பாடுகிறார் பூதத்தாழ்வார். வாமனனை முதல் வரியில் புகழ்ந்தார். ஊழி வெள்ளத்தில் மூழ்கி பாசி தூர்த்து கிடந்த பார் மகளை, பூமி பிராட்டியைக் காத்திட மா வராகமாய் அவதரித்து மூக்கின் நுனியில் வைத்துக் காப்பாற்றி பூமியை நிலை நாட்டிய வராகனைப் பார்த்து புகழ்கிறார்.

''வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு'' – இரண்டாம் திரு. 53.

இயற்கை வளம் நிறைந்து, அருவிகள் பாய்ந்தோடும் மலை திருவேங்கடம் நாம் ஆசைப்பட்ட திருமலை என்கிறார். திருவேங்கடம் அடை நெஞ்சமே என்று உபதேசம் செய்யும் திருமங்கை ஆழ்வார் ''இடவெந்தை மேவிய எம்பிரான்'' (பெரிய திருமொழி 1.8.4) என்று நித்திய கல்யாண பெருமாளான லட்சுமி வராகனை நினைக்கிறார்.

வராகனையும் திருவேங்கடவனையும் ஒன்றாகவே நினைப்பது மங்கலங்களை அளிக்கும் என்பது உறுதியாகிறது. திருமங்கை ஆழ்வார் வராகப் பெருமானின் அவதார மகிமையை நமக்கு உணர்த்துகிறார். திருமலைக்கு முதலில்



வருகை தந்தவன் வராகன் என்றும், பின்பு வரம் தரும் திருவேங்கடவன் வராகப் பெருமானின் அனுமதி பெற்று திருமலையில் வந்து தங்கினான் என்றும் பாடுகிறார்.

*''சிலம்பு முதல் கலன் அணிந்தோர் செங்கண் குன்றம்*
*திகழ்ந்ததெனத்திரு உருவம் பன்றியாகி*
*இலங்கு புவி மடந்தை தனை இடந்து புல்கி*
*ஏற்றிடை வைத்தருளிய எம் ஈசன் கான்மின்''*

– பெரிய திருமொழி 7.8.4.

வராகப் பெருமான் தனக்கே ஆன திருமலையில் சிறிது நிலத்தை திருவேங்கடவனுக்கு அளந்து கொடுத்தான். அதுமட்டுமா தன்னிடம் பணிவிடை செய்து வந்த வகுல மாலை என்னும் தெய்வ நங்கையை திருவேங்கடவனுக்குப் பணிவிடை செய்திட அனுப்பி வைத்தார். இல்லை யசோதையே திருவேங்கடவனின் திருமணத்தைக் கண்டு களிக்க கலியுகத்தில் அவதரித்தாள். கொல்லை இன்பத்தின் இறுதி கண்ட யசோதை, கண்ணனின் திருமணத்தைக் கண்டு களிக்காத யசோதை பத்மாவதித் தாயாருக்கும் திருமலையானுக்கும் நடக்கும் திருக்கல்யாணத்தைக் கண்டு மகிழ வகுல மாலையாக வந்து சேர்கிறாள்.

*''கலௌ வேங்கட நாயக''* என்ற சிறப்பு பெயருடன் பத்மாவதித் தாயாரை மணந்து திருமலை மேல் நித்தியவாசம் செய்கின்றான் திருமலையப்பன். எல்லா திவ்ய தேசங்களும் போற்றுதலுக்கு உரியன. திருவேங்கடம் தனி சிறப்புடன் ஒப்பற்ற புண்ணிய தலமாக விளங்குகிறது.

*''வெற்பு என்று வேங்கடம் பாடினேன் வீடு*
*ஆக்கி நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்''*

– நான்முகன் திருவந்தாதி 40

என்று பாடுகிறார் திருமழிசையாழ்வார். பரம பதம் பெற வழி வகுக்கும் திவ்ய தேசம் திருவேங்கடம் என்கிறார். *''பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே''* என்று திருமலையின் பெருமை பாடுகின்றார் நம்மாழ்வார்.

*''சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை*
*நின்று வினை கெடுக்கும் நீர்மையால்...''*

– நான்முகன் திருவந்தாதி 42

என்று உபதேசம் செய்கிறார் திருமழிசை ஆழ்வார். நான்முகனும் பரமசிவனும் தாமரை மலர்களை ஏழுமலையான் திருவடியில் இட்டு வணங்குகின்றார்கள் என்கிறார்.

திருவேங்கடவன் முழுமுதற் கடவுள், பரம்பொருள் என்னும் உண்மையை உணர்த்தும் அழகே அழகு. திருமலையைச் சூழ்ந்துள்ள ஏழு மலைகளின் நடுவே நடு நாயகனாக ஸ்ரீநிவாசன் நித்திய வாசம் செய்கின்றான் என்றும், முதல் மரியாதை வராகனுக்கே. பக்தர்கள் சுவாமி புஷ்கரிணிக் கரையில் வீற்றிருக்கும் வராகனை வழிபட்ட பிறகு வேங்கடவனை வழிபடுவர். இங்கே உள்ள புண்ணியத் தீர்த்தங்களில்

## பாரம்பரியமான உடைகளை அணிவோம்! திருமலையின் புனிதத்தைக் காப்போம்!!

**இந்து சனாதன முறைப்படி எந்த தெய்வ நிகழ்ச்சிகளிலும் நாம் பாரம்பரியமான உடைகளை அணிதல் வேண்டும். குறிப்பாக ஆலயங்களுக்குச் செல்லும்போது நாம் நம் பண்பாட்டின்படி பாரம்பரியமான ஆடைகளையே உடுத்திச் செல்லுதல் வேண்டும். அவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களை நம் இந்து கலாசாரத்தின்படி பாரம்பரியமான ஆடைகளையே அணிந்து வர வலியுறுத்துகின்றது.**



**ஆண்கள் வேஷ்டி, மேல்துண்டு, சட்டை, குர்தா, பைஜாமா போன்ற வற்றை அணிதல் வேண்டும். பெண்கள் புடவை, இரவிக்கை, துப்பட்டாவுடன் கூடிய சுடிதார், சிறுமிகள் பாவாடை சட்டை போன்றவற்றையே அணிந்து வருதல் வேண்டும்.**

**முக்கியமாக ஆர்ஜித சேவை, சிறப்பு நுழைவு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கட்டாயம் இம்முறையினைக் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் குடும்ப வழக்கப் படி நெற்றியில் திலகமும் அணிதல் வேண்டும்.**

சேஷாசல சுவாமி தீர்த்தம் என்னும் வராக தீர்த்தம் முதன்மை பெறுகிறது.

ஆயிரம் கட்டி வராகன் என்று தான் பெரியோர்கள் ஆசிர்வாதம் செய்கின்றனர். இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் தங்கள் நாணயத்தில் வராக மூர்த்தியைப் பொரித்து வைத்தனரோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. கல்வெட்டுகள் ஆராயத் தகுந்தன. அகஸ்தியர், வாயு பகவான், கபிலர், சுகமாமுனி என்று பல முனிவர்கள் தவம் இயற்றிய மலை திருமலை. திருமலை ஒரு பக்தி திருத்தலம். முக்தி தரும் திருத்தலம். பல புண்ணிய தீர்த்தங்கள் கூடும் இடம்.

- திரு.எஸ்.சுதர்சனம், நங்கைநல்லூர்,
9962788065

## உபமாகா ஸ்ரீ லக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்



உபமாகா திருத்தலம் விசாகப்பட்டிணம் மாவட்டத்தில் நக்கபள்ளி வட்டத்தில் உள்ளது. இங்கே எழுந்தருளிய ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி மிகவும் சிறப்பு வாய்ந்தவர். ஸ்வாமியை தலைமுறை தலைமுறையாக எத்தனையோ பக்தர்கள் பலவிதங்களில் தரிசித்தார்கள். இந்த ஆலயத்தில் பாஞ்சராத்ர ஆகமப்படி ஸ்வாமிக்கு பூஜைகள், வருடாந்திர கல்யாண உத்ஸவம் (ஐந்து நாட்கள்), பிரம்மோத்ஸவம், அத்யயனோத்ஸவம், திருக்கல்யாணம், ஆழ்வார்கள் திருநட்சத்திரங்கள், ஸ்ரீராமரின் அத்யயனோத்ஸவம், வைகாச சுத்த ஏகாதசி நாளில் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி வருடாந்திர கல்யாண உத்ஸவம், தனுர் சங்கரமணம் மற்றும் பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் அந்தந்த சமயங்களில் புண்ணிய கோட்டி வாகனம், பொன் வாகனம், பித்தளையாலான கருட வாகனம், அரக்கினாலான கருட வாகனம், ராஜாதி ராஜ வாகனம், சப்பரம், ஹம்ச வாகனம், குதிரை வாகனம், யானை வாகனம், பெரிய பல்லக்கு, சிறிய பல்லக்கு போன்ற வாகன சேவையில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி தனித்தும், உபய நாச்சிமார்களுடனும் கிராம திருவீதிகளில் வலம் வந்து அருள் புரிகின்றார். தினந்தோறும் வடக்கு வாயில் வழியாகச் சென்று தரிசனம் செய்வது இந்த ஆலயத்தின் சிறப்பாகும். இந்த மலை கருட வடிவில் அமைந்துள்ளதால் “கருடாத்திரி” என்ற சிறப்பு பெற்றது. குழந்தையில்லாதவர்கள், ஸ்வாமிக்கு அபிஷேகம் நடைபெறும்போது வழங்கும் பஞ்சாம்ருதத்தைப் பிரசாதமாக அருந்தினால் குழந்தை பாக்கியம் நிச்சயம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. 2015 ஆம் ஆண்டு முதல் திருமலை திருப்பதி தேவஸ்தான மேலாண்மையின் கீழ் கொண்டு வந்த பின்னர் இவ்வாலயத்தில் உற்சவங்களோடு பூஜைகளும் நன்முறையில் நடைபெற்று வருகின்றது.

### பிரம்மோத்ஸவ நிகழ்ச்சி நிரல்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 23-09-2025 | செவ்வாய் | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 24-09-2025 | புதன் | வைரகவச ஆபரணத்துடன் தங்கத்திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம். | பெரிய சேஷ வாகனம் |
| 25-09-2025 | வியாழன் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 26-09-2025 | வெள்ளி | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 27-09-2025 | சனி | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 28-09-2025 | ஞாயிறு | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 29-09-2025 | திங்கள் | ஹனுமத் வாகனம்,மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 30-09-2025 | செவ்வாய் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 01-10-2025 | புதன் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 02-10-2025 | வியாழன் | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம் | திருச்சி உத்ஸவம், துவஜாவரோஹணம் |

# ஆதி புராணங்கள், ஆழ்வார்கள் காட்டும் அற்புதமலை

நாடி வருகின்ற பக்தர்களுக்கு மங்காத ஞான அறிவை வழங்கி, நீங்காத பெருமை கொண்டதும், மோட்சத்தை அளித்து, புண்ணியம் தரும் மலையாகவும் கம்பீரமாக நிற்பது ஏழுமலை. இது ஓர் வழிபாட்டுத் தலமாக மட்டுமில்லாமல், மக்கள் வாழ்வோடு இணைந்து விளங்குவ தால், பக்தர்கள் தம் மனதில் உள்ள பாரத்தை இறக்கி வைத்து, மனதும் உடலும் லேசாக நிம்மதி பெற்று மகிழ்கின்றனர்.

ஆந்திர மாநிலம் வெள்ளி கொண்டா மலைத்தொடரில் சேஷாத்ரீ, நீலாத்ரீ, அஞ்சனாத்ரீ, கருடாத்ரீ, நாராயணாத்ரீ, விருஷபாத்ரீ, வேங்கடாத்ரீ என ஏழு மலைச் சிகரங்கள் உள்ளன. கடல் மட்டத்திலிருந்து சுமார் 3200 அடி உயரத்தில் அமைந்துள்ள வேங்கடாத்ரீ சிகரத்தில்தான் ஏழுமலையான் கோயில் அமைந்துள்ளது.




“விஷ்ணு என்றாலே அனைத்திலும் இருப்பவன்” எனப் பொருள் சொல்வார் சுவாமி விவேகானந்தர். சுமார் 1180 கல்வெட்டுகளுக்கு மேல் உள்ள இத்தலம் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்களில் மிக முக்கிய மானதாகத் திகழ்கிறது. வேதங்கள் அனைத்தும் பெருமாளை மலை உருவில் வழிபடுவதால் “வேதாத்ரீ”, “வேதகிரி” எனவும் அழைக்கப்படுகிறது.

“வேம்” என்றால் பாவங்கள், “கட” என்றால் “எரித்தல்” என்று பொருள். ரிக்வேதத்தில், திருவேங்கடமும், எம்பெருமான் ஸ்ரீநிவாசனும் வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். ஆலயங்கள், வீடுகள் என எல்லா இடங்களிலும், எல்லா காலங்களிலும், எல்லோராலும், தொழப்படும் திருவுருவம் “அர்ச்சாவதாரம்” என்பர். பூர்த்தியையும் ஸ்வாதந்திர்யத்தையும் குறைத்துக்கொண்டு, தன்னை ஆராதிக் கிறவர்களை, தான் ஆதரித்து நிற்கின்ற இடமே அர்ச்சாவதாரம் என வைணவ ஆசார்யரான பிள்ளை உலகாரியர் அருளிச் செய்துள்ளார். கலியுக வைகுந்தமான இதைக் காணுவதற்கு 10000 கண்கள் வேண்டும் என, தன்னை உணர்ந்து, பகவானையும் உணர்ந்து, ***“வெங்கடேச, நின்னு சேவிம்பனு பதிவேயி கண்ணுல காவலேனு”*** எனக் கூறி மகிழ்வார் தியாகராஜ ஸ்வாமிகள்.

திருமலை, திருப்பதி, திருச்சானூர் ஆலய கல்வெட்டுகளை ஆய்வு செய்த திரு. மஹந்த் என்பவர், அவைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, திருவேங்கடமுடையான் பெருமையை ஆங்கிலேய அரசாங்கம், பல நாட்டு மக்கள் அறிந்து கொள்ளும்படியான அருஞ்செயல் புரிந்தார். அதை“எபிகிராபிகல் ரிப்போர்ட்” என அழைத்தனர். இதற்குப் பேருதவியாக இருந்தவர், ஆராய்ச்சியாளர் திரு. சாது. சுப்ரமண்ய சாஸ்த்ரிகள்.

திருப்பதி ஏழுமலையானை,கீழ் திருப்பதியில் இருந்து, நடந்து, மலையேறி, தரிசிக்கச் செல்லும் போது “பிரம்மதேவன்

முதலான தேவர்கள், எந்த வேங்கட மலையை வணக்கத்துடன் வந்தடைந்து சேவிக்கின்றனரோ, அப்படிப்பட்ட தங்கமயமான, அளவு கடந்த புண்ணியம் உள்ளதும், சர்வ தேவர்களால் வணங்கப்பட்டதுமான, ஸ்ரீநிவாசனுக்கு இருப்பிடமான, பருவதமே... என் கால்களால் தங்கள் மீது ஏறுகிறேன். அதனால் உண்டாகும் பாவங்களை தாங்கள் கருணையினால் பொறுத்துக் கொள்ள வேண்டும். தங்களின் சிகரத்தில் வசிக்கும் லட்சுமிபதியான வேங்கடவனை, தாங்கள் எனக்கு தரிசனம் செய்து வைக்க வேண்டும் என்று பொருள்பட ***''ஸ்வர்ணாசல மஹாபுண்ய...''*** எனத் தொடங்கி ***''மாதவம் தர்ஸயஸ்வமே''*** என முடியும் சுலோகத்தைச் சொல்லியபடி நடப்பார்கள்.

பவிஷ்யோத்தர புராணம் திருப்பதிக்கு, யுகக்கிரமமாக ரிஷபாசலம், அஞ்ஜனாசலம், சேஷாசலம், வேங்கடாசலம் என நான்கு பெயர்கள் வந்ததாகச் சொல்லும். வராஹ புராணமோ, மேலும் 14 பெயர்கள் எப்படி வந்தது எனும் காரண காரியத்தோடு விளக்குகின்றது. அதன்படி ஞான அம்பிகை, சிந்தாமணி, தீர்த்தாசலம், புஷ்கராத்ரி, நாராயணாத்ரி போன்றவை அவற்றில் சில. திருமாலின் நாமத்தை காதால் கேட்பவர் வைகுண்ட வழியை அடைவார். சொல்பவரோ எமதர்மன் கையில் சிக்கார், இவர்களே, தனது மூதாதையர், சந்ததியினரை கரை சேர்ப்பர்.

ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்தோத்திரங்களின் வழக்கமான பலச்ருதிகளைப் போல லௌகீக பலன்களைக் கூறாமல், கோவிந்தனை வணங்கினால் கிடைக்கும் ஞானத்தைப் பலனாகக் கூறுகிறார், இது பொருள் அறிந்து "கோவிந்தாஷ்டகம்" படிப்பதனால் ஏற்பட்ட பலன்கள் இப்படி பாராயணம் செய்பவர்கள் கோவிந்தனின் "கமலத்தியானம்" எனும் அமுத நீரால் பாவமனைத்தும் நீங்கப் பெறுவர்.

திருவேங்கடவன் நாமம் ஒன்றே போதும், சகல பாவங்களும் தீரும் என்பார், ஸ்ரீஸ்ரீநிவாசனின் சுபாவத்தை அழகுடன் வர்ணித்து மங்கல கீதம் பாடிய விஜயதாசர்.

பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதியில், எம்பெருமான், ஸ்ரீமந்நாராயணனை மட்டுமே மனதில் உறுதியாகக் கொள்வாயாக எனும் பொருள்பட ***''மாயவனையே மனத்து வை''*** என்கிறார். மேலும், ***''வினைச் சுடரை நந்து விக்கும் வேங்கடமே வானோர் மனச்சுடரைத் தூண்டும் மலை''*** என நித்திய சூரிகளின் மனமாகிய விளக்கைத் தூண்டி ஒளிரச் செய்யும் மலையிது என்கிறார்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் என்றாலே நம் அனைவரின் நினைவில் முதலில் வந்து நிற்பவர் திருவேங்கடமுடையானே. திருமலையில் நித்தமும் ஏதோ ஒரு உத்ஸவம் நடைபெற்று வருகின்றன. நித்ய உத்ஸவம், வாரோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாதோத்ஸவம், வருடோத்ஸவம் என திருமலையில் என்றும் உற்சவங்களே. இந்த உத்ஸவங்களுக்கெல்லாம் மணிமகுடமே பிரம்மோத்ஸவமாகும். பிரம்மம் என்றால் பெரியது. அதிக நாட்கள் நடைபெறும் உத்ஸவமாதலால் பிரம்ம உத்ஸவம் எனலாம். வேதமும் எம்பெருமானை "நாராயணப் பரபிரம்மம் நாராயண பர" என்று பிரம்மமாகவே கூறுகின்றது. நான்முகன் எம்பெருமானுக்கு நடத்திய உத்ஸவமாதலால் பிரம்மோத்ஸவம் எனலாம். திருமலையில் பிரம்மோத்ஸவத்தில் பிரம்ம ரதமும் வாகன சேவைகளுக்கு முன்பாகச் செல்வதையும் காணலாம். திருவேங்கடமுடையான் புரட்டாசி மாதம் திருவோண நன்னாளில் அவதரித்ததால், திருவோணத் திருவிழா என ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் பாடியுள்ளனர். பெரியாழ்வாரும், "விடுத்த திசைக் கருமம் திருத்தித் திருவோணத் திருவிழவில்" (திருப்–9) என்று பாசுரமிடுகிறார்.



# ஸப்தகிரி வாசன்



மகிமை மிகுந்தது ஏழுமலை
மாலவன் நிற்பது ஏழுமலை

மன இருள் அகற்றிடும் ஏழுமலை
கருணைக் காட்டிடும் ஏழுமலை

காண்போர் மகிழும் ஏழுமலை
கண்ணபிரான் வாழும் ஏழுமலை

துன்பங்கள் வாழும் ஏழுமலை
துணை நின்று காத்திடும் ஏழுமலை

உள்ளம் நிறைந்திடும் ஏழுமலை
ஊழ்வினை மாற்றிடும் ஏழுமலை

சங்கடம் போக்கிடும் ஏழுமலை
சாரங்கன் குடிகொண்ட ஏழுமலை

செல்வங்கள் குடிகொண்டஏழுமலை
சிறப்புகள் சேர்த்திடும் ஏழுமலை

வல்வினை கழைந்திடும் ஏழுமலை
நல்வாழ்வு அருளிடும் ஏழுமலை

நினைத்தாலே இனிக்கும் ஏழுமலை
நெஞ்சமெல்லாம் நிறைந்த ஏழுமலை

கவலையெல்லாம் தீர்க்கும் ஏழுமலை
எழில் திருக்காட்சி கொண்ட ஏழுமலை

உடற்பிணி விலக்கிடும் ஏழுமலை
உலகளந்தான் இருக்கும் ஏழுமலை

வயிரார உணவளிக்கும் ஏழுமலை
வந்தடி பணிவாரை வாழவைக்கும் ஏழுமலை

ஏழுமலை இறைவன் வெங்கடேசப் பெருமாள்
பாருலகம் உள்ளவரை பரிந்தருள் புரிவான்

பாடுவோம் கூடுவோம் அவன்சன்னிதானத்தில்
கோவிந்த நாமம் கூறி
கும்பிட்டு பணிவோம்!

**திரு.இ. செல்வராஜ், வள்ளியூர்,**
**9360607652**

*''நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே''* என்பது ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரம். *''வேங்கட மா மலை ஒன்றுமே தொழ, நம் வினை ஓயுமே''* என இம் மலையைத் தொழ, நமது வினைகள் ஓய்ந்து, புண்ணிய ஆத்மாவாக மாறுவாய் என அறுதியிட்டு சொல்வார். எம்பெருமானே மோட்சம் அளிப்பவன்; அவன் அனைத்தையும் அறிந்தவன்; அனைத்து சக்திகளையும் உடையவன்; அடியார்களின் விரோதிகளை அழிப்பவன் என்றெல்லாம் திருவேங்கடமுடையானின் கருணையின் பெருமைகளை சுவாமி தேசிகன் பாடுவார். ஸ்ரீ பாதராயரின் கீர்த்தனை *''வைகுண்ட திந்திலி பந்து! ஈ ... சேஷாசல தலி நிந்து''* எனும் பாடலில் சூரியக் கதிர்களின் ஒளியாகப் பிரகாசிப்பவரிவர். வைகுண்டத்திலிருந்து வந்து இந்த சேஷாசல மலையில் நிற்கும் திருவேங்கடவன் கமலநயன சக்கரவர்த்தி எனப் புகழ் மாலைச் சூட்டி மகிழ்வார்.

*''வேதப்பொருளே! வேங்கடவா வித்தகனே!''* எனக் கொண்டாடி மகிழ்வார் பெரியாழ்வார். கிருஷ்ணரை நினைக்கும் போது வேங்கடவனையும் மனதில் நிறுத்தும் பண்பு இவருக்குண்டு, *''நீள் திருவேங்கடத்து எந்தாய்! பச்சைத்தமனத் தோடு பாதிரிப்பூச் சூட்ட வாராய்''* என்பார். அழகு, ஆனந்தம், அமைதி எல்லாமே பகவான் திருவடி தரிசனம். எவ்வளவு சோதனைகள் கொடுத்தாலும் மீண்டும் மீண்டும் உன்னிடமே வருவேன் என பகவானிடம் வேண்டுவார் குலசேகர ஆழ்வார். எவ்வித சோதனையிலும் கலங்காத ஒப்பற்ற பக்தியின் வெளிப்பாடிது.

*''விண்ணார் நீள் சிகர விரையார் திருவேங்கடவா!, அண்ணா, வந்தடைந் தேன் அடியேனை ஆட்கொண்டருளே''* எனத் தமக்கு முன் தமது நெஞ்சம் அங்கே சென்றுவிட்டதை உணர்ந்து மகிழ்வுடன் கூறுவார் திருமங்கையாழ்வார்.

*''வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்! நந்தாத கொழுந் சுடரே! எங்கள் நம்பீ சிந்தாமணியே திருவேங்கடம் மேய, எந்தாய் இனி யான் உன்னை என்றும் விடேனே''* என திருவேங்கடப் பதிகத்தில் பாடி மகிழ்கிறார்.

**திருமலை மலைப்பாதையில் 7-வது மைல் :**

மலையிலிருந்து இறங்கும் மலை வழிப்பாதையும், நடைபாதையும் கூடும் இடம் இது. இவ்விடத்தில் பிரசன்ன ஆஞ்சநேய சுவாமி விக்ரகம் பிரம்மாண்டமாகக் காட்சியளிக்கின்றது. அதற்கடுத்து புதிய மண்டபம், பழைய மண்டபம், கோலக் கிணறு... கோலக்கிணறு மேல் பகுதியின் பக்கத்தில் ஸ்ரீதாச ஆஞ்சநேய சுவாமி கோயில் கொண்டு உள்ளார். இது ஹதிராம்ஜீ மடத்தின் கீழ் உள்ள கோயில்.

மலை ஏறும்போது ஓய்வு எடுக்க விரும்புவோர் பதஞ்சலி வன ஓய்வு நிலையத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டுச் செல்லலாம். லக்ஷ்மி நரசிம்மாலயம் சாளுவ நரசிம்மபதி காலத்தில் கட்டப்பட்டதாகும். கர்ப்ப கிரகத்திற்குப் பின்புறத்தில் சிவப்பு சந்தன வடிவில் யோக நரசிம்ம சுவாமி காட்சியளிப்பது சிறப்பு.

லக்ஷ்மி நரசிம்மர் ஆலயம் கடந்து கீழே இறங்கி சில படிகளைக் கடந்தால் முதல் மலைப்பாதை காட்சியளிக்கும். 1944ல் இந்த மலைப்பாதை கடினமான முயற்சியின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. மலைப் பாதைக்கு பக்கத்தில் இருக்கும் பழைய நடைப்படிகளுக்கு "அன்னமய்யா மார்க்கம்" என்று பெயர் வைத்து புதுப்பித்தனர். ஆனால் பக்தர்கள் அதற்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்காமல் மலைப் பாதையின் வழியாகவே நடந்துச் செல்கின்றனர்.



அவ்வாசாரி கோனை என்னும் பசுமை நிறைந்த பகுதியாக உள்ள அந்த வழியில் அக்கைமார்கள் என்னும் சிறு கோயில் உள்ளது. அக்கைமார்கள் ஏழு செங்கல் வடிவில் வழிபடப்பட்டு வருகிறார்கள். முன்பு அவ்வாசாரிகோனை கீழ் இறங்கி மேலே ஏற வேண்டிய நிலை இருந்தது. இப்பொழுது அந்த நிலை இல்லை.

"நான் ஓணப்பெருவிழா காண திருமலைக்குச் சென்றேன், ஆனால், திருமலை அப்பன், என்னுடைய உள்ளத்தில் வந்து நின்று விட்டான்" என்பதாக, *"காணல் உறுகின்றேன் கல்லருவி முத்துதிர, ஓண விழவில் ஒலி அதிர- பேணி வரு வேங்கடவா! என் உள்ளம் புகுந்தாய் திருவேங்கடம் அதனைச் சென்று"* என நயம்படப் பாடுகிறார் திருமழிசை ஆழ்வார். ஸ்ரீவாதிராஜர், பலமுறை திருமலைக்கு வந்து தரிசித்து, சாலி கிராமத்தால் தயாரிக்கப்பட்ட மாலையை பகவானுக்கு சமர்ப்பித்தவர். அவர் "இவ்வுலகத்தைக் காண்பதற்காகவே, ஜஹத்ரக்ஷகனான, திருவேங்கடத்தான், உயர்ந்த மலையில் நின்று, அனைத்து திசைகளிலும் உள்ள, தன் பக்தர்களைக் காக்கின்றார்" என அறுதியிட்டுக் கூறுவார்.

*"பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொல்லி நின்று பின்னரும்... தேசமாய்த் திகழும் மலைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* என்கிறது பெரிய திருமொழி. "ஓம் நமோ நாராயண" எனும் எட்டெழுத்து மந்திரத்தை ஆசாரியன் வழியே உபதேசிக்கப்பட்டு, அதை உச்சாடனம் செய்ய, அதன் தாத்பரியங்களை உணரும் ஆத்மாவிற்கு வைகுந்த பதவி அளிக்கவல்ல, கருணையே வடிவான, எம்பெருமான், உலகம் அனைத்திற்கும் திலகம் போன்றவன். நறுமணம் கமழும் மலர்ச்சோலைகள் சூழ்ந்த திருவேங்கட மலையில் சேவை தந்தருள்கிறான். எனவே, இக்கலியுகத்தில், பக்தியோடு, பகவான் திருவேங்கடவனான காக்கும் கடவுளின் திருப்பாதங்களைச் சரண் அடைந்து, நற்கதி அடைய வேண்டுவோம்.

**திரு. கி. சுப்பிரமணியன்,**
**அடையார், 9941007453**



# தி.தி.தே. இணைய தளம் வாயிலாக...

*– திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.*

இந்த நவீன உலகமானது இயந்திர யுகமாக மாறிக்கொண்டே வருகின்றது. நாம் ஆன்மீகத்தில் எத்தனை நாட்டம் கொண்டிருந்தாலும் இந்த நவீன யுகத்துடன் அனுசரித்து சென்றால்தான் இறைவனின் தரிசனத்தையும் எளிதில் பெற இயலும்.

நவீன யுகத்திற்கு ஏற்றாற்போல் தி.தி. தேவஸ்தானமும் தன் பங்கிற்கு பலவிதமான முயற்சிகள் செய்து பக்தர்கள் எளிய முறையில் திருவேங்கடமுடையானைத் தரிசிக்க வழிவகைகள் செய்து கொண்டே வருகிறது.

முன்பெல்லாம் திருமலை தரிசனம் என்றால் கரடு முரடான பாதையில் நாட்கணக்கில் சென்று, மணிக்கணக்கில் வரிசையில் நின்று தரிசனம் என்ற நிலை இருந்தது. ஆனால், தற்பொழுது நாம் எந்த தரிசனமாக இருந்தாலும் முதலில் திட்டமிட்டு, ஸ்வாமி தரிசனத்திற்காக நேரம் ஒதுக்கி, முன்பதிவு செய்து கொண்டு எளிய முறையில் விரைவில் தரிசிக்க இயலுகிறது.

தற்போது ஒவ்வொரு மாதமும் 18ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரையிலான சமயத்தில் இணையதளம் வாயிலாக தரிசன டிக்கெட்டுகளை நாம் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

தி.தி.தே.இணையதள சேவை (ஆன்லைன் சர்வீஸ்) வாயிலாக ஸ்வாமி தரிசனத்திற்கு நாம் முன்பதிவு செய்து கொள்ளலாம். ஆர்ஜித சேவைகள், அங்கப்ரதக்ஷணம், மூத்தக்குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தரிசனம், ஸ்ரீஸ்ரீநிவாச திவ்ய அனுக்ரஹ ஹோமம், தங்குவசதி, சிறப்பு நுழைவு தரிசனம் , சிறப்பு நுழைவு தரிசனம் (தாயார் சன்னதி), மெய்நிகர் பங்கேற்பு (வர்சுவல் பார்ட்டிசிபேஷன்), இ–டிப் சேவை (இணைய தள வாயிலாக குலுக்கல் முறை), ஸ்வாமி மற்றும் தாயாருக்கான இ–உண்டியல், எஸ்.வி. பிராணதான அறக்கட்டளை, நன்கொடை மற்றும் உதய அஸ்தமன சேவை, நன்கொடையாளர்களுக்கான சலுகைகள், ஸ்ரீவாணி அறக்கட்டளை மற்றும் பிற நன்கொடைகள், கல்யாண வேதிகா, கல்யாண மண்டபம், பஞ்சகவ்ய பொருட்கள், தி.தி.தே. கோயில்கள் என பல சேவைகள் உள்ளன.

இங்கு ஒரு சில சேவைகளைப் பார்ப்போம்.

### அங்கப்ரதக்ஷணம் :

புஷ்கரணியில் குளித்து ஈர ஆடையுடன் திருமலை ஆலய உட்பிராகாரத்தை உருண்டு சுற்றுவதே அங்கப்ரதக்ஷணம் என்பர். மூன்று மாதங்களுக்கு முன்னர் தி.தி.தே. இணையதளம்

வாயிலாக நாம் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒரு டிக்கெட்டில் இருவர் பதிவு செய்து கொள்ளலாம். வெளியூர்/உள்ளூர் பக்தர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் தங்களுக்கு தேவையான நாட்களில் முன்பதிவு செய்து கொண்டு அங்கப் பிரதக்ஷணம் செய்யலாம். உள்ளூர் பக்தர்களுக்காக வியாழக்கிழமை பதிவுச் செய்து கொண்டு சனிக்கிழமை அன்று அங்கப்ரதக்ஷணம் செய்யவும் வழிவகை செய்துள்ளது.

**ஸ்ரீவாரி சேவை (தன்னார்வத் தொண்டு):**

திருமலையில் அல்லது தி.தி.தே. கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஆலயங்களில் தன்னார்வத் தொண்டு புரிவதேயாகும். திருமலையில் எண்ணற்ற இடங்கள் உள்ளன. எங்கு வேண்டுமானாலும் நாம் சேவை செய்யலாம். அதே சேவையை ஆலயத்திலும், ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களுக்கு செய்வதென்றால் சும்மாவா? அதன் பலன்கள் எண்ணில் அடங்கா.

நவநீத சேவை, பரக்காமணி (நாணயங்கள் கணக்கீடு) சேவை போன்ற சேவைகளையும் செய்யலாம். நாம் வசிக்கும் பகுதியில் ஒரு குழுவாக ஏற்பட்டு இம்மாதிரி ஸ்ரீவாரி சேவைகள் செய்வதற்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.

**இ-குலுக்கல் :**

சுப்ரபாதம், தோமாலை, அர்ச்சனை, அஷ்டதள பாத பத்மாராதனை போன்ற ஆர்ஜித சேவைகள் இ-குலுக்கல் மூலம் நாம் நம் ஆதார் அட்டை வாயிலாக

## ஊடக சேவையில் தி.தி.தே...










உலகம் முழுவதிலிருந்து பக்தர்கள் பலர் திருமலைக்கு தங்களால் வர இயலவில்லையே எனும் மனக்குறை இல்லாமல் திருமலையப்ப ஸ்வாமியே நமது இல்லத்திற்கு வந்து அருள் புரிகின்றார். திருமலையப்ப ஸ்வாமிக்கு திருமலையில் நடக்கும் நிகழ்ச்சிகளை நேரலையாக காணும் வாய்ப்பினை தி.தி.தே.வின் எஸ்.வி.பி.சி. சேனல் நமக்கு அளிக்கிறது. மாநிலவாரியாக தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி என நான்கு மொழிகளில் தனித்தனியாக நிகழ்ச்சிகளை நம்மை பிரமிக்க வைக்கும் விதத்தில் ஒளிபரப்புகிறது.

மேலும், நாம் பயணத்தில் இருக்கும் போதும் கோவிந்தனின் நினைவுடன் இருப்பதற்கு எஸ்.வி.பி.சி. வானொலி வாயிலாக பலவிதமான நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி வருகிறது. பிரம்மோத்ஸவத்தின் போது திருமலைக்குச் செல்ல முடியவில்லையே எனும் நம் வருத்தத்தினைப் போக்கிடும் வகையில் நம் இல்லங்களிலிருந்தே தரிசித்திடும் வகையில் திருமலையில் நடைபெறுகின்ற வாகன சேவைகளையும் நேரடியாக ஒளிபரப்புகின்றது.

சனாதன கலாச்சாரத்தின் ஒரு அங்கமான இசை, நடனம், நாட்டியம், நாடகம், சமயக் கருப்பொருள்கள் அடங்கிய தொடர்கள், நமது திருத்தலம் என்ற வரிசையில் இதர ஆலயங்களின் விவரங்கள் போன்றவற்றோடு தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளையும் நேரலையாகவோ, தொகுப்பு நிகழ்ச்சிகளாகவோ காட்சியமைத்து ஒளிபரப்பி வருகிறது.



முன்பதிவு செய்து கொள்ளலாம். அவ்வாறு முன்பதிவு செய்தவர்கள் இ–குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டால் அவர்களுக்கு ஒரு குறுஞ் செய்தி (எஸ்.எம்.எஸ்.) அனுப்பப்படுகிறது. அந்த குறுஞ்செய்தியை வரப் பெற்றவர்கள் தரிசனத்திற் கான கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நாளில் தரிசனம் செய்து கொள்ளலாம்.

### மூத்தக்குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தரிசனம் :

மூத்தக்குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கும் தி.தி.தே. தரிசனப்பாக்கியத்தை அளித்து வருகின்றது. தமது ஆதார் அட்டையைப் பயன் படுத்தி தம் வாழ்க்கைதுணையோடு திருவேங்கட முடையானின் தரிசனத்தைப் பெறலாம். மாற்றுத் திறனாளிகள் மற்றும் நாள்பட்ட நோயாளிகள் தங்களின் தகுந்த மருத்துவச் சான்றிதழை ஆதார மாகக் காண்பித்து டிக்கெட்டுகளை இணைய தளம் வாயிலாகப் பெற்று தரிசனம் செய்யலாம்.

### இ-உண்டியல் :

நாம் நம் காணிக்கைகளை உண்டியலில் சேர்ப் பது என்பது ஆலயத் தரிசனத்தில் முதன்மையான ஒன்றாகும். அதை தி.தி.தே. எளிமையாக்கும் விதத்தில் இ–உண்டியல் ஏற்படுத்தியுள்ளதால் நாம் இறைவனுக்கு காணிக்கைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணிய மறுவினாடியே சமர்ப்பிக்கலாம். ஸ்வாமிக்கு, தாயாருக்கு எனத் தனித்தனியே கூட இ–உண்டியல் வாயிலாக நாம் காணிக்கை செலுத்தும் விதமாக தி.தி.தே. அமைத்துள்ளது.

### ஸ்ரீஸ்ரீநிவாச திவ்ய அனுகிரஹ ஹோமம் :

ஸ்ரீஸ்ரீநிவாச திவ்ய அனுகிரஹ ஹோமத்திற்கான டிக்கெட்டுகள் இணைய தளம் வாயிலாக வழங்கப் படுகிறது. அதைப் பெற்ற பக்தர்கள் காலை 8.30



**இணையதளத்தில்**
**ஸ்பதகிரி**
**மற்றும்**
**புத்தக பதிப்புகள்**



**இணையத்தள முகவரி :**
https://ebooks.tirumala.org

திருமழிசை ஆழ்வார் “சென்று வணங்குமினே சேணுயர் வேங்கடத்தை” என்று பாசுரமிடுகிறார். அதாவது நெடிது ஓங்கி உயர்ந்த வேங்கடமலையைச் சென்று வணங்கிடுங்கள் என்று கூறி அந்த வேங்கடவனைத் தரிசிக்க முற்படுகிறார். அந்த வேங்கடவனோ அவரின் உள்ளத்திலே புகுந்து தரிசனமளித்தாராம். இதன் மூலம் பக்தியோடு வணங்கினால் அவனே நம் இல்லம் தேடி வந்து தரிசனமளித்திடுவான் என்பதை அறிய முடிகிறது. அவ்வகையில்தான் திருவேங்கடமுடையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரி மாத இதழின் வாயிலாக திருவேங்கடமுடையான் நம் இல்லம் தேடி வந்து எழுத்து வடிவில் நமக்கு தரிசனமளித்துக் கொண்டிருக்கிறான். அந்த அக்ஷரப் பிரசாதத்தை இணையதளத்திலும் கூட பதிவிறக்கம் செய்து படித்து தரிசிக்கலாம்.

ஸப்தகிரி மட்டுமின்றி தி.தி.தே. பல ஆன்மீகப் புத்தகங்களை தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் எனப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் பதிப்பித்து வெளியிடும் புத்தகங்களையும் நாம் இந்த இணையதளத்தில் படித்து மகிழலாம்.

மணிக்கு அலிபிரி அருகில் நடைபெறும் ஹோமத்தில் பங்கு பெற்று ஸ்ரீஸ்ரீநிவாசரின் அனுகிரஹம் பெற்று, பின்னர் சிறப்பு நுழைவு மூலம் திருவேங்கடவனைத் தரிசிக்கலாம்.

அனைத்து தரிசன டிக்கெட்டுகளும் (சிறப்பு நுழைவு தரிசனம், ஸ்ரீவாணி அறக்கட்டளை மற்றும் நன்கொடையாளர்கள் ஒதுக்கீட்டு தரிசனம் போன்ற தரிசனங்கள்), அறை ஒதுக்கீடு போன்றவைகளையும் பெறலாம். மெய்நிகர் பங்கேற்பு தரிசனத்தில் (கல்யாணோத்ஸவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோத்ஸவம் மற்றும் சஹஸ்ர தீபலங்கார சேவை) டிக்கெட் பதிவு செய்து கொண்டு, அந்த சேவை நடைபெற்ற பின்னர் ஒரு மாதத்திற்குள் நாம் திருவேங்கடவனின் தரிசனத்திற்குச் செல்லலாம்.

இந்து கலாச்சாரத்தை ஒட்டிய விழாக்களுக்கு கல்யாண மண்டபம் கூட இந்த இணையதளத்தின் வாயிலாக முன்பதிவு செய்து கொள்ளலாம். மாநிலம், மாவட்டம், மாவட்டத்தில் குறிப்பிட்ட இடம் அதில் குறிப்பாக எந்த கல்யாண மண்டபம் என்ற விவரங்களுடன் எத்தனை நாட்களுக்கு, எந்த நாளிலிருந்து எந்த நாள் வரைக்கும் மண்டபம் தேவைப்படுகிறது என்கிற விவரங்களையும் நிரப்பி மண்டபத்தை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

கல்யாண வேதிகா (கல்யாண மேடை) வாயிலாக 18 வயது நிறைந்த இந்துக்கள் இதை உபயோகித்து தங்கள் மணவாழ்க்கையை இனிதே ஆரம்பிக்கலாம். அதற்கான படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்த பின்னர் எல்லோருக்கும் பொதுவான ஒரு கல்யாண தேதி குறித்து அனுப்பப்படும். தி.தி.தே. அறிவித்த நாள் மற்றும் நேரத்தில் திருமணம் நடைபெறும். திருமணத்திற்குப் பின்னர் கல்யாணம் செய்து கொண்ட மணமகள், மணமகன் அவர்கள் தரப்பில் பெற்றோர் அல்லது காப்பாளர் மொத்தம் ஆறு நபர்களுக்கு தரிசனம் அளிக்கப்படும்.

இங்கு ஒரு சில இணையதள சேவைகளைக் குறித்து தெரிந்துக் கொண்டோம். இவற்றைப் போன்றே பல சேவைகளில் தி.தி.தே. இயந்திர நடைப் பயணத்தை தொடர்கிறது.

இத்தனை வசதிகளையும் நாம் கணினி உதவியால் பெறவேண்டுமே நம் வீட்டில் கணினி இல்லையே என்ற வருத்தம் நமக்கு வேண்டாம். நாம் கையடக்க கைபேசி வாயிலாக கூட முன்பதிவுச் செய்து கொள்ளலாம். தி.தி.தேவஸ்தானம்ஸ் ஆப் என்ற செயலியை அறிமுகப்படுத்தியது அனைவரும் அறிந்த விஷயமே. அதன் மூலம் மேற்கூறிய அனைத்து வசதிகளையும் நாம் பெறலாம்.

## ஒரே க்ளிக்கில் தரிசனம் டிக்கெட்




**தி.தி.தேவஸ்தானத்தின் TTDEVASTHANAMS என்கிற டிஜிட்டல் வடிவிலான மொபைல் செயலியின் வாயிலாக பக்தர்கள் திருமலையில் ஸ்ரீவாரி தரிசனம், சேவைகள், அங்கப்ரதக்ஷணம், ஸ்ரீவாரி சேவை, தங்குமிடம் போன்றவற்றை முன்பதிவு செய்யலாம். நன்கொடைகளும் செலுத்திடலாம். மேலும் தி.தி.தே. தகவல்கள், புத்தகங்கள், உற்பத்தி பொருட்கள், தேவஸ்தானத்திற்குட்பட்ட இதர ஆலயங்கள் குறித்தும் பக்தர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.**

**புஷ் நோட்டிபிகேஷன் மூலம் திருமலை ஆலயத்தில் நடைபெறும் உற்சவ விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். மேலும், எஸ்.வி.பி.சி. சேனல் வாயிலாக நேரடி ஒளிபரப்புகளையும் காண இயலும். கணினி பயன்படுத்தத் தெரியாதவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.**

**இந்த மொபைல் செயலியால் கையடக்க கைபேசியின் வழியாக திருவேங்கடமுடையானை கண நேரத்தில் காணும் பாக்கியத்தைப் பெறலாம்.**

**கைபேசி செயலியைப் பயன்படுத்தி கோவிந்தனை தரிசிப்போம்!**

# கேரளாவில் திருவோண விழா

"திருவோணம்" மஹாவிஷ்ணு–வாமனன், திருவேங்கடமுடையானின் திருநட்சத்திரமாகும். "பாத்ரபத" அல்லது மலையாள மாதம் சிம்ம (ஆகஸ்ட்–செப்டம்பர்) மாதத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இது, கேரளாவில் வைணவத் திருக்கோயில் களில் மிக கோலாகல மாகக் கொண் டாடப்படும்.

கேரளாவில் மஹாபலி சக்கரவர்த்தி பாதாள லோகத்திலிருந்து இந்த நாளில் பூலோகத்திற்கு வந்து தன் மக்களுக்கு ஆசி அருளுகிறார் என்பது ஐதீகம். ஒரு அரசர் வருகின்றார் என்றால் எவ்வாறு வரவேற்க வேண்டும் என்பதை இப் பண்டிகை காண்பிக்கும்.

வீட்டை மெழுகி, வட்ட பூக்கோலம் இட்டு, விளக்குகள் ஏற்றி, பலவிதமான கனிகளை பகவானுக்குப் படைத்து, ஆடிப்பாடி வரவேற்கிறார்கள். அன்று சமைக்கும் விருந்து ஸத்யா எனப்படும். இருபதிற்கும் மேற்பட்ட சைவ உணவு வகைகளைச் சமைத்து உண்பார்கள். திருவாதிரை களி, ஓணப்பாட்டு, புலிக் களி, கதகளி, மோகினியாட்டம், செண்டை போன்ற பல கலை நிகழ்ச்சி கள் நடக்கும். படகுப்போட்டி, ஊஞ்சல் விளையாடுவது, உறி அடி, இழுபறி போன்ற பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் நடைபெறும். பாரம்பரிய வீட்டில் உறவினர்களோடு மகிழ்ந்து ஓணம் கொண்டாடுவர். ஓணத்திற்கு முந்தைய நாள் "உத்திராடம் பாய்ச்சல்" என்று கூறுவர். உத்திராடம் நட்சத்திரத்தில் புதிய ஆடை (ஓணக் கொடி) என்று பல பொருட்கள் வாங்குவார்கள்.

கேரளா மக்கள், இந்த நந்நாளையொட்டி எல்லோரும், தலைநீராடி, வெண்ணிற கசவு (பட்டு) சேலை அல்லது முண்டு நேரியல் என்ற பாரம்பரிய உடை அணிந்து, ஆண்கள் முண்டு (வேஷ்டி) அணிந்து, நெற்றியில் சந்தன பொட்டு இட்டு ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது வழக்கம். அவ்வாறு பிரசித்தி பெற்ற சில ஆலயங்களை நாம் கேரளாவில் தரிசிக்கலாம்.

வீட்டில் அல்லது கோயிலில் "ஓணத்தப்பன்" என்று மூன்று வடிவில் ஒரு கல் சிலையை கோபுரம் போல் வைத்து தெய்வமாக வழிபடுவது தொன்றுதொட்டு வருகிறது. திருக்காட்கரை திவ்ய தேசத்தில் வாமன மூர்த்தியாய் பகவான் காட்சி அளிப்பதால், இங்கு ஓணம் பண்டிகை உற்சவம் கொடியேற்றத்துடன் (அஸ்தம் நட்சத்திரம்) துவங்கும். இக்கோயிலில் பகவானை சந்தனத்தால் அலங்காரம் செய்து, பூச்சாத்தி, பட்டுடுத்தி, நகைகள் அணிவித்து 10 நாட்களில் 10 அவதார அலங்காரங்களில் அலங்கரிப்பர். இதே போல் பல வைணவ ஆலயங்களிலும் செய்வது உண்டு.

இந்த 10 நாட்களிலும் பகவான் யானை மேல் அல்லது வாகனத்தில் எழுந்தருள்வார். இதனை "சீவிலி" என்று கூறுவது உண்டு, "ஸ்ரீ பலி" என்றும் அழைக்கலாம். இது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். யானைகள் அழகாக அலங்காரம் செய்யப்பட்டு, அதில் பகவானை எழுந்தருளச்செய்து, அதற்கு மேல் வெண்கொற்றக் குடை பிடித்து, சாமரம் வீசி, மேள தாளங்களைக் காணும் போது "வாரணம் ஆயிரம்" பாசுரம் சேவை சாதிப்பது போன்று காட்சியாய் தோன்றும்.

கோயில்களிலும் சத்திய சாப்பாடு போடப்படும். மூன்று வகையான பாயசம், பால், பருப்பு, பலா பழம், மாம்பழம், அட



திருமதி
ராஜலக்ஷ்மி,
கேரளா,
9946128102



பிரதமன் போன்ற சிறப்பு பாயசம் சாதிப்பார்கள். கொச்சியில் நடந்தால் கொச்சி மகாராஜா பங்கேற்பார். திருவனந்தபுரத்தில், திருவான்கூர் மகாராஜா பங்கேற்பார். சில கோயில்களில், காவலர்கள், ராணுவ வீரர்கள் போன்ற அரசு மரியாதை பகவானுக்கு சமர்ப்பிப்பார்கள். மாலையில், கோயிலைச் சுற்றி விளக்கேற்றி வழிபடுவர். லக்ஷதீபங்களில் பகவானின் தரிசனம் மிக ரம்யமாகத் தோன்றும். இன்றும், கேரளா கோயில்களில் மின் விளக்குகள் குறைவு. எண்ணெய் மற்றும் நெய் விளக்குகளே அதிகம்.

“திரு ஆரன்மூலா” திவ்ய தேசத்தில் இருக்கும் பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் “பள்ளியோடம்”, “வள்ளம்களி” என்று படகு போட்டி நடைபெறும், அதில் “வஞ்சிப்பாட்டு” என்று பாடலுடன் மிக உற்சாகமாக பம்பை நதிக்கரையில் நடைபெறும். இக்கோயிலில் ஒரு பக்தன் பாகவதனுக்காக “திருவோணத்தோனி” என்று ஒரு சிறப்பு விருந்து படைக்கப்படும். அந்நிகழ்வு படகில் நடைபெறும். இது பகவானே வந்து உண்டதாக ஐதீகம். இன்றும், திருவோணத்தில் அந்த நிகழ்வு நடக்கிறது.

குருவாயூரில், “நிர்மால்ய தர்சனம்”, காலை சுப்ரபாதம் சேவை மிக விசேஷம். குருவாயூரப்பனுக்கு “ஓணபுடவ” என்ற பட்டாடை மற்றும் ஓண விருந்து சிறப்பானது. குருவாயூர் கோயிலின் முன்பாக மிகப் பிரம்மாண்டமான “அத்திபூக்களம்” என்று பூக்களால் கோலம் வரைவார்கள். “காழ்ச்ச குல சமர்பணம்” என்று எல்லோரும் தம் தோட்டத்தில் அல்லது வீட்டில் வளர்ந்த வாழைப் பழத்தினை கோயில் யானைக்கு கொடுப்பது வழக்கம். குருவாயூர் யானைக்கு கொடுப்பது ஒரு நேர்த்தியாகவே உள்ளது. இரவில், “பொன்னும் சீவேலி”யில் குருவாயூரப்பன் ஸ்ரீ பத்மநாபஸ்வாமியாக அருள்பாலிக்கிறார்.

கேரளாவின் தலைநகரமான திருவனந்தபுரத்தில் ஸ்ரீபத்மநாப ஸ்வாமி ஆலயத்தில் “ஓண வில்” சமர்ப்பிப்பது சிறப்பு. மரத்தில் வில் வடிவத்தில் அழகாக சிவப்பு வர்ணத்தால் விஷ்ணுவின் வடிவம் அல்லது அவதாரத்தை சித்திரம் வடிவில் மிகத் துல்லியமாக வரைந்திருப்பார்கள். இந்த வில், அனந்தபத்மநாப ஸ்வாமிக்கு சமர்ப்பித்து, அதை, நாமும் பெற்றுக்கொள்ளலாம். “திருவோணம்” அனந்த பத்ம நாப ஸ்வாமி நட்சத்திரம் ஆகும். இங்கு சிறப்பு “சீவேலி” கோயில் ப்ராகாரத்தில் நடைபெறும்.

ஸ்ரீ பூர்ணத்ரயீச கோயிலில் “மூசாரி உற்சவம்” ஓணத்தன்று கொண்டாடப்படும். இங்கு மஹாவிஷ்ணு “சந்தானகோபாலர்” என்று அழைக்கப்படுகிறார். இந்த விக்ரஹத்தை வடிவமைத்த சிற்பிக்கு மரியாதை செலுத்துவதற்காக இந்த உற்சவம். பூக்களால், சிறப்பு வழிபாடு செய்து கொண்டாடுவது வித்தியாசமானது. பகவானின் வடிவத்தை சிற்பி மிகவும் ஆழ்ந்த பக்தி பாவனையோடு, தன் குழந்தை போல் பகவானின் விக்ரஹத்தில் ஈடுபட்டு வாரி அணைத்து கொண்டு செய்ததை சிறப்பிக்க, இந்த ஓணத்தன்று இந்தக் கொண்டாட்டம்.

இவ்வாறு, பல திருத் தலங்களில் ஓணம் பண்டிகை, மிக அழகாக, கோலாகலமாக, வித்தி யாசமாக, பெருமிதமாக பாரம்பரியம் மாறாமல் நன்றி செலுத்துவதற்காக பகவானின் அருள் பெறுவதற்காகக் கொண்டாடப்படுவதை நாம் இன்றும் காணலாம். ஓணம் முடிந்த பிறகு (ஓண ஆகோஷம்) என்று பல வித மான கலை, தெருக்கூத்து, மாறு வேடத்தில், நீண்ட வரிசையாக முக்கிய இடத்தில் கூடி ஆடிப்பாடி மகிழ்வார்கள். அத்துடன், ஓணம் பண்டிகை முடிவடையும்.

சிலர், ஓணத்தன்று நாராயணீயம், ஞானபானம், ஸ்ரீமத் பாகவதம், கீத கோவிந்தம் போன்ற சுலோகங்களை வாசிப்பது வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த உலகத்தை காக்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான மஹாவிஷ்ணு ஸ்ரீநிவாசனுக்கு உரிய திருவோணம் நட்சத்திரத்தின் சிறப்பு வழிபாட்டை நாமும் செய்து அவன் அருளைப் பெறுவோம்.



# வேங்கடேசகவி போற்றும் திருவேங்கடம்

பக்தி நெறியில் திளைத்த ஆழ்வார் பெருமக்கள் மட்டுமின்றி, ஸ்ரீமத்ராமாநுஜர் உள்ளிட்ட ஆசாரியப் பெருமக்களும் அர்ச்சாவதார மூர்த்திகளிடம் உளமார்ந்த ஈடுபாடு காட்டினர்.

இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்த அர்ச்சாவதார மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுள் திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கும் திருமலை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

*வேங்கடாத்ரி ஸமம் ஸ்தானம் ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சன*
*வேங்கடேச ஸமோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி*

என்ற முன்னோர்களின் வாக்கு முக்காலும் உண்மையாகும்.

ஸ்ரீமந்நாராயணன் படைத்தருளிய பிரம்மாண்டமான இந்தப் பிரபஞ்சத்தில், திருவேங்கடமலைக்கு இணையான புனிதத்தலம் வேறு எதுவும் கிடையாது. அதே போன்று, இத்திருவேங்கடமலையில் எழுந்தருளி இருந்து அருள்பாலிக்கும் நம் திருவேங்கடமுடையானுக்கு நிகரான தெய்வம் இதற்குமுன்பு அவதரித்ததும் இல்லை. இனி அவதரிக்கப் போவதுமில்லை! என்பது மேற்கண்ட சுலோகத்தின் எளிய பொருளாகும்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த திருவேங்கடமலையின் புனிதத்தையும், திருவேங்கடமுடையானின் பெருமைகளையும் ஆழ்வார் பெருமக்களும், அன்னமய்யா போன்ற அருளாளர்களும், ஏன் ஆசாரிய மகாபுருஷர்களும் கூடப் பாடி மகிழ்ந்திருக்கின்றனர்.

திருவேங்கடமுடையானின் கருணை என்னும் பெருங்குணத்தினை தயாசதகம் என்ற ஸ்தோத்திரத்தை வழங்கியுள்ள வேதாந்த தேசிகன் அதிகார சங்கிரகம் என்ற தம்முடைய பிரபந்தத்தில் ஸ்ரீரங்கம், திருமலை, காஞ்சீபுரம் ஆகிய பெருமை வாய்ந்த திவ்யதேசங்களைப் பற்றிய பாசுரங்களை அழகுற வழங்கியுள்ளார்.

இப்பாசுரங்களுள், திருமலையைப் பற்றிய அற்புதமானப் பாசுரத்தை இங்கே அநுபவிப்போம்.

*கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு;*
*கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு;*
*திண்ணம் இது வீடு என்னத் திகழும் வெற்பு;*
*தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு;*
*புண்ணியத்தின் புகல் இது எனப் புகழும் வெற்பு;*
*பொன்னுலகின் போகம் எலாம் புணர்க்கும் வெற்பு;*
*விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு;*
*வேங்கட வெற்பு என விளங்கும் வேத வெற்பே*

எண்சீர் விருத்தமாக அமைந்த இவ் வருமையான பாசுரத்தில் ஆங்காங்கே திருமலையைக் குறிக்கும் வெற்பு என்ற



காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன்,
காஞ்சிபுரம், 9486139685

புனிதச் சொல்லினைப் பொன்னில் வைரங்களைப் பதித்தாற் போன்று பதித்து அழகும் மெருகும் ஏற்றிச் சமர்ப்பித்திருப்பதைக் காணலாம்.

வாருங்கள் வேதாந்த தேசிகரின் அழகிய பாசுரத்தின் வழியே நம் திருவேங்கடவனின் திருமலையின் பெருமைகளை இங்கே அநுபவிப்போம்

## கண்ணன் அடி இணை எமக்குக் காட்டும் வெற்பு

திருப்பதி திருமலையானது எம்பெருமான் திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசமாகத் திகழ்கின்றது. இப் பெருமானை இத்திருத்தலத்திற்கே உரித்தான ஸ்ரீநிவாசன் என்றோ, திருவேங்கடவன் என்றோ வேதாந்த தேசிகர் குறிப்பிடாமல், கண்ணன் என்று குறிப்பிடுவதற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்க வேண்டுமே? நிச்சயம் இருக்கின்றது.

ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் எம்பெருமானுடன் ஒட்டிக்கொண்ட திருநாமம் கோவிந்தன் என்பது ஆகும்.

ஆண்டாள் நாச்சியாரும், இருபத்தேழாவது மற்றும் இருபத்தெட்டாவது பாசுரங்களில் *"கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா!"* என்றும் *"குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா!"* என்றெல்லாம் அழைக்கின்றாள்.

இந்நிலையில், இப்பூவுலகில் இருக்கும் திவ்யதேசம் அனைத்தையும் விட புனிதமான நம் திருமலையில் மட்டும்தான் லட்சோபலட்சம் பக்தர்கள் அநுதினமும் இடைவிடாமல் "கோவிந்தா!, கோவிந்தா!!" என்று இப்பெருமானை அழைத்த படியே இருக்கின்றனர். வேதாந்ததேசிகரும் அந்த துவாபர யுகத்துக் கண்ணனாகிய கோவிந்தனின் மறு உருவமாகவே இத்திருவேங்கடமுடையானைக் கண்டுள்ளார். எனவேதான் இப்பாசுரத்தின் முதல் வரியிலேயே "கண்ணன் அடி இணை" என்ற பதப்பிரயோகம் செய்திருக்கின்றார்.

## கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு

நாமெல்லாம் பிறந்திருக்கும் இந்தப் பூவுலகம் கர்மபூமி என்று அழைக்கப்படுகின்றது.


ஆம். எண்ணற்ற பிறவிகளை ஏற்கெனவே எடுத்தபின்பும், மீண்டும் இன்னொரு முறை நாம் இந்தக் கர்ம பூமியில் பிறந்து உள்ளோம் எனில் அதற்கு நாம் செய்துள்ள வினைகளே காரணம். பிராரப்தம், சஞ்சிதம் என்னும் அந்த இரண்டு விதமான கர்ம வினைகளைக் களைந்தால்தான் நமக்கு மோட்சம் கிடைக்கும்.

இவற்றுள் பிராரப்தம் என்பவை ஏற்கெனவே பலன் தரத் தொடங்கிய வினைத் தொகுதியாகும். சஞ்சிதம் என்பது இன்னும் பலன் கொடுக்கத் தொடங்காமல், இப்பிறவியில் வேறொரு தருணத்திலோ அல்லது அடுத்துவரும் பிறவிகளிலோ பலன் கொடுக்கக் காத்திருக்கும் வினைகளின் தொகுதியாகும்.

## குறுக்கெழுத்துப்புதிர் 110க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ரா | மா | நு | ஜ | பு | ஷ் | க | ர | ணி | | | |
| ல் | மா | ரு | பெ | ப் | ஜ | ரா | த | ந் | 2 வி | 3 கோ | |
| 4 ப | ங் | கா | ரு | வா | க் | கி | ல் | ர் | மா | ர் | ம் |
| த் | 5 ப | த் | து | ஆ | ழ் | வா | ர் | வா | ன | ய | ண |
| மா | ச் | ம் | வ | ஸ | த் | தோ | 6 ர | ழ் | வே | ஜீ | ச |
| வ | சை | ய | | | த | ஜி | ர் | 7 ஆ | ங் | ய | ட் |
| தி | க் | லை | து | ஸ் | ம | ண | யா | ல் | 8 க | ரி | த |
| த் | க | 9 நி | வா | ச | ர் | | | யி | டே | பெ | ர |
| தா | ற் | வ | | | தா | ந் | வி | 10 கோ | ஸ் | ஸ்ரீ | பி |
| யா | பூ | த | ரா | வ | ஸ் | டே | க | ங் | வெ | 11 ஸ்ரீ | க |
| ர் | ர | 12 மா | | மி | வா | சு | க | ரா | வ | 13 ஸ்ரீ | ங் |
| | ம் | ட | ட் | தோ | ர் | வா | ழ் | தா | ந் | ன | 14 அ |

## தி.தி.தே. கியோஸிக் இயந்திரம்






திருமலையில் ஸ்வாமி லட்டு பிரசாதத்தைக் கூடுதலாக பெறுவதற்கு தி.தி.தே. புதுமையான முயற்சியாக லட்டு கௌண்ட்டர்களில், யு.பி.ஐ. வசதியுடன் கூடிய க்யோஸிக் இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த இயந்திரத்தின் வாயிலாக கூடுதல் லட்டு டோக்கன்களை பக்தர்கள் பெறலாம். தி.தி.தே.வின் இந்த நவீனமயமாக்கும் நடைமுறையில் பக்தர்கள் நீண்ட நேரம் க்யூ வரிசைகளில் காத்திருக்காமல் எளிதில் விரைவாக கூடுதல் லட்டு டோக்கன்களைப் பெற முடியும்.

இந்த இயந்திரம் வாயிலாக பக்தர்கள் தரிசன டோக்கன் அல்லது ஆதார் எண்ணை பதிவு செய்து யு.பி.ஐ. பயன்படுத்தி கூடுதலாக இரண்டு லட்டுகளுக்கு பணம் செலுத்த வேண்டும்.



பணம் செலுத்திய பிறகு, கூடுதல் லட்டுகளைப் பெறுவதற்கான ரசீது ஒன்று வழங்கப்படும். அந்த ரசீதைப் பெற்று கொண்டு லட்டு கௌண்ட்டரில் கூடுதலாக இரண்டு லட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



திருமலையில் உள்ள மாத்ருஸ்ரீ தரிகொண்டா வெங்கமாம்பா அன்னப்பிரசாத வளாகத்திலும் கியோஸிக் இயந்திரங்கள் இயங்கி வருகின்றன. இந்த இயந்திரத்தை யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா தி.தி.தேவஸ்தானத்திற்கு நன்கொடையாக வழங்கியது. இந்த கியோஸிக் இயந்திரம் மூலம், பக்தர்கள் க்யூ ஆர். (QR) குறியீட்டை ஸ்கேன் செய்து யு.பி.ஐ. முறையில் பணம் செலுத்துவதன் மூலம் எளிதாக நன்கொடை அளிக்க வழிவகையும் செய்யப்பட்டுள்ளன. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் கீழ் உள்ள சில ஆலயங்களிலும் இந்த க்யோஸிக் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. நன்கொடை அளிக்க விரும்பும் பக்தர்கள் இந்த இயந்திரங்களின் வாயிலாகவும் நன்கொடையைச் செலுத்திடலாம்.



புதராக மண்டிய செடிகளைப்போன்று அடர்ந்து படர்ந்து கிடக்கும் நமது வல்வினைகளாகிய பிராரப்தம், சஞ்சிதம் ஆகிய இரண்டையும் அழித்து நமது பிறவித்துயரையும் களைந்து முக்தி அளிக்கக் கூடியவனாகிய திருமலையப்பனை நோக்கி, ***"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே, நெடியானே, வேங்கடவா!"*** என்று பாடினார் குலசேகராழ்வார்.

அப்படிப்பட்ட திருவேங்கடவன் எழுந்தருளி இருக்கின்ற திருமலையையே, ***"கடுவினையர் இருவினைகள் கடியும் வெற்பு"*** என்று வேதாந்த தேசிகனும் போற்றிக் கொண்டாடுகின்றார்.

### திண்ணம் இது வீடென்னத் திகழும் வெற்பு

ஸ்ரீவைஷ்ணவர்களைப் பொறுத்த வரையில் வீடுபேறு என்பது ஸ்ரீவைகுண்டப் பிராப்தியே ஆகும். வைகுண்டலோகத்தில் இருப்பவர்களுக்கு எல்லையற்ற பேரானந்த அநுபவம் ஏற்படுவது போன்று, திருமலையில் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையானின் திருக்கோயில் அமைப்பும், மூலவ – உத்ஸவ மூர்த்திகளின் திவ்யாலங்கார சேவையும் வழங்கிடும்.

அதுமட்டுமில்லாமல், பிரம்ம உத்ஸவக் கொண்டாட்டங்கள், இரத சப்தமி வாகன வரிசை, புன்னமி (பௌர்ணமி) கருட சேவை, கண்ணுக்கு விருந்தாகும் தெப்போத்ஸவம், சஹஸ்ர தீபாலங்கரண சேவை ஆகியவையும் நம் அனைவரையும் பேரின்பத்தில் திளைக்க வைப்பதன் காரணமாக, உண்மையில் இத்திருமலையே வைகுண்ட உலகமாகத் திகழ்கின்றது என்று பாடியுள்ளார் வேதாந்த தேசிகன்.

தொடர்ந்து தரிசிப்போம்...

# திருவேங்கடவனின் திருவருள்

திருமலையில் கோயில் கொண்டிருக்கும் திருவேங்கடமுடையான், அனுதினமும் ஆச்சர்யங் களையும் அதிசயங்களையும் பக்தர்களுக்கு அள வில்லாமல் அளிக்கிறான். அடியேன் வாழ்விலும் எண்ணற்ற அனுபவங்கள் உண்டு. அவற்றில் இரண்டு இங்கே.

அது ஆகஸ்ட் மாதம், 1977 ஆம் வருடம். அப் போது எனக்கு வயது இருபது. பட்டப்படிப்பு இறுதி முடிவுகள் வெற்றி என்று தெரிந்ததும், உடனே கீழ் திருப்பதியில் இருந்து திருமலைக்கு நடந்து சென்று சேவிக்க விரும்பினேன். எப்படி வேண்டிக் கொண் டேன் என்றே எனக்குத் தெரியவில்லை.

ஏனென்றால், எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து திருமலைக்குச் சென்றதாகத் தெரிய வில்லை. எங்கள் குல தெய்வம் திருவேங்கடவன்.

எங்கள் குடும்ப வழக்கப்படி குழந்தை பிறந்தவுடன், ஆண் பெண் எவராகினும், பிறந்த ஓர் ஆண்டுக்குள் திருமலைக்குச் சென்று, மொட்டை அடித்து காது குத்துவது வழக்கம். பெண் குழந்தை எனில், காது குத்தியவுடன், தங்கக் கம்மல் கூட போடப்படும். திருமலையைப் பற்றி முதன் முதலாக அம்மாவிடம் "அம்மா எனக்கு காதில் ஓட்டை இல் லையே. என்னை திருப்பதிக்கு அழைத்து சென்றீர் களா?" என்று நான் கேட்டபோது, உனக்கு இரண்டு அண்ணா, இரண்டு தம்பி இரண்டு தங்கை. பெரிய குடும்பம். அதனால் உன்னை திருமலைக்கு கூட்டிச் சென்றோமா என்று ஞாபகமில்லை என்று சொன் னார். அன்றிலிருந்து என் ஆழ்மனதில் திருமலைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் பதிந்து இருக்க வேண்டும்.

அதனால்தான் தேர்வில் வெற்றி பெற்றதும் உடனே திருமலைக்குச் செல்லத் தோன்றியது போலும். வீட்டில் அனுமதி பெற்று, ஒரு சிறிய பையு டன் சென்னையை விட்டு கிளம்பி திருமலை பேருந்து நிலையத்தில் இறங்கி அங்கிருந்து மலைக்கு நடக்கத் தொடங்கினேன். அலிபிரி மலைப் பாதையில் நடக்க தொடங்கியபோது, மாலை ஆறு மணி இருக்கும். எனக்கு சற்றே முன்னால், ஒரு நடுத்தர வயது தம்பதியர் இருந்தனர். நான் அவர் களைக் கடக்கும் தருணம், என்னைப்பற்றி கேட்டனர்.

பின்னர் அவரும், தான் திருப்பதியில் உள்ள ஒரு தியேட்டர் அதிபர் என்றும், அடிக்கடி மலைக்கு மனைவியுடன் நடந்து செல்வது வழக்கம் என்றும் சொன்னார். என்னைப்பற்றி கேட்டபோது, நான் தேர்வில் வெற்றி பெற்று, நடந்து வருவதாக வேண்டிக்கொண்டு முதல் முறையாக திருமலைக்கு வருவதாகச் சொன்னேன். அவர் மிகவும் மகிழ்ந்து, தங்களோடு மலையப்பனைத் தரிசிக்க அழைத்துச் செல்வதாகக் கூறினார். அதன் பிறகு பேசியது, நடந்து மலை ஏறியது எதுவும் எனக்கு இப்போது நினைவில் இல்லை. ஆனால் மலை ஏறிய பின், நேராக கோயிலுக்குள் நுழைந்தது நன்றாக நினை வில் உள்ளது. குலசேகரப்படி வரை சென்று வேங்கட முடையானை நன்றாகத் தரிசித்தேன்.

துவார பாலகர் அருகில் ஒரு கங்காளம் பாத்திரம் முழுக்க தயிர் சாதம் பிரசாதமாக வழங்கிக்



திரு. மித்தே வெங்கடாசார் முரளி,
சென்னை,
98408 84803

கொண்டிருந்தனர். நான் ஒரு கையில் பிரசாதம் வாங்கியபின், இரண்டாவது கையிலும் தயிர்சாத பிரசாதம் கொடுத்தனர். முழங்கையில் மஞ்சள் பை, இரு கைகளிலும் தயிர்சாத பிரசாதத்துடன் வகுளவல்லித் தாயார் பிரகாரத்துக்கு வந்தேன். ஆச்சர்யம்! அந்த தம்பதியரைக் காணவில்லை.

அங்கேயே சுற்றி சுற்றி வந்தேன். அவர்களைக் காணவே இல்லை. வெளியில் வந்து தேடியும் அவர்களை கண்டுபிடிக்க முடியவே இல்லை. ஊர் திரும்பியதும் இந்த அனுபவத்தை சொன்னபோது, கேட்டவர் அனைவரும், இது வேங்கடமுடையான் திருவருள். அவரேதான் பத்மாவதித் தாயாருடன் மானிட உருவில் வந்து உனக்கு சிறப்பான தரிசனத்தைப் பெற வைத்தனர் என்று கூறினர்.

இன்றும் அந்த சம்பவத்தை நினைக்கும் பொழுது மெய்சிலிர்க்கும். என்னே அவன் அருள்! இனிய அனுபவம் இரண்டு. இதுவும் நடந்தது பல ஆண்டுகளுக்கு முன்னால், கிருஷ்ணன் என்னும் பக்தர் குடும்பத்துடன் சேர்ந்து சுப்ரபாத சேவையைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத் தது. சேவைக்கு முன்னால், அங்க பிரதட்சணம் செய்ய வெள்ளி வாயில் அருகே அனைவரும் தயாராக இருந்தனர்.

கடைசி நேரத்தில் என்னையும் அங்க பிரதட்ச ணம் செய்ய அக்குடும்பத்தில் இருந்த ஒரு சிறுவன் கூற, என் அங்கவஸ்திரத்தை இடுப்பில் செறுகிக் கொண்டு, அங்க பிரதட்சணம் செய்யத் தொடங்கி னேன். முதல் பிரகாரம் முடியும் முன்பே என் அங்க வஸ்திரம் கழன்று விட்டதை அறிந்தேன். அங்க பிரதட்சணம் செய்தபடி தலையைத் தூக்கிப் பார்த் தேன். கண்ணுக்கு எட்டிய வரையில் அங்க வஸ்திரம் கண்ணில் தென்படவில்லை.

பிரதட்சணம் முடிந்த பிறகு சுப்ரபாத சேவை தரிசனத்திற்கு உள்ளே நுழைந்தோம். குலசேகரப் படியை நெருங்கும் போது, இறைவா! கிரகஸ்த னான அடியேன் அங்கவஸ்திரத்தை இழந்து ஒற்றை வஸ்திரத்துடன் சேவிக்கிறேன். அடியேனை மன்னித்து அருள்வாய். என்னுடைய அஜாக்கிரதை யால் அங்கவஸ்திரத்தை நழுவ விட்டேன் என்று மனதார மன்னிக்க வேண்டினேன். சேவை முடிந்த தும், வழக்கம் போல் சென்னை திரும்பாமல், திருச்சானூர் சென்று ஒரு விசேஷ சேவையை முடித்துக்கொண்டு செல்வோம் என்று கிருஷ்ணன் ஸ்வாமி சொன்னார்.

திருச்சானூரில் பத்மாவதித் தாயார் மூலவர் சன்னதியில், தாமரைப் பூ கொண்டு அர்ச்சனை காலை 7 மணி வாக்கில் நடந்தது. அந்த பூஜை முடிந்ததும், மற்ற பிரசாதங்களுடன், தாயார் ரவிக்கை துணியும், ஒரு அங்கவஸ்திரமும் கிருஷ்ணன் ஸ்வாமிக்கு சன்னதியில் கொடுத்தார் கள். கிருஷ்ணன் ஸ்வாமி ரவிக்கை துணியை அந்த உறவினர் சிறுவனின் கழுத்தில் சேர்த்து, அங்க வஸ்திரத்தை என் கையில் கொடுத்தார். கண்ணீர் மல்க, திருவேங்கடமுடையானை நினைத்து நினைத்து நெகிழ்ந்து, அந்த அங்கவஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டேன். திருமலையில் தவற விட்ட அங்கவஸ்திரம், அடியேனுக்கு அடுத்த சில மணி நேரங்களில், திருச்சானூரில் புதிதாகக் கிட்டியது. என்னே அவன் கருணை !

**மஹாளயம் - சிராா்த்தத்தில் (திவசம்) சேர்க்க வேண்டிய முக்கிய காய்கறிகள்**

புரட்டாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபக்ஷ பிரதமை திதியிலிருந்து (பாத்ரபதம் கிருஷ்ணபக்ஷ பாட்டிமை) அமாவாசை திதி வரை உள்ள காலத்தை மஹாளய பக்ஷம் என்பர். இந்த 15 நாட்களிலும் பித்ரு காரியங்களுக்கே முதன்மையான இடம் கொடுக்கப்படுகிறது. மஹாளய அமாவாசை, மஹாபரணி (பரணி நட்சத்திரம் வரும் நாள்), மத்யாஷ்டமி போன்ற நாட்களில், பொதுவாக (நாள் எதுவும் பார்க்காமல்) இறந்தவர்களுக்கு திதி கொடுக்க நினைப்பவர் கொடுப்பர். நவமி திதி அன்று சுமங்கலிப்பெண்களாக இறந்தவர்களுக்கு திதி, தர்ப்பணம் கொடுப்பது வழக்கம்.

கரும்பு, எள், உளுந்து, கோதுமை, பயத்தம் பருப்பு, வெல்லம், மிளகு, சம்பா நெல், பிரண்டை, கருவேப்பிலை, பாகற்காய், கருணைக்கிழங்கு, வாழைக்காய், மாங்காய், இலந்தப்பழம், நாரத்தங்காய், எலுமிச்சை, கொத்தவரங்காய், பலாக்காய், தேன் இவை விசேஷமானது. பாகற் காய் நூறு காய்கறிகளுக்குச் சமம். பிரண்டை முந்நூறு காய்கறிகளுக்குச் சமம். பலாக்காய் அறுநூறு காய்கறிகளுக்குச் சமம்.

தொகுப்பு : ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம்.

# நம்மாழ்வார் விரும்பும் திருவேங்கடம்

திரு. கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி, 99855 99669.

திருமாமகள் கேள்வனான திருநாராயணன் உகந்த நிலங்கள் 108. அவற்றை திவ்ய தேசம் என்பர். அவற்றில் கோயில் (ஸ்ரீரங்கம்), திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்) என்பன முதன்மையாகக் கருதப்படுகின்றன. இவற்றில் *''மாறி மாறாத தண்ணம் மலை வேங்கடத்தண்ணல்''* என்கிற திருமலை இரண்டாவது ஆகும். நீர்வளம் நிறைந்து, பிராட்டியோடு நித்தியவாசம் செய்யும் தேசமிது. இப்படிப்பட்ட திருவேங்கடத்தில் நம்மாழ்வாருக்கு அதிக விருப்பம் என்பது அவருடைய திவ்ய பாசுரங்களால் அறியலாம்.

திருநாமப் பெருமை, தலைவன், வடிவழகு, ஜோதி ஆனவன், வினை தீர்ப்பவன், பக்திக்கு ஆட்பட்டவன், திருமலையின் பெருமை, ஆழ்வாரின் விருப்பம் என்னும் கோணங்களில் ஆழ்வாருடைய விருப்பத்தை அனுபவிப்போம்.

### திருநாமப் பெருமை

எம்பெருமானை அனுபவிப்பதற்குத் தடையான பிரக்ருதியைப் போக்கித் தரவேணும் என்று *''முந்நீர் ஞாலம் படைத்த...''* (3.2.1) என்னும் திருவாய் மொழியில் வேண்டுகிறார் ஆழ்வார். எம்பெருமான் தன்னோடு பரிமாறுவதற்கென்றே இப்பிரக்ருதியில் அவருக்கு இடையூறு இல்லை. அணுகூலமே உள்ளது. ஆழ்வாரை அடிமை கொள்வதற்காகவே திருமலையில் வந்து நிற்கிறதாகச் சொல்லுகிறார்.

அப்படிப்பட்ட திருவேங்கட மலையில் நிற்கின்ற திருமலையப்பன் திருவடிகளில் எப்பேர்பட்ட அடிமைகளை செய்ய வேண்டும் என்று பாரிக்கிறார்.

*''ஒழுவில் காலமெல்லாம் உடனாய் மன்னி*
*வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்*
*தெழிகுரலருவித் திருவேங்கடத்து*
*எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே''*

என்று எக்காலத்தும் அடிமை செய்ய வேண்டுமாம். அதாவது கீழே கடந்த காலத்தும் கைங்கரியம் செய்ய வேண்டுமாம். அதாகிறது – கீழ்க்கழிந்த காலத்தை மீட்கை என்றொரு பொருள் இல்லையிறே. *''நோபஜநம் ஸ்மாந்''* (சாந்.உப. 12) என்கிறபடியே *''கீழ்க் கழிந்த காலத்தில் இரவு நெஞ்சில் படாதபடி மறப்பிக்கை யிறே உள்ளது''* என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.

அதாவது மரணம் அடைந்து முக்தி பெற்றவன் தான் முன்பு ஏற்றுக் கொண்டிருந்த உடலை நினைப்பதில்லை என்பது. *''உடனாய் மன்னி''* என்பது எல்லா தேசங்களிலும் பெருமாளும் பிராட்டியுமாய்த் திரையை வளைத்துக் கொண்டிருந்தாலும் அப்போதும் படிக்கம், குத்துவிளக்கு முதலியன போல் நின்று அந்தரங்கமான அடிமைகளைச் செய்ய வேண்டும் என்கிறார். *''ப்ராப்த விஷயத்தில் பண்ணும் கைங்கர்யமிறே; ப்ராப்யமாவது; இனி ஸௌலப்யமும், வடிவழகும், ஸ்வாமித்வமும்*



**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

- திருமலைக்கு வரும் யாத்திரிகர்கள் தங்குவசதிக்காக புதியவரை அணுக வேண்டாம்.
- யாத்திரிகர்கள் பிறர் கொடுக்கும் தின்பண்டங் களையோ தண்ணீரையோ உட்கொள்ள வேண்டாம். இதனால் விளைவுகள் ஏற்படக்கூடும்.
- தளாரிகளை நம்பி தரிசனம், தங்குவசதி மற்றும் பிரசாதங்களுக்கு பணத்தை அளித்து ஏமாறாதீர்கள்.
- திருடர்கள் பணம், நகை போன்ற பொருட்களை கீழே போட்டு உங்கள் பொருட்களை அபகரிக்க எண்ணு வர். ஆசைப்பட்டு ஏமாறாதீர்கள்.
- யாத்திரிகர்கள் தங்கள் விலையுயர்ந்த பொருட்களை, பைகளை புதியவர்களை நம்பி ஒப்படைக்காதீர்.
- யாத்திரிகர்கள் தங்கள் உடைமைகளை தேவஸ்தான இலவச லாக்கர்களில் வைத்து ரசீது பெற்றுக் கொள்ளவும்.
- தங்கு விடுதிகளில் தங்கள் பொருட்களை பாதுகாக்க பிறரை நம்ப வேண்டாம்.
- யாத்திரிகர்கள் தரிசனத்தின்போது அதிகமான பணத் தையோ (அ) நகைகளையோ பாக்கெட்டில் வைத்து செல்ல வேண்டாம்.
- நடைபாதையில் தனியாக செல்லாதீர். குழுவாகச் செல்லவும்.

*எல்லாம் நாராயண சப்தத்துக்கு அர்த்தமிறே"* என்பது ஈட்டுரை. அதாவது "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்பது கருத்து.

### தலைவன் (சேஷி)

ஜீவாத்மாவின் தன்மையான அடிமையை (சேஷத்வம்) நிரூபிக்கும் போது, *"அடியார் அடியார் தம்மடியாரடியார் தமக்கடியார் தம் அடியாரடி யோங்களே"* – (திருவாய் மொழி 3.7.10) என்று கீழே இறக்கிக் கொண்டு போவது போலே, பரமாத்ம தன்மையை நிரூபிக்கும் போது *"எந்தை தந்தை தந்தைக்கும் முந்தை"*–(திருவாய் மொழி 3.3.2) என்று மேலே மேலே ஏற்றிச் சொல்கிறார் ஆழ்வார்.

எம்பெருமானுக்குத் திருநாட்டில் அல்லவா அடிமை செய்வது எல்லாருக்கும் உள்ள தன்மை (ஸ்வரூபம்). எம்பெருமானிடத்தில் மேன்மை, நீர்மை என்ற இரு குணங்கள் உள்ளன. மேன்மை குணம் பரமபதத்திலே காணப்படுவது. எம்பெருமான் ஆழ்வாரை இந்நிலத்தில் திருமலையில் அடிமை செய்ய விரும்புவது எம்பெருமானிடம் உள்ள இரண்டு குணங் களைக் காண வருகிறார்கள். "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கட மாகையாலே அடியேனும் இந்நிலத்தில் அடிமை செய்ய விரும்புகிறேன்" என்கிறார் ஆழ்வார்.

ஸ்ரீ சேனாபதி ஆழ்வான் தொடக்கமான நித்திய ஸூரிகள் திருவேங்கடமுடையானை ஸேவிக்க விரும்பி திவ்யமான பூக்களைக் கொண்டு இங்கே வருகிறார்கள். திருமலையப்பனுடைய சீல குணத் தில் ஈடுபட்டு அவர்கள் சமர்ப்பித்த பூக்கள் தானா கவே அவனது திருவடிகளில் சிந்துகின்றனவாம். அப்படி சிந்தின பூக்கள் செவ்வி குன்றாமல் மலர்ந்தும் வாசனையும் மிகுந்து விளங்குகின்றன வாம். *"அந்த மில் புகழ்"* என்றவிடத்து ஈடு காண்மின்;

"ஸ்ரீ வைகுண்டத்தில் புகழுக்கு அந்தமுண்டு போலே; அப்ராக்ருதமான விக்ரஹத்தோடே அவ் வடிமை அனுபவிக்கப்பாங்கான கரணங்களை உடையவராய்க் கொண்டு கிட்டினார்க்கு அனுபவ யோக்கியனாயிருக்கையாலே புகழ் சாவாதியாய் இருக்கும் அங்கு; இங்கு ஆளியும் கோளரியும் பொன்மாணியும் முத்தமும் பூமரமுமானவற்றுக்குத் தன்னை கொடுத்துக் கொண்டு நிற்கையாலே புகழுக்கு அந்தமில்லையிறே என்பது ஈடு.

### எம்பெருமானின் வடிவழகு

"அண்ணல் மாயன்" என்பதால் தலைவனும் ஆச்சரியமான வடிவழகு முதலியவற்றையுமுடை யவன்; குறிஞ்சி நிலத்திற்குத் தலைவன் என்பது ஈட்டுரை.

*"அணிக்கொள் செந்தாமரைக்கண்ணன்"* என்று அவனுடைய கண்ணழகில் ஈடுபடுகிறார். இக்கண்ண ழகு உடையவனுக்கு மற்ற அலங்காரம் தேவை இல்லை என்பதாம். தனக்குத் தானே ஆபரணமாய் விகாஸம், செவ்வி, குளிர்த்தி நறுமணங்களால் தாமரையை ஒருவாறு ஒப்பாகக் கொள்ளுமதான கண்ணழகை உடையவன் எம்பெருமான்" என்று காஞ்சி சுவாமியின் உரை. ஆச்சரியமான வடிவழகை உடையவனும், சௌந்தர்ய சீல குணங்களினால் ஆச்சரிய பூதனுடைய பார்வைக்குத் தப்பித்தவர்கள் அவனுடைய புன்சிரிப்புக்குத் தப்ப முடியாது. அப்படியே தப்பினாலும் அவனுடைய வடிவழகுக்கு தப்ப முடியாது என்கிறார் ஆழ்வார் "முறுவலாலே யாயிற்று இவரை கொண்டதாம்".

தொடரும்...



# திருமலையில் தரிசிக்க வேண்டிய இடங்கள்

– தமிழாக்கம் : திரு.வ.ஓ. சுரேஷ்,
சத்திரவாடா.





பரத கண்டத்தில் ஆந்திர மாநிலத்தில் திருமலை திருப்பதி ஒரு புனிதமான, பெரிய ஆன்மீகத் திவ்ய திருத்தலம். கலியுகக் கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையான் எழுந்தருளிய திருமலையைச் சுற்றி தரிசித்திட வேண்டிய பகுதிகள் பல. இரு மலை வழிச் சாலைகள், இரண்டு பிரதான நடைபாதைகள் கொண்டிருக்கும் இத்திருமலை கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2800 அடி உயரத்தில் உள்ள அரண்ய சீமாவின் சிறப்புகளின் சிகரமாகும்.

## நாராயணகிரியில் ஸ்வாமி திருப்பாதங்கள்

ஸ்ரீமந்நாராயணன் வைகுண்டத்திலிருந்து தமது திருப்பாதங்களை வைத்த புனிதமான இடமே நாராயணகிரி ஆகும். இதன் நினைவாகவே ஸ்வாமியின் திருப்பாதங்கள் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. ஆசாட சுத்த ஏகாதசி அன்று சத்ர ஸ்தாபன நன்னாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த உற்சவத்தை முன்னிட்டு ஸ்வாமியின் திருவடிகள் மீது பூ சக்கர குடையை வைத்து அர்ச்சகர்களால் பூஜைகள் செய்யப்படுகின்றது. திருமலையின் திருப்பாதத்தில் திருப்பதி அமைந்துள்ளது போன்று நாராயணகிரி திருப்பாதத்தில் திருமலை அமைந்துள்ளது.

## சிலா தோரணம் (புவியியல் வளைவு)

திருமலை சேஷாசலம் மலைத் தொடர் மிகப் பழமையானது என்பதற்குச் சான்றாக சிலா தோரணம் ஒரு அபூர்வமான புவியியல் சின்னமாக அமைந்துள்ளது. புராணங்களின்படி வேங்கடவன் முதலில் தனது திருப்பாதங்களை நாராயணகிரி சிகரத்திலும், இரண்டாவதாக தனது திருப்பாதங்களை சிலாதோரணத்தில் வைத்தார் என்பர். இத்தோரணத்தையே நுழைவு வாயிலாக எண்ணி ஸ்வாமி இங்கிருந்து புறப்பட்டு தற்போதுள்ள திருக்கோயிலை அடைந்தார் என்பது ஐதீகம். சுமார் 10 அடி உயரம், 15 அடி அகலம் கொண்டுள்ள அரிதானதும் அற்புதமானதும் இந்த சிலாதோரணம் எனப்படும் புவியியல் வளைவாகும்.

## சக்கர தீர்த்தம்

புனிதமான தீர்த்தங்களின் இருப்பிடமான திருமலைக்கு தீர்த்தாத்ரி எனும் பெயரும் உண்டு. திருமலையில் 108 தீர்த்தங்கள் உள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. அவற்றில் சக்கர தீர்த்தமும் ஒன்றாகும்.



பத்மநாபன் எனும் பக்தனை அசுரன் ஒருவன் விழுங்கும் போது, தன் பக்தனைக் காத்திட ஸ்ரீஹரி அவ்வசுரனை சக்கராயுதத்தினால் அழித்தார். சுதர்சன சக்கரத்தாழ்வார் இங்கு ஒரு குன்றில் காட்சி அளிக்கின்றார். ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமியும் இங்கு நமக்கு தரிசனம் அளிக்கின்றார். விருச்சிக மாசம் (கார்த்திகை மாதம்) சுத்த துவாதசி அன்று இங்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.



## ஸ்ரீ அபய ஆஞ்சநேயர் ஸ்வாமி மந்திரம்

திருமலை திருக்கோயில் வடமேற்கு திசையில் வேத பாட சாலைக்குச் செல்லும் பாதையில் இயற்கை எழிலுடன் கூடிய வனத்தில் ஆஞ்சநேய ஸ்வாமி கொலுவீற்றிருக்கின்றார். மூலமூர்த்தி எப்போதிலிருந்தோ இருந்தாலும் அண்மையில் உள்ளூர் மக்களால் ஆலயம் புணரமைக்கப்பட்டது.

பண்டைய காலத்தில் மதனபல்லியில் இருந்து பாகராப்பேட்டை வழியாக திருமலைக்கு நடந்து வரும் பக்தர்கள் முதலில் பாகராப்பேட்டை அருகிலுள்ள பால வேங்கடேஸ்வர ஸ்வாமியைத் தரிசனம் செய்து அவ்வாலயத்திலேயே இரவு தங்குவர். அதிகாலையில் எழுந்து ஸ்வாமிகோனை வனப்பாதையில் குண்டா புலி போனு, டெங்காய நெட்டு வழியாக திருமலைக்கு வந்தடைவர். விஜயநகர அரசர்கள் காலத்தில் கட்டப்பட்ட மண்டபத்தில் ஸ்ரீ அபய ஆஞ்சநேய ஸ்வாமி பூஜைகளை ஏற்று வருகின்றார். அந்தப் பழமையான நடைபாதை தற்போது பயன்படுத்தப்படுவதில்லை. இந்த ஆலயமே திருமலைக்குச் சிகரமாகக் காட்சியளிக்கின்றது.



## நாகுல பாவி (கிணறு)

உள்ளூர் மக்களால் நாகுல பாவியாக அழைக்கப்படும் இப் பகுதியின் பெயர் நாக தீர்த்தம் ஆகும். இங்கு ஒரு பெரிய பாறையில் நாகங்களின் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. ஒரு திருக்குளம் அழ காகக் காட்சியளிக்கின்றது. சேஷாசலம் எனும் பெயர் ஏற்படுவதற்கு காரணமான வடிவம் பாம்பாகும். நாகுல சதுர்த்தி இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

திருமலை திருக்கோயிலுக்கு அருகில் உள்ள வராக ஸ்வாமி விருந்தினர் விடுதி வழியாகச் செல்லும் பாதையைக் கடந்து சென்றால் பாட்ட ஸ்ரீகங்கை அம்மன் ஆலயம் வரும். அங்கிருந்து சிறிது தூரம் சென்று இடதுபுறம் திரும்பினால் நாக தீர்த்தத்தை அடையலாம்.

## நட்சத்திர வனம்



ஜாதகத்தின்படி நட்சத்திரங்கள் 27 ஆகும். ஒரு நட்சத்திரத்திற்கு ஒரு தெய்வீக மரம் சிறப்பாகும். அற்புதமாக 27 நட்சத்திரங்களுக்கு 27 மரங்களைக் கொண்ட நட்சத்திர வனம் இங்கு உள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தான வனத்துறையினர் இந்த நட்சத்திர வனத்தைப் பராமரித்து வருகின்றனர். திருமலையில் பாபவிநாசத்திற்குச் செல்லும் பாதையில் பார்வேட்டை மண்டபத்திற்கு அருகில் இவ்வனம் அமைந்துள்ளது. பொங்கல் பண்டிகையின் போது திருமலையப்ப ஸ்வாமி இங்கு எழுந்தருள்வதற்காக அமைக்கப்பட்டதே பார்வேட்டை மண்டபமாகும். அண்மையில் இம்மண்டபம் புதுப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நட்சத்திர வனத்தோடு இப்பார்வேட்டை மண்டபத்தையும் நாம் தரிசிக்கலாம்.

## கல் தேர்

திருமலையில் போகத்தேர் என்று அழைக்கப்படும் சிறிய பிரம்மரதம், மரத்தேர் மற்றும் தங்கத் திருத்தேரைத் தரிசித்திருப்போம். ஆனால் இந்த கல்தேரினைக் குறித்து பெரும்பாலானோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. திருமலையில் டி.பி. தோட்டத்தில் ஸ்ரீவாரி மெட்டு நடைபாதையின் வழியாக திருமலைக்குள் நுழைந்தவுடனே எதிர்படுகின்ற மண்டப வடிவமே முன்னாளில் கல் தேராகும். இந்த அழகான சிற்ப மண்டபம் பெரிய பெரிய கல்லால் ஆன சக்கரங்களைக் கொண்டது. திருமலையில் கிழக்கு மேற்கு மாட வீதிகளில்



கம்பீரமாக நின்றிருந்தன. பக்தர்களின் வசதிக்காக மாடவிதிகளை விரிவாக்கம் செய்திட புனரமைக்கப்பட்ட போது தி.தி.தேவஸ்தானம் இக்கல்தேரினை இங்கிருந்து அகற்றியது. விஜயநகர சக்கரவர்த்திகளான கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் போன்றோரின் அந்தரங்க அதிகாரியான எல்லப்ப நாயகரால் தொடர் ஆண்டு 1527இல் திருமலையில் இக்கல்தேர் அமைக்கப்பட்டது.

### க்ஷேத்திர பாலகர் குன்று



திருமலையின் க்ஷேத்திர பாலகர் ருத்ரன் ஆவார். முந்தைய நாட்களில் திருமலை திருக்கோயிலில் க்ஷேத்திர பாலகர் பெயரில் பெரிய கல் குன்று இருந்தது. இரவு வேளைகளில் இக்குன்றானது ஆலயத்தைப் பாதுகாத்தபடி உருண்டு கொண்டு இருக்குமாம். ஒருநாள் எதிர்பாராத விதமாக ஒரு சிறுவன் பாறையின் கீழ் சிக்கி மரணம் அடைந்தான். ஆதலால், இக்குன்றினை கோகர்ப தீர்த்தம் அருகில் பிரதிஷ்டை செய்தனர். சிவராத்திரி அன்று இந்த க்ஷேத்திர பாலகருக்கு சிறப்பு அபிஷேக வழிபாடுகள் நடைபெறுகிறது. ஆலயத்தின் ஈசான்ய திசையில் பாண்டவத் தீர்த்தத்தினருகில் தற்போதும் நாம் தரிசிக்கலாம்.

### ஹதிராம்ஜி மடம்



திருமலைக்கோயிலின் தென்கிழக்கு மாடவீதியில் ஹதி ராம்ஜி மடம் அமைந்துள்ளது. ஸ்வாமியின் பரம பக்தரான ஹதி ராம்ஜி பாவாஜி ஸ்வாமியுடன் நேரடியாக பகடை ஆடியதாகக் கூறுவர். ஆங்கிலேயர்கள் திருமலை, திருப்பதி, பிற ஆலயங் களின் நிர்வாகப் பொறுப்பினை இம்மடத்தின் மகந்துக்களிடம் வழங்கினர். தி.தி.தே. விசாரணை கர்த்தாக்களாக மகந்துக்கள் 1933 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்து, பக்தர்களின் வசதிக்காக பல்வேறு திட்டங்களையும் சேவைகளையும் கொண்டு வந்தனர். திருமலையில் பல கட்டமைப்புகளை கொண்டு வந்த இம்மடத்தில் ஸ்ரீநிவாசருடன் ஹதிராம்பாவாஜி பகடை ஆடிய இடம், கிருஷ்ணாலயம், தசாவதாரம், அனுமன் விக்ரகத்தையும் நாம் தரிசிக்கலாம்.

### அனந்தாழ்வான் பூந்தோட்டம்



புஷ்ப மண்டபமான திருமலையில் தென்மேற்கு மாட வீதியில் அனந்தாழ்வான் பூந்தோட்டம் அமைந்துள்ளது. பிரம்மோற்சவத்தில் துவஜாவரோஹணம் முடிந்த மறுநாள் பாக்சவாரி(பாக்–தோட்டம்) உற்சவம் நடைபெறும். அன்று புரிசைவாரி தோட்டம் என்று அழைக்கப்படும் அனந்தாழ்வான் தோட்டத்திற்கு (அனந்தாழ்வான் பிருந்தாவனம் இங்கு உள்ளது) உபய தேவியருடன் திருமலைப்ப ஸ்வாமி எழுந்தருளி சிறப்பு பூஜைகளை ஏற்பார்.

திருமலையில் அனந்தாழ்வான் திருக்குள நிர்மாணத்தில் இருக்கும்போது, அவருக்கு உதவ, ஸ்வாமி சிறுவன் வடிவில் வர, ஆழ்வான் கோபமாக சிறுவன் மீது கடப்பாரையை வீசினார். அக்கடப்பாரை சிறுவன் மோவாயில் பட்டு காயமானது. சிறுவன் வேகமாக எதிர்ப்புறமாக ஓடி, ஆலயத்திற்குள் மாயமானார். ஸ்வாமி அப்பிரதக்ஷிணமாக சென்றதன் நினைவாக பாக்சவாரி உற்சவம் இன்றும் நடைபெற்று வருகிறது.

இதுமட்டுமின்றி, சங்கு தீர்த்தம், தரிகொண்ட வெங்கமாம்பா பிருந்தாவனம், ஜாபாலி தீர்த்தம், ஆகாச கங்கை, பாபவிநாசன தீர்த்தம், சிலாதோரணம் அருகில் உள்ள கல் தோட்டம், பாண்டவத் தீர்த்தம் எனப் பலவற்றை இந்தத் திவ்யமான திருமலையில் தரிசிக்கலாம்.



16-07-2025 அன்று ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி சார்பில் திருமலையில் ஆனிவர ஆஸ்தானத்தை முன்னிட்டு திருமலையப்ப ஸ்வாமிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டுவஸ்திரங்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜீயர் சுவாமிகள், தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர், தி.தி.தே. செயலாட்சித் தலைவர், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள்




21-07-2025 அன்று மைசூர் அரசரின் பிறந்த நாளினை முன்னிட்டு சஹஸ்ர தீப அலங்கார சேவைக்குப் பின்னர் உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி திருமலையிலுள்ள கர்நாடக சத்திரத்திற்கு எழுந்தருளிய பல்லவோத்ஸவத் திருக்காட்சி. இந்நிகழ்ச்சியில் கர்நாடக அரசு பிரதிநிதிகள், மைசூர் அரண்மனை பிரதிநிதிகள், தி.தி.தே. உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



28-07-2025 அன்று திருவேங்கடமுடையானைத் தரிசித்த மேதகு முன்னாள் பாரத துணைக் குடியரசுத் தலைவர் திரு.எம்.வெங்கைய நாயுடு அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள் உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர் திரு.பானுபிரகாஷ் ரெட்டி அவர்கள்



அண்மையில் திருமலையில் அன்னமய்யா பவன் எதிராக புதிதாகக் கட்டப்பட்ட ஸ்ரீவாணி தரிசனம் டிக்கெட் கௌண்ட்டரைத் திறந்து வைக்கும் தி.தி.தே. பெறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர் நாயுடு அவர்கள் உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள், தி.தி.தே. செயலாட்சித் தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர் பங்கு கொண்டனர்





தி.தி.தேவஸ்தான இந்து தர்ம பிரசார பரிஷத் 28-07-2025 முதல் 31-07-2025 வரை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் "சத்கமயம்" பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இப்பயிற்சி வகுப்புகளில் ஒழுக்க நெறிமுறைகள், ஆளுமை மேம்பாடு, தலைமைத்துவ குணங்கள், படைப்பாற்றல், கலாச்சார விழிப்புணர்வு, மாணவர்களின் அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்கள், மன வலிமை போன்றவை வளர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் விவரிக்கப்பட்டு, மாணவர்களுக்குப் புத்தகப் பிரசாதமும் வழங்கப்பட்டன.

ஏழுமலையான் குடியிருக்கும்
இந்தத் திருப்பதி மலைப்பகுதிக்கு ஒரு தனி சிறப்புண்டு.
தென் இந்தியாவின் சேஷாசலம் மலைத் தொடரின் மத்தியப் பகுதியில்
அமைந்து இருப்பது திருமலை. இது 13 மற்றும் 14 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 79
டிகிரி கிழக்கு தீர்காம்ச ரேகையிலும் அமையப் பெற்றுள்ளது. இந்த மலைப்பகுதியில் உள்ள
ஏழு மலைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு சிறப்பம்சம் உள்ளது. அவை முறையே, விருஷாத்திரி,
விருஷபாத்திரி, கருடாத்திரி, நாராயணாத்திரி, அஞ்சனாத்திரி, நீலாத்திரி மற்றும் வேங்கடாத்திரி என்ற
பெயருடன் விளங்குகின்றன.

இந்த மலைப்பகுதி வறண்ட மற்றும் முட்புதர்களுடன் கூடிய காடுகள் கொண்டவை. காலநிலைக் கேற்றார்போல் அவை வறட்சியாகவோ, பசுமையான போர்வை போர்த்தினாற்போலவோ அல்லது மலர்கள் பூத்துக் குலுங்கியபடியோ காணப்படும்.

இந்து தர்மத்தில், இதிகாச புராணங்களில் வனங்களுக்கு ஓர் தனி இடமுண்டு. ஆழ்வார்கள் தாங்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் வனாந்திரங்களைப் போற்றிப் புகழ்ந்து பாடி இருக்கிறார்கள். அவர்கள் காடுகளையும், மலைகளையும், ஆறுகளையும், பள்ளத்தாக்குகளையும் நாராயண சொரூபமாகக் கருதி, பல்வேறு தித்திக்கும் பாசுரங்களை தேனொழுக நமக்கு அளித்திருக்கிறார்கள். அதிலும், திருமலையின் பிரம்மாண்டத்தை வர்ணிப்பதிலும், அந்த மலையின் அழகில் மூழ்கித் திளைப்பதிலும் அங்கு வாழ்ந்திடும் விலங்குகளும் திருவேங்கடமுடையானைத் தரிசிப்பதாகவும் அனுபவித்து ஆழ்வார்கள் தங்கள் ரசனையை பல பாசுரங்களில் காண்பித்திருக்கிறார்கள்.



திருமங்கையாழ்வார் திருவேங்கடத்தை அனுபவித்த விதம் மிகவும் அற்புதம். *''பொங்குநீர்ச் செங்கயல்திளைக்கும்சுனைத் திருவேங்கடம்'', ''தீர்த்தநீர்த்தடஞ்சோலைசூழ் திருவேங்கடம்'', ''வாசமாமலர்நாறுவார் பொழில்சூழ்தரும் உலகுக்கெல்லாம், தேசமாய்த்திகழும்மலை திரு வேங்கடம்'', ''செங்கயல்திளைக்கும் சுனைத் திருவேங்கடம்'', ''வேயேய்பூம் பொழில்சூழ் விரையார் திருவேங்கடம், நிலம் தோய்நீள்முகில்சேர் நெறியார்த் திருவேங்கடம்'', ''கரிசேர்ப்பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடம்'', ''கோல்தேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலை சூழ்வேங்கடம்''* என்றெல்லாம் திருமலையை அனுபவித்திருக்கிறார்.

அதேபோல் தான் நம்மாழ்வாரும் *''தெழிகுரல் அருவித் திருவேங்கடம்'', ''சிந்துப்பூ மகிழும் திருவேங்கடம்''* என்று பாடி உள்ளார். திருவாடிப்பூரத்தன்று ஜெகத்தில் உதித்த ஆண்டாளோ *''குளிரருவி வேங்கடம்''* என்று பாடியுள்ளார்.

# திருமலை வனங்களைக் காப்போம்!

பொய்கையாழ்வார் ஒரு படி மேலே சென்று, **"பெருவில் பகழிக் குறவர் கைச் செந்தீ வெருவிப் புனம் துறந்த வேழம் இரு விசும்பில் மீன்வீழக் கண்டு அஞ்சும் வெங்கடம்"** என்று அனுபவித்துள்ளார்.

பூதத்தாழ்வார் தனது பாசுரத்தில் **"வேயோங்கு தண் சாரல் வேங்கடம்"** என வர்ணித்து உள்ளார்.

ஆன்மீக இலக்கியத்தில் மட்டுமல்ல, உயிரினப்பன்மையத்தின் ஒரு அடையாளமாக இந்த வனப்பகுதி திகழ்கிறது. ஸ்ரீ வேங்கடேஸ்வரா தேசிய பூங்கா மற்றும் வன விலங்குகளின் காப்பிட மாக இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட வனப் பகுதியில் திருமலை ஒரு அங்கமாகும். கிழக்குத் தொடர்ச்சி மலையின் கீழே வரும் சேஷாசல வனப் பகுதியில் 52000 ஹெக்டேர் பரப்பளவில் திருமலை அமைந்துள்ளது.

இந்த வனப்பகுதியில், திருமலை ஆலயத்தை நிர்வகிக்கும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மேலாண்மையின் கீழ் 27 சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவுள்ள வனம் உள்ளது.

பாரஸ்ட் சர்வே ஆப் இந்தியா வெளியிட்டுள்ள 'இந்தியா ஸ்டேட் ஆப் பாரஸ்ட் ரிப்போர்ட்' என்ற அறிக்கையின்படி தி.தி.தே.யின் கீழ் உள்ள 27 சதுர கிலோமீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் 24.4 சதுர கிலோமீட்டர், அதாவது 90% வனமாகவே பராமரிக் கப்பட்டு வருகிறது. இதில் 889 ஹெக்டேர் மத்திய தர அடர்த்தியான காடும், 1540 ஹெக்டேர் திறந்தவெளி காடாகவும் உள்ளது. இது இந்த இடத்தின் தூய்மை யையும், பசுமை பராமரிப்பையும் குறிக்கும்.

வனப் பராமரிப்பைப் பற்றிக் கூறவேண்டும் என் றால் திருமலை ஓர் அதிசயம். இங்கு பல பகுதிகள் மனித ஊடுருவலுக்கு அப்பாற்பட்டு இருக்கும் ஓர் அடர்ந்த காடு. மனிதர்கள் நுழைவதற்கு தடை உத்தரவும் உள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட வனம்.

சேஷாசல வனப்பகுதியில் பல நீர்நிலைகள், அருவிகள், நீர்வீழ்ச்சிகள் உள்ளன. இவை புண் ணிய தீர்த்தங்கள் என்று கருதப்படுகின்றன. வருடத் தின் பல நாட்களில் மக்கள் ஆயிரக்கணக்கில் இங்கு திரண்டு புனித நீராடி, பிறகு ஏழுமலையானைத் தரிசித்து ஆசி பெறுவது வழக்கம்.

இந்தத் தீர்த்தங்களுக்கு பக்தர்கள் ஆயிரக்கணக்கில் வருகை தந்த போதிலும் மாசுபடும் நிலை வந்ததில்லை. தேவஸ்தானத்தின் வன பராமரிப்பு துறையினர் பல நூற்றாண்டுகளாக இங்கு நடக்கும் உற்சவங்களை தடங்கல் ஏதும் இல்லாமல் செவ்வனே நடத்தி, பக்தர்களின் நம்பிக்கையையும் காப்பாற்றிக் கொண்டு, அதே நேரம் இந்த காட்டுப்பகுதியின் தூய்மை கெடாமல் மிகுந்த அக்கறையுடன் பார்த்துக்கொள்கின்றனர்.

இந்த திருமலை வனப்பகுதியில் பல அபூர்வ வகை தாவரங்களும், அரிய வகை விலங்குகளும் உள்ளன. அவற்றுள் முக்கியமானது செம்மரம். இந்த வனத்திற்குள் மட்டுமே வளரும் இந்த அரிய வகை மரம், உலகில் வேறெங்கும் வளராது என்பதுதான் இதன் சிறப்பம்சம். மன்னர்கள் காலத்தில் பாரம்பரியமாக கோயில் தேர், சிம்மாசனங்கள் மற்றும் வாகனங்கள் செய்வதற்கு இந்த மரத்தை உபயோகித்தார்கள்.

அதே போல், சந்தனமரம், கடுக்காய், நெல்லி, வன்னி, அத்தி மற்றும் புளியமரங்கள் இந்த மலைப்பகுதியில் நிறைந்து, அடர்ந்து, படர்ந்து வளர்கின்றன. திருமலை அறிய விலங்குகளுக்கும் ஓர் இருப்பிடம். சிறுத்தை, கரடி, யானை, புள்ளி மான், கடமான், தேவாங்கு, எறும்புண்ணி போன்றவை இந்த வனத்திற்குள் நிறையவே காணலாம். அழிந்ததாகக் கருதப்பட்ட சில வன விலங்குகளையும் அண்மையில் இவ்வனத்திற்குள் வாழ்ந்து கொண்டு இருப்பதைக் கண்டறிந்து உள்ளனர்.

இந்த அரிய வனங்களைப் பாதுகாக்க திருப்பதி தேவஸ்தானத்தின் வனத்துறை பல பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றனர். முக்கியமாக, கோடை காலத்தில் வெயிலின் சீற்றத்தால் காட்டுத்தீ பரவாமல் இருக்க, நவம்பர் மாதத்தில் இருந்தே பராமரிப்புப் பணிகள் துவங்கி விடுவார்கள். தீக்கோடு (பயர்லைன்) எனப்படும் முறையைக் கடைபிடித்து, மரங்களுக்கு நடுவே பல மீட்டர் அகலத்திற்கு உள்ள புற்களை அகற்றி,

காட்டுத்தீ உண்டானாலும், அது மேன் மேலும் பரவாமல் தடுக்கின்றனர். வனங்களில் ஆங்காங்கே குளம் வெட்டி, நீர்நிலைகளை ஆழப்படுத்தி விலங்குகளின் தாகம் தீர்க்க ஏற்பாடு செய்துள்ளனர். இதனால், வனவிலங்குகள் வனத்தை விட்டு வெளியேறி மனித நடமாட்டம் உள்ள இடங்களுக்குள் நுழையும் அபாயத்தையும் தடுக்கிறார்கள்.

திருமலை ஒரு புனித மலை. தேவர்கள் நடமாடும் ஒரு தெய்வீக மலை. திருமலைக்கு வரும் பக்தர்கள் இந்த புண்ணிய வனத்தை வெறும் காடாகக் பார்க்காமல், திருமாலின் திருமாளிகையாகக் கருதவேண்டும். இங்கு மாசுபடுத்தும் எந்த ஒரு செயலையும் தவிர்க்கவேண்டும். பக்தர்களும் இந்த வனத்தினைக் காத்திட மலைவழிப்பாதைகளிலும், திருமலையிலும் பிளாஷ்டிக் பொருட்களை பயன்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். மலைப் பாதைகளில் குப்பைகளைத் தூக்கி எறிவதைத் தவிர்த்தல் வேண்டும். அதேபோன்று வன விலங்குகள் அவற்றிற்குத் தேவையான உணவுகளை வனத்திற்குள் அவை தாமாகவே பெற்றிடும். ஆதலால் அவற்றிற்கு மலைவழிப்பாதையில் உணவளிப்பதையும் தவிர்த்திடுங்கள்.

மாசைத்தவிர்த்து, பசுமையைப்போற்றி, தூய்மையைக் கடைபிடிக்கும்போதுதான் பக்தர்களின் பிரார்த்தனைக்கு இறைவன் செவிமடுப்பான் என ஒவ்வொருவரும் நம்ப வேண்டும். அந்த இறை நம்பிக்கையோடு இந்த புண்ணிய வனங்களைப் போற்ற வேண்டும், பாதுகாக்கவும் வேண்டும்.

***வனத்தைக் காத்திடுவோம்! வளமாக வாழ்ந்திடுவோம்!!***

***- திரு.அத்தி ரங்கராஜன், திருப்பதி,98490 99246.***

# அனந்த பத்மநாப விரதம்

பாத்ரபத மாதத்தில் (ஆவணி அல்லது புரட்டாசி) சுக்ல பக்ஷ சதுர்த்தசி திதியில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையே ஸ்ரீஅனந்த பத்மநாப ஸ்வாமி விரதம் ஆகும். கலச வழிபாட்டுடன், நோன்பு கயிறு கட்டிக் கொண்டு பலவிதமான கனிகளுடன் பக்ஷணங்கள் படைத்து கொண்டாடுவர். இந்த விரதம் கடைபிடிப்பதற்கான பூஜை பொருட்களும் 14 என்கிற எண்ணிக்கையில்தான் இருக்கும். 14 ஆண்டுகள் தொடர்ந்து இந்த அனந்த பத்மநாப விரதத்தைக் கடைபிடித்து வந்தால் நாம் வேண்டினவை யாவும் கிடைத்திடும். இந்நாளில் உபவாசம் இருந்து விஷ்ணு புராணங்களையும் ஸ்தோத்திரங்களையும் பாராயணமும் செய்திடுவர். மகாபாரதத்தில் பாண்டவர்கள் தாம் இழந்த செல்வங்களை மீண்டும் பெறுவதற்கான வழியை கண்ணபிரானிடம் கேட்க, கண்ணனும் இந்த அனந்த பத்மநாப விரதம் மேற்கொண்டால் அனைத்து செல்வங்களும் மீண்டும் கிடைத்திடும் எனக் கூறினார். பாண்டவர் களும் விரதம் இருந்து இழந்த செல்வத்தைப் பெற்றனராம். இந்த விரதம் கடைபிடித்தால் நம் வாழ்க்கையில் உள்ள தடைகள் நீங் கும். மகிழ்ச்சியான திருமண வாழ்வை யும், நீண்ட ஆயுளை யும், ஆரோக்கியத்தையும் அளிக்க வல்லது. அனந்தபத்ம நாப ஸ்வாமி ஆலயம் கேரளா மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் அமைந் துள்ளது. இது 108 திவ்ய தேசங் களில் முக்கியமான சயன திருக் கோல ஆலயமாகும்.



# குறுக்கெழுத்துப் புதிர் -110

**வலமிருந்து இடம்**


1. திருமலையில் அனந்தாழ்வார் உண்டாக்கிய நீர்நிலை...(9)
4. திருமலை ஆனந்த நிலையத்தின் தங்க நுழைவாயில்...(8)
5. பன்னிரு ஆழ்வார்களில் திருவேங்கடத்தைப் பற்றி பாடியவர்கள்...(7) கள்.
9. திருமலையில் பஞ்சாங்கம் வாசித் தலை கேட்பவர் கொலுவு ஸ்ரீ...(4)

**இடமிருந்து வலம்**

3. திருப்பதி ரயில் நிலையம் அருகில் இராமாநுஜரால் பிரதிஷ்டைச் செய்யப்பட்டவர்...(11)
6. பிரம்மோத்ஸவத்தின் 8ஆம் நாள் காலை நடைபெறுவது ...(6)
7. திருமலையில் தினசரி (பகல் இரண்டு மணிக்கு) நடப்பது...(4) பிரம்மோத்ஸவம்.
8. திருவேங்கடத்தில் இலவசமாக திருமணம் செய்து வைக்கும் திட்டம்...(7)
10. தி.தி.தே. பஞ்சகவ்யப் பொருட்க ளின் தயாரிப்பின் பெயர் நமாமி...(4)
11. தி.தி.தே. தொலைக்காட்சியின் பெயர் ...(8) பக்தி சேனல்.
13. திருமலையில் முதல் நிவேதனம் ...(7)க்கு சமர்ப்பிக்கப்படுகிறது
14. திருமலையில் தென்மேற்கு மாட வீதியில் உள்ள பூங்கா...(11)

**மேலிருந்து கீழ்**

02. ஆனந்த நிலைய கோபுரத்தின் வடபுறம் காட்சியளிப்பவர்...(8) வரர்.



தொகுப்பு : திரு.டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807.
புதிருக்கு விடை இந்த இதழிலேயே உள்ளது. வாசகர்கள் சரி பார்க்கவும்...

04. திருவேங்கடமுடையானின் பட்டத்து ராணியின் பெயர்...(9).
05. திருவேங்கடவனின் மோவாயிலில் தடவப்படுவது...(9).

**கீழிருந்து மேல்**

10. திருமலை ஆனந்த நிலையத்தில் ஆண்டுக்கு நான்கு முறை செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறுவது ...(7) திருமஞ்சனம்.
12. திருமலை பாலாஜி பேருந்து நிலையம் எதிரில் உள்ள மிகப் பெரிய இலவச ஓய்வு விடுதி...(7).
13. திருவேங்கடத்தில் ஆகம விதிகளுக்கு வழிகாட்டுகின் றவர்...(9) ஸ்வாமிகள்.
14. ஸ்ரீவாரி கோயிலில் அதிகாலையில் பக்தர்கள் செய்கின்ற முதல் நேர்த்திக்கடன்...(10)

# வைணவ ஆசார்யர்களின் தொண்டு



திருவேங்கடவன், வெங்கடேசன், சீனிவாசன், கலியுகத் தெய்வம் எனப் போற்றப்படும் எம்பெருமான் வேங்கடாசலபதி எழுந்தருளி அருள் பாலிக்கும் வேங்கட மலை முழுவதும் சாலிக்ராமம் எனப்படும் கல் அமைப்பு கொண்டது. ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்யப்பட்ட எம்பெருமான்கள் மலைகளில் எழுந்தருளி இருந்தாலும் திருவேங்கட முடையான் எழுந்தருளி இருக்கும் மலையை மட்டும் திருமலை என்று அழைக்கிறோம். மண்ணவரும் விண்ணவரும் கண்டு அனுபவிப் பதற்காக எம்பெருமான் இம்மலையில் எழுந்து அருளியுள்ளார்.

இனி இம் மலைக்கு ஆசார்யர்கள் செய்த மகத்தான தொண்டினைப் பார்ப்போம்.

### பெரிய திருமலை நம்பி :

பெரிய திருமலை நம்பிகளுக்கு ஸ்ரீசைல பூர்ணர் என்ற திருநாமமும் உண்டு. இவர் திருவேங்கடமுடையானிடம் வைத்து இருக்கும் பற்றைப் பார்த்து பெருமாளே இவரை பிதாமஹர் என்று மிகவும் கௌரவித்தார். இராமாநுஜரின் தாய்மாமன் இவர். அவருக்கு ஆசாரியரும் இவரே. திருவேங்கடத்தில் இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களில் இவரே முதன்மையானவர்.

இவர் திருவேங்கடமுடையானுக்கு நித்ய கைங்கர்யமாக தினமும் ஆகாச கங்கையிலிருந்து (மலையில் உள்ள நீர் வீழ்ச்சி) திருமஞ்சனத்திற்கு தீர்த்தம் கொண்டு வருவார். மந்திர புஷ்ப கைங்கர்ய மும் இவர் செய்து வந்தார். இவர் அனந்தாழ் வானோடு சேர்ந்து திருமலையில் திருஅத்யயன உத்ஸவத்தைத் தொடங்கி வைத்தார். இதை திருமலையின் வரலாற்றினைக் கூறும் “திருமலை ஒழுகு” என்கிற புத்தகத்தில் காணலாம்.

இருபத்து நான்கு நாட்கள் நடைபெறும் இந்த உத்சவத்தில் கடைசி நாளன்று தண்ணீர் அமுது உற்சவம் நடைபெறுகிறது. பெரிய திருமலை நம்பி களின் தீர்த்த கைங்கர்யத்தின் பெருமையை எல்லோருக்கும் தெரியும்படி செய்ய இராமாநுஜர் இந்த உத்சவத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். இன்றும் நம்பியின் சந்ததியினர் இந்தத் தீர்த்தக் கைங் கர்யத்தைச் செய்து வருகின்றனர்.

### அனந்தாழ்வான்

இவர் சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் சிறுபுத்தூர் (பெங்களூர்–மைசூர் இடையே உள்ளது) எனும் ஊரில் அவதரித்தார். இவரின் ஆசாரியர் எம்பெருமானார்.

இவர் வேங்கடேச இதிகாச மாலை, கோதாசது: ச்லோகி, இராமாநுஜ சது: ச்லோகி முதலிய கிரந்தங்களை எழுதியுள்ளார். இவர் இராமாநுஜரின் விருப்பப்படி திருமலைக்கு தன் கர்ப்பிணியான மனைவியுடன் சென்று குளம் வெட்டி நந்தவனம் அமைத்து அதற்கு இராமாநுஜன் ஏரி என்று பெயரிட்டு புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். இவர் நந்தவனம் அமைக்கப் பயன்படுத்திய கடப்பாறையை இன்றும் கோயிலின் முதன்மை கோபுர வாசலின் கதவுக்கு அருகே காணலாம்.

தன் கைங்கர்யத்திற்கு இடைஞ்சலாக பெருமாளே சிறுவனாக வந்தபொழுது கடப் பாறையை அவன் மீது எறிந்தார். அதனால் பெருமாளின் மோவாயிலில் காயம் உண்டானது. பெருமாளின் மோவாயிலில் அடிபட்டதற்காக இன்றளவும் பெருமாளுக்கு பச்சைக் கற்பூரம் சாற்றி குளிரப் பண்ணுகிறார்கள் அர்ச்சகர்கள். தன் தேஹ அபிமானம் இல்லாமல் பெருமாள் கைங்கர்யத்தி லேயே ஊற்றம் உடையவராக இருந்தார்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**திருமலைக்கு நடந்து செல்லும் பக்தர்களின் கவனத்திற்கு**

- **60 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு, கீல்வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப் பட்டோர் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டவர் களும், பருமனானவர்களும் மலை ஏறு வதைத் தவிர்க்கவும்.**
- **மலை ஏறும்போது ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் மிக உயரத்தில் குறைவான ஆக்சிஜன் செறிவும் இதய பாதிப்பு மற்றும் ஆஸ்துமாவை மேலும் மோசமாக்கலாம்.**
- **நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்கள் வழக்கமாக பயன்படுத் தும் மருந்துகளைத் தவறாமல் தங்களுடன் கொண்டு வருதல் வேண்டும்.**
- **மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் அலிபிரி நடைபாதையில் உள்ள படி எண். 1500 காலி கோபுரம் மற்றும் இராமாநுஜர் சன்னதி அருகில் உள்ள மருத்துவ மையங் களைத் தொடர்பு கொள்ளவும்.**
- **திருமலையில் 24/7 மணி நேரமும் அஸ்வினி மருத்துவமனை மற்றும் பல முதலுதவி மையங்கள் செயல்படுகின்றன.**
- **நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு அவசர டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்கு திருப்பதி ஸ்விம்ஸ் மருத்துவமனையும் உள்ளது.**


தன் தோட்டத்தில் பூ பறித்த அலர்மேல் மங்கை தாயாரைக் கட்டி போட்டு, காலையில் தன் பெண் போல் சன்னதிக்கு அழைத்து வந்த போது பெருமாளும் பிராட்டியைத் தன் திருமார்பில் ஏற்றதோடு அனந்த ஆழ்வாரை தன் மாமனாராக ஏற்றுக் கொண்டார்.

### ஆளவந்தார்

ஒரு சமயம் ஆளவந்தார் திருமலைக்கு எழுந்து அருளி மங்களாசாஸனம் செய்தருளின போது பெரும் மழை காரணமாக பெரிய திருமலை நம்பி யால் பாபவினாசத்தில் இருந்து திருமஞ்சனத்திற்குத் தீர்த்தம் எடுத்து வர இயலவில்லை. ஆகவே ஆளவந்தார் தாமே ரங்கதாஸன் கைங்கர்யமான சன்னதி அருகில் உள்ள கிணற்றில் நின்று நீர் எடுத்து சமர்ப்பித்துத் திருமஞ்சனத்தை நிறைவேற்றி அந்த கிணற்றிற்கு அழகப்பிரானார் என்று திருநாமம் சாற்றினார். இன்றும் அக்கிணறு இந்தப் பெயரா லேயே சிறந்து விளங்கி வருகிறது.

### இராமாநுஜர்

இராமாநுஜர் சித்திரை மாதம் திருவாதிரை நட்சத் திரத்தில் ஸ்ரீபெரும்புதூரில் அவதரித்தார். இவர் திருமலையில் திருவேங்கடத்து செல்வம் அழியாமல் அதனைக்காத்து வளர்த்து பல திருப்பணிகள் செய் தார். பெருமாள் சன்னதிக்கு எதிரிலுள்ள அனுமார் கோயிலுக்கு அருகில் தமக்கொரு மடத்தை கட்டி ஜீயர், ஏகாங்கிகள் ஆகியோரை நியமித்து திருப்பணி கள் குறைவின்றி நடக்க ஏற்பாடு செய்தார். இன்றும் பெரிய ஜீயர், சின்ன ஜீயரால் எல்லாப் பணிகளும் செம்மையாக நடந்து வருகிறது.

தொண்டைமான் சக்ரவர்த்தி போரில் ஜெயிப்பதற்காக பெருமாள் தன் சங்கையும் சக்கரத்தையும் அளித்து இருந்ததால், சைவர்கள் பெருமாள் கையில் சங்கு சக்கரம் இல்லாததால் இவர் முருகன் என்று கூறினார்கள். இராமாநுஜர் தான் இவர் பெருமாள் என்று சங்காழி தரிக்கச் செய்தார். ஆகவே *''அப்பனுக்கு சங்கும் ஆழியும் அளித்தான் வாழியே''* என்று போற்றப் பெற்றார்.

மேலும், கோபுரத்தின் விமானத்தில் வைகானச ஆகமத்தில் கூறியபடி வராக, நரசிம்ம, வேங்கடேச திருவடிவங்களை அமைத்தார். பெருமாளின் திருமார்பில் திருமகளை எழுந்து அருளப் பண்ணி

திருமஞ்சன காலத்தில் திருமகளை மார்பினின்று எடுத்த வேளையில் நாச்சியார் திருமொழியை ஓதும்படி செய்தார். பெருமாளின் திருநெற்றியில் இரு கோடுகளான திருமண் காப்பை பச்சைக் கற்பூரப் பொடிகளால் அமைத்து மூன்று நாட்கள் காட்சி அளிக்கவும், நான்கு நாட்கள் முத்துப் பொடிகளால் அமைக்கவும், திருக்கண் மலருக்குக் குளிர்ச்சிக்காக அஞ்சனைக் காப்பு இடவும் ஏற்பாடு செய்தார்.

புரட்டாசி பிரம்மோற்சவம் நடக்கத் திருவீதி அமைத்தும், மலைக்கு இனிய நின்ற பெருமாளை உத்சவ மூர்த்தியாக்கி அவருக்கு முன் உற்சவ மூர்த்தியாய் இருந்த வேங்கடத் துறைவரை கௌஸ்துப மூர்த்தியாக்கியதும், பெரிய திருமலை நம்பியின் நினைவாக தண்ணீர் அமுது விழா ஆகியவற்றை ஏற்படுத்தியதும், திருவேங்கடமுடையானது இடக்கரத்தில் வைகுண்ட ஹஸ்தம், வலக் கரத்தில் (அரவப்பணி) நாக ஆபரணத்தை அணிவித்தும், திருமலையில் இருப்போர் மேற் கொள்ள வேண்டிய விதிகளை ஏற்படுத்தியதும் சிறந்தவை ஆகும்.

பெருமாளின் ஈசான்ய திக் பாகத்தில் லக்ஷ்மி நரசிம்மரை பிரதிஷ்டை பண்ணி நித்ய திருவாராதனம் நடக்கும்படி செய்து வைத்தார். ***"வேங்கடவற்கென்ன விதிக் கிற்றியே..."*** எனப் பாடிய ஆண்டாளின் விருப்பத்திற்கேற்ப மார்கழி மாதம் முப்பது நாளும் கிருஷ்ணனையே சய்ய (சயன) பேரமாய் இருக்கும்படி திருப் பள்ளிக் கட்டிலிலே கண் வளர்ந்தருளி ஜகத்தை வாழ்விக்கும்படி செய்தார். இவர் அருளிச்செய்த ஒன்பது நூல்களில் வேதார்த்த ஸங்க்ரஹம் திருமலையானுக்கே எழுதப்பட்டது.

பெருமாளுக்கு யாதவ ராயன் துணை கொண்டு பல அணிகலன்களை செய்து அணிவித்தார். இராமாநுஜர் கோவிந்த ராஜரை திருப்பதியில் திருபிரதிஷ்டை செய்த பின் யாதவராயன் திருச்சித்திரகூட மணி மண்டபம் என்ற மண்டபத்தை பெருமாள் சன்னதி முன்பு கட்டினார்.

### வேதாந்தாசாரியார்

புரட்டாசி திருவோணத்தில் திருவேங்கடவனின் மணியின் அம்சமாக காஞ்சிபுரத்தில் தூப்புலில் அவதரித்தார். இவர் திருமலையில் திருவேங்கடமுடையானுக்காக தயா சதகம் எழுதி அவருக்குச் சமர்ப்பித்து மங்களாசாஸனம் செய்தார்.

### மணவாளமாமுனிகள்

ஐப்பசி மாதம் மூல நட்சத்திரத்தில் ஆழ்வார்திருநகரியில் அவதரித்தார். இவர் பல இடங்களில் வைணவ சமயத்தை பரப்பவும், அருளிச் செயல்களின் தாத்பர்யங்களை எடுத்து உரைக்கவும் பிரசித்தி பெற்ற வேத விற்பன்னர்களை அஷ்டதிக் கஜங்களாக நியமித்தார். அவர்களில் ஒருவரான பிரதிவாதி



பயங்கரம் அண்ணாவுடன் திருமலைக்குச் சென்று எம்பெருமானை மங்களாசாஸனம் செய்தார். திருமலையில் சுமார் இரண்டு வருடங்கள் தங்கி இருந்து கோயில் நிர்வாகத்தைக் கவனிக்க ஒரு ஜீயரை நியமித்தார். அவரே எம்பெருமானார் ஜீயர் என்றும், சின்ன ஜீயர் என்றும் அழைக்கப்பட்டார்.

இவருடைய சீடரான பிரதிவாதி பயங்கரம் அண்ணா இவரின் நியமனப்படி திருவேங்கடன் சன்னதியில் சுப்ர பாதம் ஸ்தோத்திரம், ப்ரபத்தி, மங்களா சாஸனம் சேவித்தார். இந்த நிகழ்ச்சிக்கு பின் இன்றளவும் ஸ்வாமி சன்னதியில் காலையில் சுப்ரபாதம் சேவிக்கப்படுகிறதை நாமும் கேட்கலாம்.

இப்படியாக அனேக ஆசாரியர்கள் திருமலைக்குத் தொண்டு செய்துள்ளனர்.

**- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை, 9790938925.**

## கோயில் அமைப்பும், அமைவிடமும்

தென்திருப்பதி என்று சிறப்பிக்கப்படும் திருவேங்கடநாதபுரம் வெங்கடாசலபதி திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்து உள்ளது. தாமிரபரணி நதிக்கரையில், சிறிய மலைக்குன்றின் மீது கிழக்கு நோக்கி அமையப் பெற்றுள்ளது. இக்கோயிலின் நுழைவு வாயிலில் உள்ள 12 படிகள் ஏறிச் சென்றால், உள்ளே கருடாழ்வார் சன்னதி, அவரை வணங்கி உள்ளே நுழைந்தால் மூலவர் வெங்கடாசலபதி, தாயார்களுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். முன்புறமுள்ள கொலு மண்டபத்தில் உற்சவர் ஸ்ரீநிவாசப்பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி தாயார்களுடன் காட்சி தருகிறார். இது தவிர உள்பிரகாரத்தில் தாயார்கள் சன்னதி, தலவிருட்சம், ஆஞ்சநேயர் சன்னதி, பரமபத வாசல் ஆகியவையும் உள்ளன. திருக்கோயிலுக்கு வெளியே மலைக் குன்றின் மீது ஒரு பிரகாரமும், குன்றிற்கு கீழே மாடவீதி பிரகாரமும் அமையப் பெற்றுள்ளது.

பாண்டியர் கால கட்டடக்கலையை விளக்கும் விதமாக கட்டப்பட்டுள்ள இக்கோயிலில் பல கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இக்கோயில் திருநெல்வேலியிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் தாமிரபரணி நதியின் வடகரையில் அமைந்து உள்ளது. இதன் புராணப் பெயர் திருநாங்கோயில்.

## தலச்சிறப்பு

திருவேங்கடநாதபுரம் திருக்கோயில் திருப்பதிக்கு நிகரான சிறப்பைப் பெற்று, தென் திருப்பதி என்று போற்றப்படுகிறது. திருப்பதி கோயிலில் ஏழு மலைகளைத் தாண்டி, வேங்கடவன் இருக்கிறார். அதுபோல இங்கு ஏழு நிலைகளைத் தாண்டி வெண்மை நிற மலைக் குன்றின் மீது வெங்கடாசலபதி கோயில் கொண்டு இருக்கிறார். திருப்பதி கோயிலின் மேற்கே பாபவிநாச தீர்த்தம், ஆகாய கங்கை தீர்த்தம் உள்ளதைப் போன்றே இங்கும் இக்கோயிலின் மேற்கே பாபநாசம் தீர்த்தம், கங்கைக்கு நிகரான தாமிரபரணி தீர்த்தம் உள்ளது.

திருப்பதிக்கு அருகே காளஹஸ்தி சிவாலயம் அமைந்திருப்பதைப் போல, இங்கே கோயிலின் அருகே அருள்மிகு கோத பரமேஸ்வரர் திருக்கோயில் (இராகுத்தலம்) அமைந்துள்ளது. இங்கு கருடாழ்வார் தன் திருக்கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தி காட்சி தருவது சிறப்பு. இக்கோயிலில், புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் நள்ளிரவில் கருட வாகனத்தில் பெருமாள் 12 படிகள் வழியாக ஒய்யாளி சேவையில் எழுந்தருள்வதைக் காண பக்தர்கள் திரளாகக் கூடுவர்.

## தல வரலாறு

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இப்பகுதி அடர்ந்த வனமாக இருந்தது. இங்கே தாமிரபரணி



நதிக்கரையில் வியாச முனிவரின் சீடரான பைலர் ஸ்ரீநிவாசப் பெருமாளை நினைத்து தவம் செய்தார். அங்கு பெருமாளின் திருவுருவமோ, சிலையோ ஏதுமில்லாததால் தன் மனதில் வெங்கடேசப் பெருமாளை எண்ணிக் கொண்டே கோடி மலர்களைத் தூவி வணங்கினார்.

ஏழாம் நாளில் பெருமாளை எண்ணி அர்ச்சனை செய்ய மலர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து மாபெரும் ஜோதியாக வானில் எழுந்தது. ஜோதியின் நடுவே, காலடியில் தாமிரபரணி நதித் தாய் வீற்று இருக்க, ஸ்ரீநிவாசப் பெருமாள் பைலருக்கு அருட் காட்சி தந்தார். பெருமாளின் அருள்வடிவமான திருக் கோலத்தைக் கண்டு ஆனந்த கூத்தாடிய பைலர் வடக்கே திருப்பதி வெங்கடாசலபதியாக குடி கொண்டு அருள்வதைப் போல இவ்விடத்திலும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் புரிய வேண்டு மென வேண்டினார். அவரது வேண்டுகோளுக்கு இணங்கி, பெருமாளும், ஸ்ரீதேவி, பூதேவி அலர்மேல் மங்கை சமேதரராக இங்கே கோயில் கொண்டார்.

### குழந்தை வரம்

பிற்காலத்தில் இப்பகுதியை ஆட்சி செய்த வெங்கடப்ப நாயக்க மன்னனுக்கு குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தது. பல தலங்களுக்கும் சென்று வணங்கியும், பலனில்லாத அவர் இத்தலத்திற்கு வந்தார். தாமிரபரணியில் நீராடி, சீனிவாச தீர்த்தக் கட்டத்தில் மூழ்கி எழுந்தபோது, கோயிலில் ஆயிரம் குழந்தைகளுக்கு அன்னதானம் செய்தால் குழந்தைப்பேறு கிட்டும் என்று அசரீரி கேட்கப் பெற்றார். அதன்படி அன்னதானம் செய்து சீனிவாசன் என்ற ஆண் குழந்தையைப் பெற்றார். இக்கோயிலை பெரிய அளவில் கட்டி, ஒரு ஊரினை அமைத்து, தனது பெயரையே இவ்வூருக்குச் சூட்டினார். அதனால் இவ்வூர் திருவேங்கடநாத புரம் ஆனது என்றும் கூறுவார்கள்.

வெங்கடப்பநாயக்கர் பெரிய வெண்கல பானையில் பொங்கலிட்டு, அந்த உணவை ஆயிரம் குழந்தைகளுக்கு தானமாக வழங்கினார். அந்த நிகழ்வை கருத்தில் கொண்டு இன்றும் குழந்தை வரம் வேண்டுவோர் வெங்கலப் பானையில் பொங்கலிட்டு, அதனை தானமாக வழங்கி, பின்னர் அந்தப் பானையை கொடி மரத்தின் அருகே கவிழ்த்து வைக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு குழந்தை வரம் கிட்டும் என்பது மாறாத நம்பிக்கை.

### பன்னிரெண்டு படிகள் சிறப்பு

இங்கு பன்னிரு ஆழ்வார்களும் திருப்படிகளாக இருக்க வேண்டும் என விரும்பினார்கள் என்றும், அவ்வாறே பன்னிரெண்டு திருப்படிகள் 12 ஆழ்வார் களைக் குறிக்கும் வண்ணம் அமைந்திருக்கின்றன என்றும் தல புராணம் விவரிக்கின்றது. திருவேங்கட நாத புரத்தில் குடிகொண்டிருக்கும் வேங்கடநாதனை வணங்கி, பாயசம் நைவேத்தியம் செய்து வழிபட டால், நம் வாழ்வையே இனிக்கச் செய்வார். திருமணத் தடைகளை நீக்கும், பாவங்களைப் போக்கும் புண்ணியத்தலம். கல்வியும், செல்வமும், ஆயுளும் ஆரோக்கியமும் பெருகும். இந்த திவ்ய திருத்தலத்திற்கு வந்து, தாமிரபரணியில் நீராடி மனதார வேண்டிக் கொண்டால் வேண்டிய வரம் அனைத்தும் வாரி வழங்குவான் தென் திருப்பதி திருவேங்கடவன்.

– பேராசிரியர் அருணா சங்கர
வேலாயுதம், திருநெல்வேலி,
99449 96616.

### 2025, அக்டோபர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 01 | திருமலையப்ப ஸ்வாமி திருத்தேர். |
| 02 | திருமலையப்ப ஸ்வாமி சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், விஜயதசமி. |
| 04 | திருமலையப்ப ஸ்வாமி பாக் சவாரி. |
| 07 | சத்ரவாடா ஸ்ரீகரியவரதராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 17 | துலா சங்கரமணம். |
| 17-19 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 20 | நரக சதுர்தசி, தீபாவளி. |
| 21 | ஸ்ரீகேதார கௌரி விரதம். |
| 24 | திருமலை நம்பி சாத்துமுறை. |
| 25 | நாகுல சதுர்த்தி. |
| 30 | திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம், பொய்கையாழ்வார் திருநட்சத்திரம். |
| 31 | பூதத்தாழ்வார் திருநட்சத்திரம். |

சென்ற இதழின் தொடர்ச்சி...

கல்லடி பட்ட வேங்கடவன் ஆகாச ராஜனாகிய மன்னனிடம் மகள் கேட்டு, வகுள மாலையைத் தூதாக அனுப்ப, பகவான் குறத்தி வடிவில், கட்டு விச்சியாக (குறிகூறுபவள்) தானே வடிவம் கொண்டு, அரசியின் அந்தப்புரம் அடைந்து. பத்மாவதியின் கரம் பற்றிக் குறி சொல்லி, திருமலை ஸ்ரீநிவாஸனை அடைந்தால்தான் பத்மாவதியின் நோய் அகலும் என்பதை பக்குவமாகச் சொல்லி, அவள் உடுத்துக் களைந்த பீதக ஆடையைப் பரிசாகப் பெற்றுத் திரும்புகிறான். அரங்கன் பெற்றது ஆண்டாள் சூடிக்களைந்த மலர்மாலை. வேங்கடவன் பெற்றதோ பத்மாவதி உடுத்துக் களைந்த பீதக ஆடை.


ஆகாச ராஜனுக்குச் சுக முனிவர் வேடனாய் வந்துள்ளவன் எம்பெருமானே என்பதைச் சான்றுகளால் எடுத்துக்காட்டவும், சூத மகரிஷி திருமண ஓலையுடன் வேங்கடவனிடம் அனுப்பப்படுகிறார். வேங்கடவனும் வகுள மாலையும் அவர் மூலமாகவே பதில் ஓலை அனுப்பினர். விவாகத்துக்குப் பணம் வேண்டுமே?

செல்வத்திற்கு அதிபதியான குபேரனிடம், 14 லக்ஷம் பொற்காசுகளைக் கடனாகப் பெற்று, ஒவ்வொரு ஆண்டும் அதற்கு உரிய வட்டியைத் தான் பக்த கோடிகளிடத்தில் இருந்து பெறும் காணிக்கைப் பொருளால் கொடுத்துவருகிறான். கலியுக முடிவில்தான் அசலைத் தரப்போகிறான். “கலௌ வேங்கட நாயக:” என்ற சிறப்பு இப்பெருமானுக்கு அமைந்தது. வைகாசித் திங்களில் சுக்லபட்ச நவமிநாளில் வெள்ளிக்கிழமை, பத்மாவதியின் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. தெய்வத் தம்பதியர், திருமலையில், அகஸ்திய ஆச்ரமம் என்ற இடத்தில். தங்கள் புது மண வாழ்க்கையைத் தொடங்கினர்.

திருவேங்கடவனுக்கு, பத்மாவதித் தாயாரை மணம் செய்து கொடுத்த மனநிறைவோடு, ஆகாச ராஜன் இவ்வுலக வாழ்வைக் கைவிட்டு முக்தி அடைந்தான்.

ஆகாசராஜனின் தம்பியான தொண்டைமானுக்கும், மைந்தனான, வசுதானனுக்கும் இடையே, ஆட்சி உரிமை பற்றிப் போராட்டம் ஏற்பட்டது. திருவேங்கடவன் தொண்டைமானுக்கு ஆதரவாகவும், பத்மாவதித் தாயார் வசுதானனுக்கு ஆதரவாகவும் நிற்க, நடந்த போராட்டத்தின் விளைவாக, இருவருக்கும் இடையே நாடு பிரித்துக் கொள்ளப்பெற்று, சமாதானம் வந்து, திருமலையில், வேங்கடேசனின் திருக்கோயில் உருவாவதற்கு கோயிலுக்கான இடத்தை வசுதானன் கொடுக்க, கோயில் பணியைத் தொண்டைமான் ஏற்றான்.

பொறாமையால், தொண்டைமானின் பகைவர்கள், அவன் நாட்டினைத் தாக்கியபோது, தொண்டைமானின் வேண்டுகோளுக்கு இரங்கி, சங்கு சக்கரங்களை தொண்டைமானுக்கு உதவுவதற்காக அளித்து,




# திருவேங்கடம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

வெற்றுக்கரங்களுடன் நிற்கிறானாம் வேங்கடவன். எம்பெருமானிடம் தொண்டைமான் கொண்டுள்ள தூய பக்தியின் விளைவே இது. கைங்கரியச் சிறப்பால், தொண்டைமானின் உள்ளத்தில் சிறிது செருக்குத் தோன்றிய போது குறும்பு அறுத்த நம்பி என்ற குயவர் இட்ட மண்பூவைத் தொண்டை மானுக்குக் காட்டி, வேங்கடவன் தொண்டை மானைத் திருத்தியதாக வரலாறு.

தன் உள்ளத்திற்கு இசைந்த பத்மாவதியை மணம் செய்து கொண்ட பின்பும், தன்னை விட்டுப் பிரியாமல் என்றும் தன் மார்பை இடமாகக் கொண்டு வாழ்ந்த திருமகள், பிருகு முனிவர் மீது தான் கொண்ட கோபத்தால், தன்னை விட்டுப் பிரிந்து சென் றதை எண்ணித் துயரம் கொண்டு, 32 ஆண்டுகள், ஸ்வாமி புஷ்கரணி தீர்த்தக்கரையில் தவம் செய்து, திருமகளை அடைந்ததாகவும் சொல்வர். இன்றும், திருவேங்கடவனின் திருமார்பில், பத்மாவதித் தாயார், திருமகள் என்ற இரு தேவியர்கள் உள்ளனர்.

திருமலையில் தன்னை சேவிப்பவர்க்குத் திருமகளைக் கொண்டு, செல்வம் வழங்குமாறு செய்து, அதனையே காணிக்கைப் பொருளாகத் தானே ஏற்று, அவர்களின் துன்பத்தை நீக்கித் தனது எல்லையற்ற அருளால், அவர்களைத் திருவடிகளில் விழச்செய்து, மேலான முக்தியை அவர்களுக்கு வழங்கும் திருவேங்கடவனின் அருளாற்றலைக் காட்டும் வடிவமே இது. திருமார்பில் இடங்கொண்ட பத்மாவதித் தாயார், திருச்சானூர் என்ற இடத்திலும் தனிக்கோயில் கொண்டு அருள்பாலித்து வருகிறார். சோழநாட்டில், தில்லைத் திருச்சித்திர கூடம் என்ற திவ்யதேசத்தில், சோழ மன்னனால், கோவிந்த ராஜப்பெருமானுக்கு இடையூறு ஏற்பட்டபோது, இராமாநுஜர், அப்பெருமானின் அர்ச்சாத் திருமேனியை கீழ்த் திருப்பதியில் வைத்துக் காத் தார்,ஸ்ரீகோவிந்தராஜர் திருக்கோயிலும் ஏற்பட்டது.

ஆளவந்தார், பெரிய திருமலை நம்பிகள், இராமாநுஜர், வேதாந்ததேசிகர், மணவாள மாமுனிகள் ஆகிய பூர்வ ஆசார்யர்கள் திருமலை யுடன் கொண்டிருந்த தொடர்பு எல்லை இல்லாதது. திருவேங்கடமுடையானுக்கு மீண்டும் சக்கரம் வழங்கிய பெருஞ்செயல், உடையவருக்கே உரியது.

கைங்கர்யத்தில் மிகுந்த ஊற்றம் கொண்ட அனந்தாழ்வானின் சிறப்பையும் உலகம் அறியும் பொருட்டு அவரது திருக்கையால் காயம்பெற்ற வேங்கடவனின் பெருங்கருணையும் அந்தப் புண்ணை இன்றும், தன் முகவாய்ப் பகுதியில் காட்டி நிற்கும் எளிமையும், நம் உள்ளத்தை உருக்கி விடும். 10 ஆழ்வார்களாலும், 12 புராணங்களாலும், பல்வேறு ஆசாரியர்களாலும், வாக்கேயக்காரர் களாலும், பக்தர்களாலும் பாடப்பெற்ற திவ்யதேசம்.

திருவேங்கடம் திவ்ய தேசம் தொடர்ந்து தரிசிப்போம்...

## ஸப்தகிரி ஜூலை 2025 விடைகள்

1. திருவள்ளுவர்.
2. திருவரங்கநாதன்.
3. இராமாநுஜர்.
4. ஆனி மாதம்.
5. ஆடி மாதம், பூரம் நட்சத்திரம்.
6. கூரத்தாழ்வார்.
7. அகத்தியர்.
8. ஆண்டாள்.
9. வேதவியாசர்.
10. சுவாமி தேசிகர்.
11. மணவாள மாமுனிகள்.
12. ஆனி மாதம்.
13. ஆனி மாதம், திருவோணம்.
14. திருச்சேலூர்.
15. பெரியாழ்வார்.






## போட்டி எண். 36

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ஆர். ஹஸ்டிகா, சோமையனூர், கோவை.
2. செல்வன் எம். வேதாந்த், அடையார், சென்னை.
3. செல்வன் சி. சித்தார்த்தன் அத்வைத ஆசிரமம் ரோடு, சேலம்.

# வேங்கடவனைக் கண்டு வணங்கும் களிறு

திரு. ஏ.கே.கோபி
கள்ளக்குறிச்சி,
9443879592

அடியார்கள் பிரார்த்திக்கும் வரங்களை வாரி வழங்கி அகிலமெங்கிலும் பக்த கோடிகளை அநுசரித்து பேரருள் புரிந்து வருகிறார் திருவேங்கடவன். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் திருவேங்கடவனின் எண்ணிறைந்த திருக்கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்டவர்களாய் அவனை அனுபவித்து தீந்தமிழ் பாசுரங்களைப் பொழியும் போது திருமலையின் இயற்கை அழகான சோலைகள் வண்ண மயமாய் பூத்துக் குலுங்கும் நறுமணம் வீசும் மலர்கள், சுனைகள், குளிர்ச்சியான அருவிகள், பொழில்கள், மலையினைத் தழுவிச் செல்லும் மேகங்கள், இன்னிசை பாடும் பறவைகள், வாழும் வேடுவர் மற்றும் குறவர்கள், யானை மற்றும் குரங்கினங்கள் அனைத்தையும் திருமலையோடும், திருவேங்கடமுடையானோடும் தொடர்புபடுத்தி பாசுரம் இயற்றியுள்ளனர்.

யானைகளை திருமலையோடு தொடர்புபடுத்திய ஆழ்வார்களின் பாசுரங்களை நாம் அனுபவிக்கலாம்.

**வெருவும் யானை :**

*மழைப் பேரருவி மணிவரன்றி வந்திழிய யானை*
*வெருவி யரவொடுங்கும் வெற்பு.*

திருவேங்கடமலையில் கொட்டிய பெரு மழையால் பெருகிய வெள்ளநீர் வரும் வழியில் உள்ள நவரத்தினங்களை எல்லாம் திரட்டிக் கொண்டு பெரும் அருவியாக கீழ்நோக்கிப் பாய்ந்து சிதறித் தெறிக்கிறது. அருவி நீரோடு இறங்கும் நவரத்தினங்களின் ஒளிவீச்சினைப் பார்க்கும் யானைகள் நெருப்புப் பந்துகள் என எண்ணி பயந்து ஒதுங்குகின்றன. பாம்புகள் மின்னல் என எண்ணி புற்றுக்குள் விரைந்து மறைகின்றன.

**கைநீட்டும் யானை :**

*வைப்பன் மணிவிளக்கா மாமதியை,மாலுக்கென்*
*எப்பொழுதும் கைநீட்டும் யானையை-எப்பாடும்*
*வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே*

திருமலையின் மேலேயுள்ள ஆகாயத்தில் முழு நிலவு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வேங்கடவன் மீதுள்ள பக்தியின் மேலீட்டினால் அந்நிலவைப் பிடித்து திருமலைக் கோயிலில் நந்தா விளக்காக வைத்து விட எண்ணி திருமலையில் வாசம் செய்யும்



நவராத்திரி விழா என்பது முப் பெரும் தேவியருடன் தொடர்பு உடைய வழிபாட்டு விழாவாகும்.

ஒன்பது நாட்கள் நடைபெறும் நவராத்திரி விழா ஸ்ரீதுர்கை (சக்தி), ஸ்ரீலக்ஷ்மி (செல்வம்), சரஸ்வதி (அறிவு) என்னும் மூன்று தேவியருக்கும் முறையே மூன்று மூன்று நாட்கள் கொண்டாடப்படுகின்றன. இவ்வழிபாட்டு அமைப்பு அன்னையின் அருள்பெற நடத்தப் பெறும் ஆன்மீகப் பயணம். ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் ஒருவன் தடைகள் தகர்த்து எதிர்மறை குணாங்களை நீக்கும் இச்சா சக்தியைப் பெற வேண்டும். பின்னர் தன் தொடர் பயணத்தில் நீதிமுறைப்படியான செயல் செய்வதற்கு அவனுக்குச் செயல் ஆற்றல் எனப்படும் செல்வ ஆற்றலான கிரியாசக்கி தேவை. இறுதியாக அவனுக்கு உண்மையை உணர்வதற்கு வழி காட்டிடும் அறிவாற்றலான ஞான சக்தி தேவை. அவ்வகையில் இவ்விழா அம்மூன்றையும் வழிபட்டுப் பெறுவதற்கு வழிவகுக்கிறது. நவராத்திரி வழிபாடு அகம் மற்றும் புறத் தீமைகளை வென்று ஆன்மீக வாழ்வாதாரத்தை அடைந்து உண்மை உணர்தலைப் பெற உதவுகிறது.



# தேவி நவராத்திரி

**– திரு. கே. ராமநாதன், சேலம்.**

யானை தம்முடைய துதிக்கையினை அந்நிலவினைப் பிடிக்கும் விதமாக உயர எழுப்பி வானத்தில் நீட்டியிருக்கிறது. அதுசமயம் அந்த யானையைப் பிடிப்பதற்காக அங்கு வாழும் வேடுவர்கள் வில்லும் அம்புமாக நாற்புறமும் யானையைச் சூழ்ந்து வளைப்பர்.

**குறவர் மால்யானை :**

*ஊரும் வரியரவம் ஒண்குறவர் மால்யானை*
*பேர எறிந்த பெருமணியை காருடைய*
*மின்னென்று புற்றடையும் வேங்கடமே*

திருமலையில் விளைந்த பயிர்களை இரவில் குறவர்கள் காவல் செய்து பாதுகாப்பர். பயிர்களை உண்ணவரும் பறவைகள் மற்றும் விலங்கினங்களை பரண் அமைத்து குரல் கொடுத்தும், கற்களை எரிந்தும் விரட்டுவர். யானைக் கூட்டம் ஒன்று அவ்வாறு மேய்வதற்கு வருகையில் குறவர் பரணிலிருந்து மாணிக்கக் கட்டிகளை யானைகள் மேல் எரிந்து விரட்டும் போது யானைகளைக் கருமேகமாகவும், மாணிக்க ஒளியினை மின்னலாகவும் எண்ணி பெரும் இடி வரப் போகின்றது என்ற அச்சத்தினால் பாம்புகள் புற்றினுள் ஓடி ஒளிந்து கொள்ளும்.

*பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ*
*வெருவிப் புனம் துறந்த வேழம் இருவிசும்பில்*
*மீன் வீழக் கண்டஞ்சும் வேங்கடமே*

குறவர்கள் ஒரு கையில் வில்லும், மறுகையில் தீப்பந்தமும் கொண்டு யானைகளை விரட்டும் போது வயல்களை விட்டு மருண்டு வெளியேறும் யானைகள் வானில் இருந்து விழும் எரிமீன்களை குறவர்கள் எறிந்த தீப்பந்துகள் என அஞ்சி நடுங்குவதாக பொய்கை ஆழ்வார் அருளுகிறார்.

**மத வேழம் :**

*பெருகு மத வேழம் மாப்பிடிக்கு முன்னின்று*
*இரு கணிள மூங்கில் வாங்கி அருகிருந்த*
*தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்*

மதநீர் பெருகி வழிந்து திருமலையிலே திரியும் ஆண் யானை ஒன்று தம்முடைய இணையான பெண் யானையைக் கண்டவுடன் அதனருகே நின்று காதலு

டன் அருகேயிருந்த இரண்டு கணுக்களை உடைய இளம் மூங்கில் குருத்தை துதிக்கையினால் பிடுங்கி தேனிலே தோய்த்து பெண் யானைக்கு கொடுக்கும் என பூதத்தாழ்வார் அருளுகிறார்.

*புரிந்து மத வேழம் மாப்பிடியோடூடித்*
*திரிந்து சினத்தால் பொருது விரிந்த சீர்*
*வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே*

பெண் யானை ஒன்றுடன் கலந்திருந்த மதநீர் பெருகிய ஆண்யானை திடீரென தன் இணையுடன் ஊடல் கொண்டதாய் கோபம் தலைக்கேறி வெறியுடனே திருமலைக் காடுகளில் திரியும் வேளையில் அங்குள்ள மரங்களிலும் பாறைகளிலும் கோபம் தீர்க்கும் விதமாக தம்முடைய தந்தங்களை வேகமாக மோதும் போது தந்தங்களில் இருந்து வெண்மையான முத்துக்கள் உதிரும் படியான வேங்கடமலை என பேயாழ்வார் வர்ணிக்கிறார்.

**வணங்கும் களிறு :**

*புகுமதத்தால் வாய்ப் பூசிக் கீழ் தாழ்ந்து அருவி*
*உகுமதத்தால் கால் கழுவிக் கையால் மிகுமதத்தேன்*
*விண்ட மலர்கொண்டு விறல் வேங்கடவனையே*
*கண்டு வணங்கும் களிறு*

திருமலையில் வாழும் யானை தம்முடைய மத்தகத்திலே அருவிபோன்று பெருகி வழிந்து வாயினுள் நுழையும் மத நீரினால் வாயினை சுத்தி செய்தும், மேலும் வழியும் மதநீரினால் கால்களை சுத்தி செய்து கொண்டும், திருமலையில் உள்ள தேன் நிறைந்து வழியும் மலர்களைத் தேர்ந்தெடுத்து துதிக்கையினால் பக்தியுடன் பறித்துக்கொண்டு திருவேங்கடமுடையான் திருக்கோயிலுக்குச் சென்று அவனை வணங்கி மலர்களால் அர்ச்சனை செய்வதை பேயாழ்வார் அருளுகிறார் .

**முகில்குத்தும் களிறு :**

*களிறு முகில்குத்தக் கையெடுத்தோடி*
*ஒளிறு மருப்பொசிகை யாளி பிளிறி*
*விழ கொன்று நின்றதிரும் வேங்கடமே*

திருமலையில் தவழுகின்ற கருத்த பெரிய மேகங்களைத் தம்முடைய எதிரி யானை என மயங்கிய யானை ஒன்று கடும் சினம் கொண்டு வெகுவேகமாக துதிக்கை உயர்த்தி பிளிறிக்கொண்டு மேகங்களை தந்தங்களினால் குத்துவதற்கு ஓடும். இதனைக் காணும் யாளி எனும் மிருகம் யானை தம்மைத் தாக்குவதற்கு வருகிறதோ?எனக் கோபம் கொண்டு அந்த யானையினைத் தாக்கி தந்தங்களை முறித்து வயிற்றினைக் குத்திக் கிழித்து அந்த யானை மரண ஓலமிட்டு பிளறி மண்ணில் சாயும் விதமாக திருமலையே அதிரும்படியாக யானைக்கும் யாளிக்கும் போர் நடைபெறும் திவ்யதேசம் திருமலை என அருளுகிறார் பேயாழ்வார் .

*திணரார் மேகம் எனக் களிறு சேரும்*
*திருவேங்கடத்தானே*
*திணரார் சார்ங்கத்து உனபாதம் சேர்வது*
*அடியேன் எந்நாளோ?*

சார்ங்கவில்லினைக் கைக்கொண்ட திருவேங்கடவன் திருவடிகளில் சரணாகதி செய்வதற்கான நாளினை எண்ணி ஏக்கம் கொண்டு பிரார்த்தனைச் செய்கிறார் நம்மாழ்வார்.

எம்பெருமானுக்கு சமர்ப்பிப்பதற்காக பொய்கையில் இறங்கி தாமரை மலரினைப் பறித்த கஜேந்திரனின் காலினை முதலை ஒன்று பற்றி இழுக்க பல வருட போராட்டத்தின் முடிவில் கஜேந்திரன் பெருமாளின் திருவடிகளில் சரணமென துதிக்கை உயர்த்தி ஆதிமூலமே காத்தருள்க எனப் பிளிறி அழைக்க எம்பெருமானும் கருடப்பறவையின் மீது ஆரோகணித்து விரைந்து வந்து சக்ராயுதத்தால் முதலையினைக் கொன்று கஜேந்திரனைக் காத்து அருள்வதை திருவேங்கடவன் விஷயத்திலும் திருமங்கையாழ்வார் அனுபவித்து “திண்கைம்மா துயர் தீர்த்தவன் திருவேங்கடம் அடை நெஞ்சே” என அருளுகிறார் .



## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப் படுத்தவும். மேலும்,** chiefeditortpt@gmail.com **எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.**

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.

# கான மூர்த்தியை கானத்தால் வழிபடுவோம்



**ஸ்ரீநிவாச கத்யம்**

எம்பெருமானுக்கு மிகவும் உகந்தவற்றுள் கான கைங்கரியமும் ஆகும். இக்கலியுகத்தில் அவனை அடையும் மார்க்கம் ஆகிறது சங்கீதம். எல்லா திவ்ய தேசத்து எம்பெருமான்களும் பல ராகங்கள் கேட்டு அனுபவித்திருந்தாலும் நம் திருவேங்கடமுடையான் கேட்டு அருளியதோ மிகவும் அதிகமான ராகங்கள். அவை என்னென்ன ராகங்கள் என்பதை ஸ்ரீநிவாச கத்யம் வாயிலாகச் சற்று அனுபவிப்போம் வாரீர்.

**ராக வரிசையில்...**

நாட்டை, ஆரபி, பூபாலம், பிலஹரி, மாயா மாள கொளை, அஸாவேரி, ஸாவேரி, சுத்த ஸாவேரி, தேவ காந்தாரீ, தன்யாசி, பேகட, ஹிந்துஸ்தானி, காபி, தோடி, நாட்டைக்குறிஞ்சி, ஸ்ரீ ராகம், ஸஹானா, அடாணா, ஸாரங்கி, தர்பார், பந்துவராளி, கல்யாணி, பூர்வ கல்யாணி, யமுனா கல்யாணி, ஹுசேனி, ஜன் ஜோடி, கௌமாரி, கன்னட, கரஹப்ரியா, கலஹம்ச, நாதநாமக்ரியா, முகாரீ, புன்னாகவராளீ, காம்போதி, பைரவி, முதுகுல காம்போதி, ஆனந்த பைரவி, சங்கராபரணம், மோஹனம், ரேகுப்தீ, ஸௌராஷ்ட்ரம், நீலாம்பரீ, குணக்ரியா, மேககர்ஜநீ, ஹம்ஸத்வநி, யோகவராளி, மத்யமாவதி, செஞ்சுருட்டி, சுருட்டி, த்விஜாவந்தி, மலயாம்பரீ, பரசு, தநாஸரீ, தேசிக தோடி, ஆஹிரி, வஸந்தகொளீ, கநகாங்கி, ரத்னாங்கி, கானமூர்த்தி, வநஸ்பதி, வாசஸ்பதி, தாநவதி, ரூபவதீ, மாநரூபி, ஸேநாபதி, ஹனுமத்தோடி, தேநுகா, நாடகப்ரியா, கோகிலப்ரியா, காயகப்ரியா, வகுளாபரணம், சக்ரவாகம், ஸூர்யகாந்தி, ஹாடகாம்பரீ, ஜங்காரத்வநீ, நடபைரவி, கீரவாணி, ஹரிகாம்போதி, தீரசங்கராபரணம், நாகாநந்தநீ, யாகம்ரியா, விஸ்ருமர ஸரஸகான ரஸேத்யாதி, ஸ்ரீ ஸ்ரீ நிவாஸ: ஸுப்ரஸந்நோவிஜயதாம்.

***– திருமதி பிரேமா வரதன், புதுதில்லி, 98997 13565.***

இப்படிப்பட்ட ஏற்றமிகு ராகங்களில் ஒன்றான ஹம்ஸத்வனி என்ற ராகத்தின் விசேஷத்தைக் கீழே பார்ப்போம்.

**ஹம்ஸத்வனி ராகம்**

ஹம்ஸ – அன்னப்பறவை, த்வனி – வேத ஒலி (மகான்களின் வாக்கு). ஹம்சத்தைப் பற்றி ஆழ்வார்கள், ஆசாரியர்கள் பறக்கப் பேசி உள்ளார்கள். சாந்தோக்கிய உபநிஷத்–ஜனாச்ருதி என்கிற சத்ரியன் பெரும் செல்வந்தனாக இருந்தாலும், அன்னதானம் பல செய்திருந்தாலும் அவனுக்கு பிரம்ம ஞானம் என்பது சிறிதும் இல்லாமல் இருந்தது. பல்லன், பல்லக்ஷனென்கிற இரண்டு மகரிஷிகள் அவனிடத்தில் இரக்கம் கொண்டு இரண்டு ஹம்ஸ

ரூபிகளாய் அவன் சயனத்தின் மேலே பறந்து கொண்டு போகையில், பல்லன் என்கிற ஹம்ஸம் பல்லாக்ஷன் என்கிற ஹம்ஸத்தைப் பார்த்து "ஜானஸ்ருதி மஹா பிரபுவின் மேலே நிழல் படாதபடி கவனித்துப் போ" என்று சொல்ல, அதுக்கேட்ட அந்த ஹம்ஸம் "இவன் மேல் நிழல்பட்டால் வரும் கெடுதல் என்ன? இவன் ரைக்வரைப் போல் பிரம்ம ஞானியா?" என்று ஏளனமாகச் சொல்லியது.

அதுகேட்ட ஜனக்ருதி துக்கம் கொண்டவனாய், அந்த ரைக்வரைத் தேடிச்சென்று செல்வந்த செல்வம் சர்வ ஸ்வத்தையும் கொண்டு வந்து சமர்ப்பித்து பணிவுடன் வணங்கி அவரிடம் பிரம்ம ஞானத்தைப் பெற்றான். இப்படி கூரத்தாழ்வான் அருளிய சுந்தர பாஹு ஸ்தவம் ***''ப்ருங்கீ........வநக்ஷ்மாதரே''*** (சுலோகம் 13) சுந்தரத்தோளுடையான் எழுந்தருளி இருக்கிற திருமலையிலே மாலை நிகழும் படிகளை ராகதாளத்தோடு அனுபவிக்கிறார். ஹம்ஸ கதியானது தாளமாகவும், வண்டினம் முரல்வது சங்கீதமாகவும் ஆகா நின்றது. ஹம்ஸ தாளத்திற்குப் பொருத்தமாக வண்டு பாடா நின்றதாம். அந்த வண்டினம் முரல்வதை அனுசரித்து குயிற் பேடை தானும் உயரக் கூவா நின்றது.

கண்ணீரைப் பிரவாஹமாகப் பெருக்குவாரு முண்டே. அதுபோல் சிறந்த கொடிகளில் இன்றும் மகரந்தம் பெருகுகின்றதாம்.

உயர்ந்த சங்கீதத்தைக் கேட்டு ஸ்தம்பிப்பாரும் உண்டே. கண்ணபிரான் குழல் ஊதின போது மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து, ***''மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர, இரண்டு பாடும் துலுங்காப் புடை பெயரா, எழுது சித்திரங்கள் போல நின்றனவே''*** என்று மான்கள் ஸ்தம்பித்தன என்கிறார் பெரியாழ்வார்.

திருநெடுந்தாண்டகத்தில் திருமங்கை ஆழ்வார் தன் பாசுரத்தின் மூன்றாம் வரியில் ***''அன்னமாய் முனி வரோடு அமரரேத்த அருமறையை வெளிப் படுத்தவம் மான் தன்னை அமரரேத்த அருமறையை வளிப்படுத் தவம்மான் தன்னை''***என்று அருளிச் செய்கிறார்.

அதே போன்று ஸ்ரீநிவாச கத்யத்தில் வரும் மற்றொரு ராகமான "சௌராஷ்ட்ரம்" என்னும் ராகத் தில் அமைந்த ஸ்ரீஅன்னமாசார்யர் கீர்த்தனையில் ***''வீதுல வீதுல விபுடே கீனிதெ மோதமு தோடுத மொக் கரோ ஐநுலு''*** என்று அப்பரமனைச் சேவிக்கிறார்.

***''அதிகோ அல்அதிகோ ஸ்ரீஹறிவாசமு...''*** என்று திருமலைக் குறித்தும், ***''பிடிகிட தலம்ப்ரால பெண்ட்லி கூதுரு...''*** என்று ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசரின் கல்யா ணத்தில் ஒரு நிகழ்வையும் அன்னமய்யா மிகவும் அழகாக வர்ணிக்கிற பாடல் வரிகள் மத்யமாவதி ராகத்தில் அமைந்தவை.

கண்ணன் அன்று அங்கு வேணு காணும் செய் தான். இங்கு நம் ஸ்ரீநிவாசன் ஸ்ரீநிவாச கத்யத்தில் பல ராகங்களைக் கேட்டு ஸ்தம்பித்தான். பாடியது பக்தர்கள் ஆயிற்றே! நாம் எம்பெருமானை இசை யால் மகிழ்வித்து அருளைப் பெறுவோமாக!


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையானின் அக்ஷர தீபிகை**

# ஸப்தகிரி



மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்ற டைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப் பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர் களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் ஸப்தகிரி குறித்துக் கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.



# செப்டம்பர் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். சகோதரர்களுக்கு நன்மை உண்டு. நண்பர்கள்–உறவினர்கள் உதவுவர். குழந்தைகள் நல்ல முன்னேற்றம், நல்ல மதிப்பெண்கள் பெறுவர். வரவுக்கு ஏற்ற செலவு உண்டு. வேலைப்பளு அதிகம் ஆகும். இடமாற்றம் கிடைக்கும். மனைவிக்கு ஆரோக்யம் உண்டு. அலைச்சல் மூலம் வளர்ச்சி பெறும் மாதமிது.

**ரிஷபம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். யாத்திரை நன்மையைத் தரும். தொழில் வளர்ச்சி, கணவன்–மனைவி அன்யோன்யம், தனவரவு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். இளைய சகோதரருக்கு நன்மை உண்டு. மூத்த சகோதரன் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திருஷ்டியால் சிரமம் உண்டு. நல்ல முன்னேற்றமான மாதமிது.

**மிதுனம்**

தொழில் துறையில் அலைச்சல் அதிகமாகும். யாத்திரை செய்வீர். கணவன்–மனைவிக்குள் பிரச்சனை தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் உண்டாகும். குடும்பப் பிரச்சனைகள் தீரும். தூக்கமின்மை உண்டாகும். தாய்–தந்தையரின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. முயற்சி மூலம் வெற்றி பெறும் மாதமிது.

**கடகம்**

செலவினங்கள் அதிகமாகும். மனைவி, இளைய சகோதரன் ஆரோக்கியத்தில் கவனமும், புது முயற்சிகளில் எச்சரிக்கையும் தேவை. வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. மாணவர்கள் அக்கறையுடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற இயலும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**சிம்மம்**

மனைவி ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிடிவாதமாகக் காரியங்களில் வெற்றிக்கிட்டும். குடும்பத்தில் சிறு சலசலப்புகள் ஏற்பட்டுப் பின் சரியாகும். வீடு, மனை, வாகனம் வாங்குவதைத் தவிர்க்கவும். செலவுக்கேற்ற வருமானம் உண்டு. சுபகாரியங்களில் சிறு தடை ஏற்பட்டு பின் சரியாகும். மூட்டுவலியால் அவதி உண்டாகும். தாமதமாக வெற்றி பெறும் மாதமிது.

**கன்னி**

திருஷ்டியின் மூலம் காரியதாமதமாகும். கணவன்–மனைவிக்குள் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பின் சரியாகும். தொழில் துறையில் எதிர்பார்த்த நல்ல மாற்றம் கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் கிட்டும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் பெறும் மாதமிது.

**துலாம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழிலில் நல்ல லாபம் கிட்டும். புதிய முயற்சிகள் செய்யலாம். மனைவி ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிட்டும். வீட்டில் மின்னணு, மின்சாரம், வாகனங்கள் பழுது ஆகும். செலவுக்கேற்ற வருமானம் கிட்டும். ஜீரண உறுப்பில் கோளாறு ஏற்பட்டுப் பின் சரியாகும். பணவரவு தரும் மாதமிது.

**விருச்சிகம்**

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் உண்டாகும். தொழில் துறையில் நல்ல லாபம் உண்டு. திருஷ்டியால் சிறு தடைகள் ஏற்பட்டுப் பின் சரியாகும். குழந்தைகளின் ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. கர்ப்பிணிப் பெண்கள் பிரயாணங்களைத் தவிர்க்கவும். தொழிலில் பணபரிவர்த்தனை வேண்டாம். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**தனுசு**

தொழில் துறை வளர்ச்சி, தெய்வ அருள், தனலாபம் மற்றும் வேலைப்பளுவுக்கு ஏற்ற ஊதியம் உண்டு. தாய் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனை உண்டு. ஆரோக்கியத்திற்கு ஏற்ற மருத்துவம் கிட்டும். பூர்வீகச் சொத்துக்களில் வில்லங்கம் தீரும். கூட்டமான இடங்களுக்கு செல்ல வேண்டாம். தெய்வ பலத்தால் யோகம் பெறும் மாதமிது.

**மகரம்**

தைரியமாகக் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. கடன் பரிவர்த்தனைத் தவிர்க்கவும். உடல் உஷ்ணமடையும். கணவன்–மனைவி சிறுபிரச்சனை ஏற்பட்டு சரியாகும். தொழில் துறையில் வேலைப்பளு அதிகமாகும். குழந்தைகளுக்கு முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல முன்னேற்றமான மாதமிது.

**கும்பம்**

தொழிலில் தனவரவு உண்டு. யாத்திரை செய்வீர். பிரயாணத்தில் எச்சரிக்கை தேவை. கணவன்–மனைவி நல்ல அன்யோன்யம் உண்டு. தொழிலில் எதிர்பார்த்த கடன் கிட்டும். நண்பர்–உறவினர்களால் தனலாபம் உண்டு. வீடு, வாகனம் பழுதுக்கான செலவு செய்வீர். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். குழந்தைகளால் சந்தோஷம் பெறும் மாதமிது.

**மீனம்**

உடல் வலியால் அவதி உண்டு. தொழில் துறையில் வேலைப்பளு அதிகமாகும். நண்பர்–உறவினர்கள் உதவுவர். தொழில் பாக்கிகள் வசூலாகும். புதிய முயற்சிகளில் வெற்றிக் கிட்டும் வாழ்க்கைத் துணைவரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குழந்தைகள் ஆரோக்கியம் நன்கு அமையும். எல்லா துறைகளில் தாமதமாக வெற்றி கிட்டும். தெய்வ பலத்தால் முன்னேறும் மாதமிது.

நீதிக்கதை

# பக்தியே முக்கியம்



பெருமாளை "நாராயணா, நாராயணா" என்று சொல்லியபடி பக்தியில் இருப்பவர் நாரதர். ஒருமுறை பக்தியில் சிறந்தவன் யார்? என்ற கர்வம் வந்து விட்டது.

ஒருநாள் நாரதர் பகவானிடம், "பெருமாளே! நான் எப்பொழுதும் உங்கள் நாமாவையே சொல்லிக் கொண்டு உள்ளேன். என்னை விட பக்தியில் சிறந்தவர் யார்?" என்று ஆணவமாகக் கேட்டார்.

சிரித்துக் கொண்டே நாராயணன், "நாரதா! அதோ தெரிகிறது பார் ஒரு கிராமம். அங்கே ஒரு விவசாயி உள்ளான். அவனை ஒரு நாள் முழுக்கக் கவனித்து விட்டு வா... பின்னர் பக்தியில் சிறந்தவர் யார் என்று சொல்லுகிறேன்" என்றார்.

நாரதரும் அங்கு விடியற்காலையிலே சென்றார். அப்பொழுதுதான் அந்த விவசாயி தூக்கம் நீங்கி எழுந்தான். "நாராயணா" என்று சொல்லி ஒரு கும்பிடு போட்டு, பரபரவென வேலைகளைத் தொடங்கினான்.

மாடுகளை அவிழ்த்து, கூளங்களை அள்ளினான். தொழுவத்தைக் கழுவி விட்டு, மாடுகளுக்கு புல், நீர் இவற்றை வைத்தான். முகம் கழுவி, திருமண் இட்டுக் கொண்டு, வயலுக்குச் சென்றான். வயலில் உழவு நடந்து கொண்டிருந்ததால் அவனால் ஒரு நிமிடம் கூட சும்மா இருக்க முடியவில்லை.

வேலைகளை முடித்தவன், மனைவி கொடுத்த கஞ்சியைக் குடித்து, சிறிது நேரம் ஓய்வெடுத்தான். பின் மாலை வரை வேலை சரியாக இருந்தது. இருட்டியவுடன் வீடு திரும்பினான். மாடுகளுக்கு தண்ணீர் காட்டி, புல் போட்டான். பின் குளித்து முடித்து, இரவு உணவு முடித்து, மனைவி, குழந்தைகளுடன் சிறிது நேரம் சிரித்து பேசினான்.

இரவு வந்தது. "நாராயணா" என்று சொல்லி ஒரு பெரிய கும்பிடுப் போட்டு தூங்கப் போனான். நாரதருக்கு ஒன்றும் புரியவில்லை. பெருமாளிடம் நடந்ததைச் சொன்னார். பெருமாளும் சிரித்துக் கொண்டே அது கிடக்கட்டும். இதோ எண்ணெய் நிரம்பி உள்ள இந்த விளக்கை எண்ணெய் சிந்தாமல் ஒரு தடவை இந்த வைகுண்டத்தைச் சுற்றி வா... நாரதரும் எண்ணெய் நிரம்பிய விளக்கை, தலையில் சுமந்து கொண்டு கிளம்பினார். பார்த்து, பார்த்து நடந்தார். பெருமாளிடம் எண்ணெய் ஒரு சொட்டு சிந்தாமல் வந்து சேர்ந்தார். பார்த்தார் பெருமாள், நாரதரின் முகத்தில் கர்வம் வந்தது. எண்ணெய் ஒரு சொட்டு சிந்தவில்லையே... "அது சரி, நாரதா! எண்ணெயைக் கொட்டாமல் கொண்டு வந்து விட்டாய். அந்த சமயம் எத்தனை முறை என்னை நினைத்தாய்.

திடுக்கிட்டார் நாரதர். "இப்பொழுது புரிந்ததா நாரதா! அந்த விவசாயி எவ்வளவு பிரச்சனைகளுக்கு இடையில் என்னை இரண்டு தடவை நினைக்கிறான். ஆம்... உண்மைதான். இதிலுள்ள நீதி : பக்தியை அளக்கக்கூடாது.


- திரு. சிவராமன், உள்ளகரம், 98412 62116.

# பல்சுவைப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்





துர்கை அம்மனுக்கு வண்ணம் தீட்டி அவள் அருளைப் பெறலாம் வாருங்கள்!



பாதையைக் கண்டு பிடிக்கலாம் வாருங்கள்!

இந்தச் சிறுமி பொம்மை கொலு முன்னர் தீபங்களை ஏற்றுவதற்கு தன் கையில் தீபங்களை ஏந்திக் கொண்டு செல்கிறாள். அச்சிறுமிக்குத் தகுந்த பாதையைக் காட்டி உதவிடுங்கள்!!









இங்கு கொடுக்கப்பட்டுள்ள சித்திரங்களை நவராத்திரியின்போது சிறுமிகளுக்கு கொடுக்கும் பொருட்கள், வாமனரோடு தொடர்புடையவை என வரிசைப் படுத்திடலாம். வாருங்கள்!!

**விடை :**

வாமனருடன் தொடர்புடையவை - 2,4,6,8

நவராத்திரியில் சிறுமிக்கு வழங்க - 1,3,5,7

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-38

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. திருவேங்கடவனைத் தரிசிக்க 10,000 கண்கள் வேண்டும் என்றவர் ..............................................
2. திருமலையப்பன் அக்ஷர வடிவில் நம் இல்லத்திற்கே வந்து எதன் மூலம் தரிசனமளிக்கிறார் ..................
3. வேங்கடம் என்பதன் பொருள் ..............................................
4. அனந்தபத்மநாப விரதம் கொண்டாடப்படும் நாள் ..............................................
5. திருமலையில் நாணயங்களை கணக்கிடும் சேவையின் பெயர் ..............................................
6. இடவெந்தை மேவிய எம்பிரான் எனப் பாசுரமிட்டவர் ..............................................
7. ஸ்ரீசைலபூர்ணர் எனும் திருநாமம் உடையவர் ..............................................
8. திருமலையப்பன் தன் உள்ளத்திலேயே தரிசனமளித்தார் எனக் கூறிய ஆழ்வார் ..................................
9. அன்னப்பறவையோடு தொடர்புடைய ராகத்தின் பெயர் ..............................................
10. ஆங்கிலேயர்களிடமிருந்து திருமலையின் நிர்வாகப் பொறுப்பினைப் பெற்றவர்கள் ................................
11. அதிகார சங்கிரகம் எனும் பிரபந்தத்தை அருளியவர் ..............................................
12. வேங்கடவனை வேதப்பொருளாகக் குறிப்பிடும் ஆழ்வார் ..............................................
13. தசாவதாரத்தில் வாமனரின் அவதார நட்சத்திரம் ..............................................
14. திருமலையில் இராமாநுஜர் பெயரில் குளத்தை நிறுவியவர் ..............................................
15. திருவேங்கடவனுக்கு திருமலையில் நிலத்தினை வழங்கிய பெருமாள் ..............................................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.09.2025.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

| | |
|---|---|
| நவராத்திரி நாயகிகள் | |
| நவராத்திரியில் புத்தகங்கள் வைத்து கொண்டாடும் பூஜை | |
| சரஸ்வதி தேவியின் திருக்கரங்களில் இருக்கும் இசைக்கருவி | |
| சரஸ்வதி தேவி அமர்ந்திருக்கும் பறவை | |
| ஆய கலைகளின் அரசியாகத் திகழ்பவள் | |
| சரஸ்வதி பூஜை கொண்டாடப்படும் திருநட்சத்திரம் | |
| பிரம்ம தேவரின் பட்டத்து ராணி | |
| சரஸ்வதி தேவி தன் இரு கரங்களில் தாங்கி இருப்பது | |



குழந்தைகளே! கல்வி கலையை நமக்கு பிரசாதிக்கும் அன்னை கலைவாணியை நமஸ்கரிப்போம்.


**விடைகள்**

1) லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி, 2)சரஸ்வதி பூஜை, 3) வீணை 4) அன்னப்பறவை, 5) கலையரசி, 6) மூலம் நட்சத்திரம், 7) சரஸ்வதி தேவி, 8) ஓலைச்சுவடி, ஜப மாலை.

## கணித விளையாட்டு

இங்கு புத்தகத்தில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான எழுதுகோல்களின் எண்ணிக்கை உள்ள விடையைப் பொருத்துக

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 25-4 | 16+6 | 28-13 | 60-40 | 15+10 |




**விடைகள்**

1) i, 2) iii, 3) v, 4) ii, 5) vi



குழந்தைகளே! நலமாக இருக்கிறீர்களா? நான் உயரப் பறப்பேன். எங்கிருந்தாலும், எவ்வளவு கீழே என் இரை இருந்தாலும் ஒரு வினாடியில் அதை கொத்தி எடுப்பேன். பறவைகளுக்கெல்லாம் நான் தான் அரசன்.

திருமாலின் வாகனம், எல்லா வைணவ திவ்ய தேசங்களிலும் திருமாலுக்கு எதிரில் இருப்பேன். விஷ்ணு ஆலய விழாக்காலங்களில் என் மீது ஸ்வாமி கட்டாயமாக எழச் செய்து திருவீதி உலா வருவர்.

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...

விடை : கருடன்

சித்திரக் கதை

# குருவே சிறந்த வழிகாட்டி

கதை மூலம் :கலாரத்னா டாக்டர். கே. ரவிச்சந்திரன்
சித்திரம் :திரு.து.சிவாஜி




குழந்தாய்! பசுக்கள் தயையின் வடிவமானவை. அவற்றின் கன்றுகளுக்கும் அதே குணம் தானே. அவை தம் கருணை குணங்களால் தம் பசியைப் போக்கிக் கொள்ளாமல் உனக்காக அதிக பால் நுரையைச் சுரக்கலாம் அல்லவா. எனவே கன்றுகளின் பால்நுரையை அருந்துவது நல்லதல்ல.
சூரியன் அஸ்தமனமாகி இருள் சூழ்ந்தது. பசுக்களும் வந்துவிட்டன. ஆனால் உபமன்யு வரவில்லையே?
உபமன்யுவைத் தேடிக் கொண்டு குரு சென்றார்.
குழந்தாய்! உபமன்யு... உபமன்யு...
குருதேவா! இந்த கிணற்றின் உள் உள்ளேன்.
உபமன்யு! எப்படி கிணற்றில் விழுந்தாய்?
குருதேவா! தாங்கள் பால் நுரையைக் கூட அருந்துதல் கூடாது எனக் கூறியதால் உபவாசம் இருந்தேன். பகலெல்லாம் பசுக்களை மேய்த்து விட்டு மாலையில் ஆசிரமத்திற்கு வருவேன். இப்படியே நாட்கள் கடந்தன. ஆனால் அதீதப் பசியைத் தாங்க முடியாமல் அர்க இலையைத் தின்றேன். அந்த இலையைத் தின்றவுடன் என் உடல் நஞ்சாகி கண்கள் பறிபோனது. ஆனாலும் பசுக்கள் நடக்கும் போது வருகின்ற ஒலியினைப் பின்பற்றி ஆசிரமத்திற்கு வந்து கொண்டிருந்தேன். ஆனால் இன்று எதிர்பாராமல் இக்கிணற்றில் விழுந்து விட்டேன். பசுக்கள் பாதுகாப்பாக ஆசிரமத்திற்குச் சென்றனவா? இல்லையா? என்ற ஆலோசனையில் இருந்தேன். அதற்குள் தாங்களே வந்து விட்டீர்கள்.
குழந்தாய்! இப்போது உனக்கு மந்திர உபதேசம் செய்கிறேன். அஸ்வினி தேவர்கள் தோன்றி உனக்கு பால் வழங்குவார்கள். உனது கண் பார்வை மீண்டும் திரும்பக் கிடைத்துவிடும்.
அபிமன்யுவின் முன்பாக அஸ்வினி தேவர்கள் தோன்றினர்
குழந்தாய்! இப்பாலினை அருந்து
அஸ்வினி தேவர்களே! முதலில் என் குருவிற்கு சமர்ப்பிக்காமல் நான் ஏற்க மாட்டேன்
குழந்தாய் உபமன்யு! உன் பக்தியை மெச்சினேன். நீ மீண்டும் கண் பார்வையைப் பெறுவாய்
நான் வைத்த சோதனை களில் வெற்றி அடைந் தாய். நான் கற்ற வேத சாத்திரங்களை உனக்கு கூறுகிறேன்
குருதேவா! யாவும் தங்களின் அருள். தாங்கள் பார்வைக்குக் கடினமானவராக இருந்தாலும் மென்மையான குணம் கொண்டவர் என்பதை அறிந்தேன். பெரும்பேறு பெற்றேன்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/– ☐ ரூ.2,400/–(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/– ஆயுள்சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.–யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



கர்நாடக மாநிலம் மைசூர் மஹாராஜா அரண்மனையில் தசரா உத்ஸவத்தை முன்னிட்டு நடத்தப்படும் துர்கா பூஜையின் மிக அற்புதமான சித்திரம் இது. 1935–1945க்குட்பட்ட அன்றைய ஓவியர் திரு. சுப்ரமணிய ராஜு அவர்களால் வரையப்பட்ட வண்ணமயமான ஓவியம்.

நன்றி : மைசூர் அரண்மனைக்குழு, 2007

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-08-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.



22-09-2025 தேவி நவராத்திரி ஆரம்பம்